

# இதழ் மலர்கள்

உவமைக்கவிஞர்

## சுரதா

மணிவாசகர் பதிப்பகம்

# இதழ் மலர்கள்

உவமைக்கவிஞர்

**சுரதா**

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : 23, நவம்பர், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041

**விலை : ரூ. 75.00**

மொத்தப் பக்கங்கள் : 168

அளவு : (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1765



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்
அண்ணாமலைப் பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில்
அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.
**'வள்ளுவம்'** இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
**'தமிழவேள்'** என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
**'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள்
வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
**'பதிப்புச் செம்மல்'** என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடங்கள்:

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி,
**சிதம்பரம்** - 608001.
**✆:04144-230069**

31, சிங்கர் தெரு,
பாரிமுனை,
**சென்னை** - 600108.
**✆:044-25361039**

6, சிவஞானம் தெரு,
**தி. நகர்,**
**சென்னை** - 600017.
**✆:044-24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி,
**மதுரை** - 625001.
**✆:0452-2622853**

15, ராஜ வீதி,
**கோயமுத்தூர்** - 641001.
**✆:0422-2397155**

296/134, செரி சாலை,
**சேலம்** - 636007.
**✆:0427-3207722**

28, நந்தி கோயில் தெரு,
**திருச்சி** - 620002.
**✆:0431-2706450**

---

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# மனதிற்கு மகிழ்வு

மணிவாசகர் பதிப்பகத்தின் வெளியீடாக உவமைக் கவிஞரின் 28 நூல்கள் மிகச்சிறந்த முறையில் அழகான வடிவில் வெளியாகிறது.

அந்த 28 நூல்களில் உவமைக்கவிஞர் கவியரங்கத்தில் பங்கேற்று பாடிய தலைமைக் கவிதை, கவிஞர்கள் அறிமுகக் கவிதை ஆகியவற்றைத் தொகுத்து **'அரங்கத்தில் அறிமுகம்'**, **'தோரண வாயில்'** என்று இரண்டு தொகுப்புகளை தொகுத்தளித்ததைப் போன்றே, நாளிதழ், வார, மாத இதழ்களில் வெளியான அவரது படைப்புகளின் தொகுப்பே இந்த **'இதழ் மலர்கள்'**.

கவியரங்கக் கவிதைகளும், இதழில் வெளியாகியுள்ள கவிதைகளும் இதுவரை வெளிவராதவைகளாகும்.

தமிழ்நாட்டின் அனைத்து வார, மாத, நாளிதழ்களிலும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர் இதழ்களிலும் வெளியாகியுள்ள பேட்டிகள், **'உண்மையைச் சொல்லுகிறேன்'**, **'வினாக்களும் சுரதாவின் விடைகளும்'** என்ற தலைப்பில் நூலாகவும், கவிதைகள் மட்டுமே **'இதழ் மலர்கள்'** என்ற பெயரில் வெளியாகிறது.

நிறைய கவிதைகளை இதழ்களில் கவிஞர் எழுதியிருந்தாலும் எமக்குக் கிடைத்த கவிதைகள் மட்டுமே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இவற்றைப் போன்று மூன்று நான்கு மடங்கு கவிதைகள் கிடைக்கப் பெறவில்லை.

இவ்வெளியீட்டிற்குப் பிறகு நண்பர்கள், பழைய ஏடுகளை பாதுகாத்து வைத்திருப்பவர்களை அணுகி கிடைக்கப் பெற்றால் எதிர்காலத்தில் அவைகளைத் தொகுத்து வெளியிட வாய்ப்புண்டு என்ற நிலையில் ஓரளவுக்காவது, இந்த அளவிற்காவது இதழ்களில் வெளியான அவரது எழுத்துக்கள் கிடைத்தனவே என்பது மனதிற்கு மகிழ்வைத் தருகிறது.

என்றென்றும் அன்புடன்
**-சுரதா கல்லாடன்**

## அழகின் கூத்து!

முல்லையிலே சிரிக்கின்றாள்! வானமென்னும்
முகம்பார்க்கும் கண்ணாடி மேனிஎங்கும்
நெல்நிறத்துப் பட்டாடை போர்த்துகின்றாள்
நீலமலர் இதழ்வடிவில் அசைந்து, பச்சைப்
புல் இனத்தில் ஒளிகின்றாள் அருவியாகிப்
புனல்வழித்துச் சிரிக்கின்றாள். அந்தரத்து
வில்வளைவில் கூத்திட்டு, கரும்புத் தோளின்
மணிவரியில் முத்துருவம் அடைகின்றாள். செங்
கண்ணவிழ்த்து நெளிகின்றாள். இதழ்வரப்பில்
கதிர்பரப்பி அந்தியினைப் படைத்து, காதல்
உண்ணுகின்றாள். படைக்கருவி முகத்தை ரத்த
ஊற்றாக்கிக் களிக்கின்றாள். காந்தட்பூவின்
வண்ணத்து இளமை விரற்கொத்தில், தங்க
மயில் நடனம் வைக்கின்றாள். உதடிமைத்து
எண்ணத்தை இசையாக்கி, வானம்பாடி
எடுத்துண்ணும் தூற்றலிலே மணியாகின்றாள்

தன்நிறத்தை இவ்வுலகப் பொருளின்மேலே
தெளித்துவிடல் வேண்டுமென்னும் பெருந்துடிப்பால்
மின்உதயம் சரிக்கின்றாள். குமரித்தென்றல்
விளைவு அவள் இதயப்பூந்தோட்டம். முத்தம்
தின்னுதற்குத் தளிர்க்கின்றாள். கண்கலைத்துச்
சீர்திருத்தம் உதிர்க்கின்றாள். ஒளி மன்றத்தில்
இன்னஇடம் கலை! கவிதை இதுதான்! காதல்
என்பதுவும் இவ்விடந்தான். எனவிளக்கிக்
காட்டுகிறாள் பாண்டிநாட்டரசி! ஆலங்
கனிநிறத்து இதழ் ஊன்றவரும் என்மீது
வாட்டத்துப் பார்வையினை அனுப்புகின்றாள்
வாரி உண்ணப் போகையிலே, தொடாதே என்று
ஆட்டிவைத்து மறைகின்றாள். மீண்டும்மீண்டும்
அன்புவரும் இருட்டும். பின்அமுதம் தந்து
ஊட்டத்தைக் கொடுக்கின்றாள். அழகு என்னும்
ஒளிமடந்தை! என்உலகம் அவள்தான் காண்பீர்.

இதழ் : 'சிவாஜி' - 6.1.1946

# ஒதுங்கிய பார்வை

இரண்டொரு நாள் தங்கிவிட்டு வந்துவிடலாம் என்றுதான் முல்லைவனம் ஆரம்பத்தில் நினைத்தான். வீட்டரசியிடம் நெஞ்சைக் கலவைப்படுத்தாமல் சக்கரம் சுழலுமா? மனைவியிடம் இச்சேதியை ஒட்டினான். அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

“இருந்தும் இருந்தும் என் ஒரே தங்கச்சிக்குக் கல்யாணமாம்! ரெண்டு பொறக்கு முந்தியே போயிருந்து, எல்லாக் காரியங்களையும் ஏந்தி நடத்த வேண்டிய நீங்களே இப்படி நாலாங்காலு அஞ்சாங்காலு மாதிரி பேசுறீங்க. ஒங்க, தங்கச்சி விஷயம்ணா இப்படிச் சொல்லுவீங்களா?’’ என்று குறம் வைத்தாள்.

முல்லைவனம், அவளிடம் பீமவசனம் நடத்த விரும்பவில்லை.

கொழுந்தியின் திருமணம். அதிலும் முதற்சகலன். காக்காய்க் குளிப்பாக வந்துவிட்டால், பார்க்கின்றவர்களும் முடக்கம் சொல்வார்கள்... இவைகளை எல்லாம் நினைத்துத்தான், பத்து நாட்களுக்கு முந்தியே பெண்டாட்டியுடன் கடாரங் கொண்டானுக்குப் பறந்து விட்டான்.

திருமணம் ஏக தடபுடல்.

ஒரு வாரமாக, நொடி நேரம் கண்சாத்த வேண்டுமே! அவ்வளவு சிரமம். பூராப் பொறுப்பும் முல்லைவனத்தின் முடிமீதே குந்தியது. என்ன செய்வான்? தெரவசு இல்லாதவன் மாதிரியிருக்க, வெளி ஆசாமியா?

ஒருவாறாக எல்லாக் காரியங்களும் அடங்கின.

கும்பல் கலகலக்க ஆரம்பித்தது. சில சம்பந்திச் சாக்குகள், பொக்கங்கள் பேசிக் கொண்டே, விருந்துச் சாப்பாட்டை விளாச ஆரம்பித்துவிட்டன. இல்லையா வயிறொட்டிகள்!... இன்னும் ஒரு

கிழமையிலிருந்து வயிற்றை பீரங்கியாக்கிக் கொண்டு சொல்வோமே என்று மூட்டைப் பூச்சிகள் போல் கல்யாண வீட்டில் ஒட்டிக் கொண்டன.

முல்லைவனத்திற்குக் கால் கொள்ளவில்லை. நான்கு பகல் அவிழ்ந்தால், ஆபீஸில் அவன் கையெழுத்து நடமாட வேண்டும்.

தொலைவோ அதிகம். ஊர்போய்ச் சேர்வதற்குள், ரயில் இரண்டு இரவுகளைச் செலவழித்துக் கொள்ளும். எனவே உடனே எழும்ப வேண்டும் என்று முடிவு கண்டான்.

கொல்லைப்புறத்தில் அவன் மனைவி, நாத்தியைச் சிங்காரித்துக் கொண்டே, தனக்குத் தெரிந்த நினைப்புகளையெல்லாம் சின்னாங்காக அவளிடம் உதறிவிட்டு, ஒரே பெருக்களம் அமைத்துக் கொண்டிருந்தாள்.

முல்லைவனம், வெடுக்கென்று அங்கே வந்தான். அவன் வருகையைத் தெரிந்து கொண்டு, “இதுக்குள்ளே என்ன அவசரமாம்! பொறந்த வீட்டுக்கு வந்தா, தேன் சிட்டுப் போலப் பறந்துட முடியுதா'' என்று சரளி வரிசை பிடிக்க ஆரம்பித்தாள்.

அவள், கட்டை போடுவதைத் தெரிந்துகொண்டான். “சரி, நான் போய்க் கடிதம் நடத்துகிறேன். வரலாம். இங்கே இன்பங் கலையாமல் பார்த்துக் கொள்!'' என்று புறப்பட்டுவிட்டான்.

“ஓ சாமி!... கொஞ்சம் நவரு சாமி!!...'' என்ற குரல் அதட்டியதுந் தான் முல்லைவனம் திடீரென்று தூக்கம் பிரிந்து எழுந்தான்.

கடாரங் கொண்டனில் இருந்து இருநூறு கல் தொலைவைத் தாண்ட “தயிலா'' ஸ்டேஷனுக்கு ரயில் வந்துவிட்டதை விடியற்காலந் தான் கண்டான். சோம்பல் உரித்தான். கொட்டாவிகள் உதிர்ந்தன. ஆடை திருத்தினான்.

அந்த ஸ்டேஷனில் திருநாள் பார்த்துவிட்டுத் தேங்கிக் கிடந்த ஜனக்குப்பை, வண்டியை அடார்த்தியாக்கிவிட்டது.

இரவு பூராவும் சிலாவத்தாகப் படுத்துக்கிடந்த அவனை அந்த நெரிசல் குத்தியது.

திக்குமுக்கல். இறுக்கம். அந்தப் பிராயணமே ஒரே உளைச்சல்!

...சார்...கொஞ்சம் இந்தக் கெஞ்சடிப்பை அந்தக் கேரேஜிலிருந்த வாண்டுப்பயல்கள் கூட மறக்கவேயில்லை.

பயன்?

தான் தான் தப்பித்துக் கொள்ள வழிதேடிக் கொண்டதுதான் மிச்சம். நருள் கரையவேயில்லை. மக்கள் சருகுச் சித்திரங்களாக அமைந்தனர்.

ஒரே புழுக்கம்!

சோழ சாம்ராஜ்யத்தின் சுரங்கப் புழுக்கம். உடம்பில் மட்டுமல்ல; உள்ளத்திலும் கூட.

வண்டியின் பரப்பே, அசங்கியத்தின் கலப்படந்தான். திறவுசு உள்ளவர்கள்பாடுதான் கொஞ்சம் வசதி.

இந்த இக்கட்டில், முல்லைவனத்துக்குத் துளி இடவசதி கிட்டியது. ஏதோ அவன் உட்காருமிடம் மாத்திரம் கொஞ்சம் காற்றோட்ட வாக்கில் கிடந்தது.

இரண்டு வினாடிக்கெல்லாம் தயிலாவை விட்டு வண்டி, இரை தின்ற நாகம்போல எழும்பியது.

இடத்தை நகர்த்தினால் போச்சு. அதனால் முல்லைவனம் நினைவை நகர்த்தினான். திருமணத்தின் குதூகலத்தையும், சுற்றத்தாரின் சொட்டைத் தனங்களையும் நெஞ்சம் சுவை பார்த்தது.

சோம்பல் கலைய, பையிலிருந்த "சிலையின் நிழல்" என்ற நூலின் ஏடுகளைப் புரட்டினான். சிதைந்த எண்ணங்களைச் சரிப்படுத்திக் கொண்டே எக்களித்தான். கருத்துக்களில் குளிர்ந்தான்.

மனிதன் சந்திக்கும் முதல் இளமை 'சிந்தனை' என்று தனக்குள்ளே அடைத்துக் கொண்டு நிமிர்ந்தான். அருகில் நின்று கொண்டிருந்த பெண்ணின் மீது அவன் பார்வை தொத்தியது.

அந்தப் பெண் ஓர் ரதிக்கடல்! காயம் படாத நாட்களின் கலவை!! இந்த அதிர்ச்சியிலும், அவள் ஓர் கையில் நீர்ச்சீசாவை இடுக்கிக் கொண்டு பெஞ்சியின் மேல் நின்று கொண்டிருந்தாள். ஓர்கரம் ரயில் தட்டியில் பூங்கொடிபோல் சிந்திக் கிடந்தது.

நெருக்கம் மோத மோத, அவள், 'நகருங்கள்–நகருங்கள்' என்று கதறினாள். அப்போது அவள் பார்வையின் ஓரத்தில் தூற்றல் வழுக்கியது.

முல்லைவனம், அவள் இளமையின் அசைவுகளைப் பருகிக் கொண்டே இருந்தான்.

அடடா! அதில் எத்தனை ஜோதி ராஜ்யங்கள்....! இந்த ரீங்காரம் அவளுக்குச் சொந்தம்.

அவள், தன் விழித்தனிமைகளை வாள் ஏகேள்ாக அசைக்கும் போது அவன் அவைகளை விசாலக் கனவாக்க ஆரம்பித்து விடுவான்.

"...கோழிக்கு, உதயத்தின் உல்லாசம் தெரிந்தால்; கருக்கலைக் காதலியாக்கிக் கொள்ளுமா ?

மனைவி விஷயத்தில் நானும் ஓர் கோழிதான்! விழிகளுக்கு விருந்துதரும் இவள்... ஆஹா!... இவள் அழகின் ஜாதி! மானிட விரிவின் ரோஜா மின்னல்!... அடடே!... இவள் வாய் அவிழாத வண்டாக இருக்கின்றாளே!... ஹீம். போகட்டும். இவள் கரத்தின் ஸ்பரிஸம் எத்தனை உதயங்களை உண்டாக்கும். கொஞ்சம் குடிநீர் கேட்டுப் பார்ப்போமே!... இந்த அழகு வார்த்தால் அமுதந்தானே!... என்று நினைப்புகளைப் பிழிந்து கொண்டே இருந்தான்.

அந்நேரத்தில், ஓர் பரட்டைத் தலையன் அந்தப் பெண்ணிடம் குடிக்க நீர் கேட்டான். கொடுத்தாள். இப்படியே, பலர் அவளிடம் மொய்த்தனர். அறம் வளர்ந்து கொண்டே போனது.

"எங்கே, எனக்குக் கொஞ்சம் தண்ணீர்'' என்று முல்லைவனம் கேட்டான். அதே சமயத்தில் 'குமுதம்!' என்று ஓர் குரல் அவளைக் கூவியது.

முல்லைவனத்துக்கு வாய்கூட இமைக்காமல் கீழே குனிந்தாள். கொஞ்ச நேரங் கடத்தித் 'தர மாட்டேன்' என்ற பதில் அவளிடமிருந்து விழுந்தது.

திடுக்கிட்டான். அவன் சேகரித்த வார்த்தைக் கூட்டம் இருண்டு விட்டது. எண்ணங்கள் கருக்கலித்தன.

"பன்னாடைத் தலையனுக்கும்; பரதவனுக்கும் தண்ணீர் திறந்து

விட்ட இவள்; எனக்கு மாத்திரம். ஹூம்... ஆகிவிட்டது என்றாவது உபசார வார்த்தை கொடுத்திருக்கலாம். அதுவும் இல்லை. கத்தரிப்பாகத் தரமாட்டேன் என்றாளே... என்ன ஆச்சரியம்! இவள் நெஞ்சம் எத்தனை கரகரப்பு ?

பருவத்தின் குமிழ்ப்பில் இந்த அதிர்ச்சிகளை விசிறினாளா ? இவள் விஷமத்தின் துண்டங்களா ?......'' என்று நினைவை வியர்வைப் படுத்திக்கொண்டே இருந்தான்.

சிறிது நேரத்திற்குள் ஓர் தடித்த தாக்குதல் முளைத்தது. அவ்வளவுதான்! அந்த இடம் கலாம்புலாம் ஆகிவிட்டது. பெஞ்சியின் மேல் நின்று கொண்டிருந்த அவளுடைய நெற்றியில் பலத்த காயமேற்பட்டது. நீர்ப்பாத்திரம் ஓர்புறம் ஓடிற்று. அவள், முல்லைவனத்தின் மடிமீது கிடந்தாள்.

அவளுடைய உலராத காயம், அவனுடைய சோமனை உதயமாக்கிவிட்டது.

அந்தச் சமயத்தில் அவன், தனக்கு, அவள் தண்ணீர் கொடுக்க வில்லையே என்று, மனத்தில் புழுக்கத்தை ஏற்பாடு செய்து கொள்ளவில்லை. இரக்கந்தான் வளர்ந்தது அவனுக்கு. உடனே காயத்தை மேலாடையால் ஒற்றினாள்.

அவள் நிமிர்ந்தாள். அவளுடைய நெருப்பு நிமிஷங்களை அவனுடைய பனி வார்த்தைகள் அணைத்துக் கொண்டே வந்தன.

அவள், சடக்கென்று எழுந்து... "நன்றி அண்ணா! தவறிவிட்டது. அந்தத் துண்டைக் கொடுங்கள். இதோ தண்ணீர் இருக்கின்றது. தூய்மை அமைக்கின்றேன்'' என்று துடித்தாள்.

அதற்குள் அருகில் இருந்தவர் அவளைப் பார்த்து, "கொஞ்ச நேரத்துக்கு முந்தி இவர் உன்னைத் தண்ணீ கேட்டாரேம்மா குடிக்க'' என்றார்.

"அண்ணா, தண்ணீரா கேட்டீர்கள் ?''

"ஆம்! குமுதம்!... நீ தான் தரமாட்டேனென்று வெட்டிப் பேசி விட்டாய்''.

"அண்ணா! அதோ உட்கார்ந்திருக்கின்றதே என்பாட்டி, அதன் சாப்பாட்டில் குனிந்தேன்.'' இனிமே யாருக்கும் தண்ணீயை செலவழிக்காதே. நாம் அதிக தூரம் கடக்க வேணும். மிச்சம் பிடி குமுதம்...'' என்றது. நான் சரி சொல்லாமல் இருக்கும்போதே "எங்கே எனக்குக் கொஞ்சம் தண்ணி என்று கேட்டது. நான் 'தரமாட்டேன்' என்று கூறிக் கொண்டே நிமிர்ந்தேன் இவ்வளவுதான்! நீங்கள் கேட்டது என் காதைத் தொடரவேயில்லை. அண்ணா! உங்களுக்கு எவ்வளவு தாகமோ ?... இதோ'' என்று பாட்டிலில் உள்ள நீர் முழுவதையும் அவன் வாயில் சாய்த்து விட்டாள்.

அவன் குளிர்ந்தான். அந்தக் கதம்ப வனமும் கன்னத்தில் குழியிறக்கினாள்.

'நீ எங்கே இறங்கப் போகிறாய்' என்று கேட்டான் முல்லைவனம், அவள்மேல் விழிபோக்கி.

"இதோ வந்து விட்டதே! அடுத்து இருக்கும் பூச்சாலேதான் அண்ணா!'' என்றாள்.

"அதிர்ந்தான்....'' நானுங்கூட... நீளப் போகும் இந்த வாக்கியத்தின் சமதலையை நெஞ்சிலேயே கொசுவிக் கொண்டான் அவன்.

வண்டி பூச்சாலையைத் தொட்டது.

அவள் இறங்கினாள். பாட்டியும் ஒட்டிக் கொண்டாள்.

"போய் வருகிறேன் அண்ணா'' என்றாள் பூம்பாவை.

முல்லைவனம் தலையை அசைத்தான்.

வண்டி புறப்படும் வரையிலும் அவனைப் பார்த்தபடியே செப்புச் சிலைபோல நின்றாள் குமுதம்.

அந்தப் பொல்லாத புகைவண்டி அவன் விழிகளைப் பெயர்த்து, ஆளையும் தட்டிக் கொண்டே பறந்தது.

---

இக்கதை 1946ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் நாள் கவிஞர் திருலோக சீதாராம் அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'சிவாஜி' என்ற இதழில் 10.2.1946-ல் வெளிவந்த சிறுகதை.

## குடும்ப விளக்கு

மாட்டு வண்டி ஓட்டுதல், கெடுக்கும்
சீட்டு ஆட்டம், சிலம்ப வித்தை,
இவைகளில் வல்லவன் அழகிரி, இதோடு
பழச்சுவை, பாகு, பெண்சுகம் போன்ற
தமிழில் கொஞ்சம் தேர்ச்சியும் உண்டு.

சுருட்டு விற்பனை செய்தான் அழகிரி.
வர்ண மிட்டாய் விற்றான் சிலநாள்.
முடிவில், கோழி முட்டைகள் வாங்கி
ஊர் ஊராக விற்கத் தொடங்கினான்.

இந்தத் தொழிலில் இவனது கைமுதல்
எரியும் திரிபோல் வரவரக் குறைந்தது.
இழந்த பணத்தை எடுப்பதற் காக
சூழ்ச்சி ஒன்று செய்யத் தொடங்கினான்.

கோழியின் முட்டை கூடையில் இருந்ததா,
ஆமை முட்டையை அதோடு சேர்த்தான்.

கூடையில் இப்படி கலந்த முட்டைகள்,
தமிழிலே வந்து தங்கி இருக்கும்
பிறமொழிச் சொற்கள் போல இருந்தன.

வழக்கம் போல வாங்கு வோரிடம்
இவைகளை விற்று ஏமாற்றி வந்தான்.
ஏய்ப்பது தெரிந்து இவனை, இவ்வூர்
உதையும் குத்தும் வெளியூர் விரட்டின.

அழகிரியோடு அவனது மனைவி
நேத்திரம் நனைய நடந்து சென்றாள்.
பாத்திரம், பூமியில் புதைத்த உண்டியல்,
ஆத்திச் சூடி, அது இது போன்ற
சாத்திரம், எல்லாம் சென்றன வீடு
மாத்திரம் நகர முடியாமல் தவித்தது.

நிலவும் வெயிலும் நாட்களைத் திருப்பின.
குற்றம் புரிந்த கணவனும், மனைவியும்
பட்டினத் தடிகள் பிறந்த ஊர் வந்து
அழுக்குச் சேற்றால் அமைத்தனர் குடிசை.

கட்டி முடித்த குடிசையில், -குடும்ப
விளக்கு ஒரு புது விளக்கு ஏற்றினாள்.
வேடிக்கை, பாட்டு விடுகதைக் கலப்புடன்
வாடிக்கை முத்தம் வைத்து வாழ்ந்தனர்.



இதழ் : 'மாலைமணி' - 15.5.1953

## தமிழா எழுந்திரு!

பழமை அழிந்தது! புதுமை மலர்ந்தது -இங்கே
பகுத்தறி வாளர்கள் பெருகிய தாலே.
இழிவு தரும்செயல் யாவும் மறைந்தன -மாந்தர்
அனைவரும் கற்றவர் ஆயினர் நாட்டினில்.
உழவும் தொழில்களும் இளமைபோல் வளர்ந்தன-எங்கும்
வள்ளுவர் திருக்குறள் வார்த்தைகள் பரவின.
அழுகைஇல் லாதஓர் ஆனந்தஉலகம் -இன்று
அமைந்தது. எழுந்திரு. தமிழா எழுந்திரு!

ஆயிரம் தெய்வம் இனிஇல்லை இங்கே -மெய்
அன்பை வழிபடும் அந்தநாள் வந்தது.
தாய்மொழி இருக்கையில் தெலுங்கினில் பாடும் -மூடத்
தனமும் ஒழிந்தது. தமிழிசை நிலைத்தது.
மாயசுகம் என்னும் மனிதர் எல்லோரும் -பொது
மக்களிடம் இன்று மடையர்கள் ஆயினர்.
கோயில்எல் லாம்பள்ளிக் கூடங்கள் ஆயின -சங்க
கால வாழ் வுமுறை வளர்ந்தது தமிழா!

“ஆரடா எம்மை எதிப்பவன் உலகினில் -என்றும்
அஞ்சாத புலியின்முன் ஆடுகள் வருவதோ?
வேரொடும் வேரடி மண்ணொடும் வீழ்த்தி -வெல்லும்
வீரத் தமிழர்யாம். உணர்ந்திடு விர்”என
வீரர்கள் எழுந்தனர் அலைகடல் போலே -போர்
விரும்பும் வேலும்படை வரிசையும் எழுந்தன.
ஊரதிரும்படி முரசொலி எழுந்தது -நீயும்
வாள்எடு, வேல்எடு, சென்றுவா, வென்றுவா!

பொதிமலைச் சந்தனம் பூசிட வேண்டும் -தமிழ்ப்
புரட்சிக் கவிஞரை வரவேற்க வேண்டும்.
கொதிக்கும் தென்கடல் மதிக்கும் முத்தெடுத்து -அதைக்
குமரிக் கரைமீது குவித்திட வேண்டும்.
நிதிகள் குவிந்த வடவேங்கட மலைதனில் -இருள்
நீக்கும் சுடர்விளக்கு ஏற்றிட வேண்டும்.
புதுமையில், அதிசயப் புலமையில், போரில் -முழுப்
புகழ்பெற்ற தமிழனே, எழுந்திரு! எழுந்திரு!!



இதழ் : 'மாலைமணி' - 9.6.1953

## பஜனையால் துன்பம் தீருமா?

அந்திநிலா யானைத் தந்தமாய் விட்டது தோழா -கூனல்
அம்புலி தன்னைநீ இவ்விதம் சொல்கிறாய் தோழி
ஆகாயத் தால்கடல் நீலநிறம் ஆச்சு தோழா -அதன்
ஆழத்தி னால்கடல் அங்கம் கறுத்தது தோழி.

முல்லைக்கொடி வெள்ளை முட்டைகள் இட்டது தோழா-அதன்
மொட்டுதனைக் கண்டு முட்டைகள் என்கிறாய் தோழி
மின்னும் "மலர் விடும் மூச்சுதான் வாசனை" தோழா-"தண்ணீர்
மீதுஉண்டாகும் சுருக்கங்களே அலை" தோழி.

கல்விஇல் லாதவன் செத்த மரக்கட்டை தோழா -உண்டு
கக்கிடும் சோற்றினைக் காட்டிலும் தாழ்ந்தவன் தோழி.
கற்கண்டும் தேனும் கசப்பாகி விட்டது தோழா -இளங்
கன்னித் தமிழிசை கேட்டதின் மாறுதல் தோழி.

சேரனைப் போல்ஒரு வீரன் எங்குமில்லை தோழா -வானச்
சூரியன் போல்ஒரு பேரொளி தான்ஏது தோழி.
சொத்தை விரோதிகள் கத்தியைக் காட்டுறார் தோழா -குகைச்
சிங்கந்தனை வயல் சுண்டெலி வெல்லுமோ தோழி.

மானிட வாழ்வினை மாயமென் பார்எவர் தோழா -மத
மோகத்தில் மூழ்கிய காவிச்சட் டைக்காரர் தோழி.
முத்திமுழு மோட்சம் என்பதெல்லாம் என்ன தோழா? -அவை
முட்டாள் தனத்தின் விளம்பர சத்தங்கள் தோழி.

பக்தி பஜனையால் துன்பங்கள் தீருமா தோழா -அம்பு
பட்ட புண்மேல் இழை கட்டினால் ஆறாது தோழி.
பட்சி கடித்த பழத்துக்கு எச்சில்லை தோழா -சுகம்
பாய்ச்சும் முத் தத்துக்கும் எச்சில் குற்றமில்லை தோழி.

தெய்வங்கள் இத்தனை எப்போது தோன்றின தோழா -படு
தோல்வி, அறிவு அடைந்திட்ட தேதியில் தோழி.
தானதர்மம் தினம் செய்வது நல்லது தோழா -சம
தர்மம் பரவத் தடை அல்லவா அது தோழி.

விதவைக்கு மீண்டும் விவாகம் செய்யலாமா தோழா -உயிர்
விதையை முளைக்க விடுவதே நல்லது தோழி.
வாழ்வில் முன்னேற்றம் உழைக்காமல் வாராது தோழா -தானாய்
உப்புக்கடல் முத்து எப்படி கரைஏறும் தோழி.



இதழ் : 'மாலைமணி' - 12.6.1953

## ஒருத்தி

அசைந்து மிதக்கும் அந்திக் காற்று -வந்து
அலைந்து உடல்தடவி உதவுவ தாலே -செடி
அரும்பு ருதுஅடையும் நேரம் -சிவந்த
அந்திவெயிலோ மிகவும் மந்தமாகும் நேரம் -தண்ணீர்
அலையும் காவிரிக்கரை ஓரம் -அங்கு.

தழுவிஏறும் உயர் தென்னை -கிளித்
தலைபோன்ற பசுங்காய்கள் தொங்குகின்ற புன்னை தனது
தலைதனைக் காற்றினில் ஆற்றும் மரங்கள்
தவழும் கொடிவகை வளரும்சோலை வந்தாள் -சுடர்
தங்கநிறம் உள்ளஓர் மங்கை -அவள்.

பருவஉருவம் நெஞ்சை மயக்கும் -பாக்குப்
பழவர்ண மஞ்சள்பட்டு பார்வைதனைப் பறிக்கும் -நிழல்
படிந்த கூந்தல் சுருண்டிருக்கும் -கோவைப்
பழத்தினை அழகியின் உதடுகள் குறிக்கும் -அதிகம்
பதினைந்து வயதுதான் இருக்கும் -காதல்

அத்தானை அவள்எதிர் பார்த்து -படுக்கை
அனுபவம் அடைந்தவள் அவ்விடத்தே நின்றாள் -பின்பு
அன்னவனும் சின்னஓடம் தன்னால் -ஆற்றின்
அலையை உழுதுகொண்டு அங்குவந்து சேர்ந்தான் -அந்த
அணங்கு அவனைக்கண்ட உடனே -"செந்

தமிழ்தரும் அமுதமே!" என்றாள் -"புகழ்
தந்தபுக கேழந்தி வெண்பா வின்சுவையே!" என்றான்-அவளைத்
தனது கருவிழியால் அழைத்தான் -கொஞ்சம்
தயங்குதல் போல் தயங்கி மயங்கினாள் மாது -ஆண்
தத்துவ சுகம்தந்திடத் தொட்டான் -அவள்.

முல்லைச்சிரிப்பு ஒன்று தந்தாள் -போதை
முத்தமிடும் போதுபுறா சத்தமிட்டுக் கொண்டாள் -"மார்பில்
.....................................................................................
.....................................................................................



# ரத்தத்திலே குளிப்போம்

பகுத்தறிவைத் தடுக்கும் புத்தகத்தைத் கெடுப்போம்
புராணத்தில் நெருப்பு வைப்போம்.
பஞ்சாங்க புத்திஉள்ள -மனிதரை யாம் பழிப்போம்
சக்கைகள் என்றுரைப்போம்
குப்பைபோல் ஒதுக்கி வைப்போம்.

மனிதர்க்கு தீமைசெய்யும் -மதங்களை சிதறடிப்போம்
தொழிலாளிக் குயிர்கொடுப்போம்.
முன்னேற்றந் தனைஒடுக்கும் -வழக்கமெல்லாம் ஒழிப்போம்
விரோதியை ஓடவைப்போம்
பஞ்சத்தை வாட வைப்போம்.

வஞ்சகம்செய்வோர்தம்மை-பட்டை போலே உரிப்போம்
பாளைபோலே கீழிப்போம்.
வேற்றுமை ஏற்படுத்தும் -உலகத்தை யாம் கலைப்போம்
சுயமரியாதை வளர்ப்போம்
புரட்சி லோகம் படைப்போம்.

கயவர்கள் கூட்டந்தன்னை -வயல்சேறு போல்மிதிப்போம்
பிரேதமாக்கிப் புதைப்போம்.
காட்டிக்கொடுப்போர்தம்மை -வேட்டிபோலேகிழிப்போம்.
விறகு போலே பிளப்போம்
தூண்டில்மீன் போல்முறிப்போம்

அச்சம் தரும் கடலை -கப்பலினால் கிழிப்போம்.
உப்பு நீரைப் பழிப்போம்.
ஆணவக்காரர் தம்மை -கத்தியினால் அழிப்போம்
ரத்தத்திலே குளிபோம்.
ஆணிவேரோ டொழிப்போம்.

இதழ் : 'மாலைமணி' - 26.6.1953

# சங்கத் தமிழைப் புகழ்வேன்

வீரனை நினைத்தால் -சிலபேர் ராமனை நினைப்பார்,
நான் -கொலைவாள் ராவணனை நினைப்பேன்!
போரை நினைத்தால்-பாரதப் போரை நினைப்பார்,
நான்-கலிங்கப் போரை நினைப்பேன்!

நதியை நினைத்தால்-கங்கை நதியை நினைப்பார்.
நான்-காவிரி நதியை நினைப்பேன்!
விதியை நினைத்தால் -தலைவிதியை நினைப்பார்,
நான்-அரசியல் விதியை நினைப்பேன்!

உடைமை வளர்த்தால்-சொந்த உடைமை வளர்ப்பார்,
நான்-பொதுஉடைமை வளர்ப்பேன்!
படையை வளர்த்தால்-ஆயுதப் படையை வளர்ப்பார்,
நான்-அறிவுப் படையை வளர்ப்பேன்!

எண்ணம் வளர்த்தால்-பிறர் எண்ணம் வளர்ப்பார்,
நான்-எனது எண்ணம் வளர்ப்பேன்!
கண்ணில் வளர்த்தால்-இருண்ட தூக்கம் வளர்ப்பார்,
நான்-சரித்திரக் கனவை வளர்ப்பேன்!

மலையைப் புகழ்ந்தால்-மேரு மலையைப் புகழ்வார்,
நான்-பொதிய மலையைப் புகழ்வேன்!
நிலையைப் புகழ்ந்தால்-ஆரியக் கலையைப் புகழ்வார்,
நான்-திராவிடக் கலையைப் புகழ்வேன்!

கவியைப் புகழ்ந்தால்-காளி தாசனைப் புகழ்வார்,
நான்-புரட்சிக் கவியைப் புகழ்வேன்!
சுவையைப் புகழ்ந்தால்-தேவ அமுதைப் புகழ்வார்,
நான்-சங்கத் தமிழைப் புகழ்வேன்!

இதழ் : 'திராவிடன்' - 6.11.1953

## யார் மறுப்பார்?

அந்திப் பொழுதும்; நீர் அருவிகலும் - நீந்தும்
அன்னமும்; தாமரையும் - அரும்பு
வந்திருக்கும் கொடியும்; பனிமலையும் - கடலும்;
வானவில்லின் உடலும்; - காயச்
சந்திரனும்; காடும்; சர்ப்பங்களும் - வண்டும்;
சேல்விழி மங்கையரும் - கண்டு,
இந்த உலகம் எல்லாம் அழகின் - வேலை
என்பதை யார் மறுப்பார்?

கல்விதனில் சிறந்த பாண்டியனும்-ஈந்து
கைசிவந்த பாரியும் - போர்
வல்லமை காட்டிய ராவணனும் - இன
உணர்ச்சி தந்த இரண்யனும் -கருங்
கல்லிலும், செம்பிலும் கடவுள் இல்லை - என்னும்
கருத்து தந்த சித்தரும் - நாட்டில்
நல் உணர்வை; விழிப்பை; பகுத்தறிவை - நிலை
நாட்டிய தமிழ்ப் பெரியார்!

செக்கச்சிவந்த ரத்தப் புரட்சி செய்த - சேரன்
செங்குட்டுவன் சபதமும் - வெள்ளைக்
கொக்கு நரைக் கிழவி ஔவையின் - வாக்கும்;
கபிலரின் கேள்விகளும்; - வீர
நக்கீரரின் தர்க்க வாதமும் - வள்ளுவ
நாயனார் முடிவுகளும் - நாட்டு
மக்களை, சிறப்போடு, மானத்தோடு - வாழச்
சொல்லிடும் பாடமன்றோ!

ஆசை ததும்ப இள வரசியிடம் - சுவைத்த
அம்பிகா பதிகாதலும் - வாள்
மீசைக் குலோத் துங்கன் வீரமும் - பொய்யா
மொழிப்புலவர் நேசமும் - மைலை
வாசுகி அம்மையின் கனிந்த அன்பும் - வடலூர்
வள்வலாரின் இரக்கமும் - படிக்
காசுப்புலவர் செய் நன்றியும் - தினம்
கீர்த்தியால் வளர்வதன்றோ!

பழம் வளர்க்கும் கிளை மரங்களும் - உணவுப்
பயிர் வளர்க்கும் வயலும் - தினம்கைத்
தொழில் வளர்க்கும் நல்ல ஊர்களும் - புதுசிந்
தனை வளர்க்கும் கல்வியும் - குறள்
வழிவளர்க்கும் அர சாட்சியும் - போர்
வாள் வளர்க்கும் வீரமும் - அமைந்தால்
பிழை வளர்க்கும் திருட்டு; அடிமைத்தனம் - வறுமை
பிறந்திட வழிகள் உண்டோ?



இதழ் : 'போர்வாள்' - 14.11.1953

# குடும்பக் கலை

சூரியன் வயிற்றில் தோன்றிய இப்புவி,
சோம்பல் இன்றி சுற்றுதல் ஓர்கலை!
அழுக்குக் கடலோடு பழகும் ஆறுகள்,
மீன்களை இழுத்து ஓடுவது ஓர்கலை!
ஆடுதல் ஓர்கலை! பாடுதல் ஓர்கலை!
பச்சை மிளகாய்ப் பூபோல் இருக்கும்
அரிசியைச் சோறாய் மாற்றுதல் ஓர்கலை!
கத்தியின் யுத்தமும்; தித்திப்பு முத்தமும்;
வீரத்தை, சுவையை வளர்க்கும் கலைகள்!
நினைவில் அழகும்; அழகில் போதையும்;
போதை ஏற்படின் புதுப்புது ஆசையும்;
ஆசையால் உறவும்; அதனால் கலப்பும்;
உயிரின் பிரசவம் உற்பத்தி யாகும்
கலப்பால், குடும்பக் கலையும் வளரும்!
ஐந்து பொருளால் ஆனஇவ் வுலகில்
இன்பக் கலைகள் எத்தனை இருப்பினும்,
காதலை வளர்க்கும் கலையே சிறந்தது!
காதலோ, குடும்பக் கலையின் விளக்கம்!
காளி தாசக் கவிஞன் எழுதிய
வடமொழி தன்னிலும்; வெள்ளையர் நாட்டு
ஆங்கிலம் அதனிலும், மாங்கனித் தமிழிலும்;
தளும்புதல் இல்லா திறமை உடையவர்
அறிஞர் வேங்கட ராவ்என் பதனை,
நமது தமிழகம் நன்கு உணரும்
ஆராய்ச்சி நுட்பம்; அரசியல் யோசனை;
அதிகம் அறிந்தஇவ் அறிஞர் நடத்தும்
குடும்பக் கலையில் குவிந்து கிடக்கும்
உடற்கூற் றெண்ணம் உயர்ந்தது என்பேன்!

இதழ் : 'குடும்பக்கலை' – 1953

## வெட்டுப் படும் நிலவே!

வெட்டுப் படும் நிலவே வாவா - சோழ
வேந்தனின் வெண்குடையே வாவா!

இளைத்து வரும் விளக்கே வாவா - என்றும்
எட்டாத வட்டமேநீ வாவா!

கொல்லை முல்லை நிறமே வாவா - யானைக்
கொம்புப் பிறை நிலவே வாவா!

நீல வானின் விழியே வாவா - பாதி
நாளில் வாழும் நிலவே வாவா!



இதழ் : 'மாலைமணி' - 21.1.1954

## தனிக்கவிஞர்

குழந்தை பெற்றபார்வதியை; அவளைக் கொஞ்சிக்
குதூகலித்த நெற்றிக்கண் சிவனை; போற்றிப்
பழமைதனை வளர்க்கின்ற பாடல் செய்த,
படிக்காசுப் புலவர்களால் பிறரால்; சத்து
இழந்து விட்ட நம்தமிழை; முறுக்குஏறும்
எண்ணத்தால்; கற்பனையால்; முறையால்; மீண்டும்
எழுந்திருக்க வைத்தபா ரதிதாசன் போல
இவனொருவர் இந்நாட்டில் இப்போ தில்லை!

கனி சுமக்கும் பழத்தோட்டம்; நீந்தும் மீன்கள்;
கடல்மீது ஒட்டுகின்ற நீல வானம்;
பனி உதிரும் நிலாஇரவு; காலை வெய்யில்;
படர்கின்ற கொடி முல்லை மலையின் காட்சி!
சுனை நீரில் வளர்ந்துவரும் மலர்கள், அங்கே
சுற்றிவரும் கருவண்டு - யாவும் கண்டு,
இனிமை தரும் இசைப்பாடல் எழுதிக்காட்ட
இவரைப் போல் புதுத்திறமை யார்க்கு மில்லை!

திருடுகின்ற மனப்பான்மை; தீமை சேர்த்துத்
தருகின்ற சாதிமதம்; நரகம்; மோட்சம்;
சுருட்டுகின்ற பேராசை; அடிமைத் தன்மை;
சிந்தனையைப் பழுதாக்கும் புராணக் கல்வி;
நுரையற்ற கண்ணீரை ஊற்றும் கூட்டம்;
நிம்மதியாய் வாழ்ந்து வரும் கும்பல் - கண்டு
"இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்று
எவன் சொன்னான் இதுவரைக்கும் இந்த நாட்டில்?

இதழ் : 'மாலைமணி' - 4.4.1954

# சேரன் செங்குட்டுவன்

துவக்கம்

சேரன் செங்குட்டுவன் - சிலப்பதிகாரம்
செய்த இளங்கோ அடிகளின் அண்ணன் மன்னன். (சே)

உடன் துவக்கம்

வீரன், வடநாட்டை வென்ற தீரன் - இமயத்தில்
வில் எழுதி வெற்றிச் சொல் எழுதி வந்தவன். (சே)

அடி

சங்க இலக்கியம் போல மிகவும் சிறந்தவன்
சூரியன் போலே யாருக்கும் தெரிந்தவன்
சங்கீதம்; ஓவியம்; யாவும் அறிந்தவன்
சோழன் காவிரிபோலே நன்மை புரிந்தவன். (சே)

பாரினில் தமிழன் பெருமையைப் பறைசாற்றி
பெரியாரை, கவிஞரை, அறிஞரைப் போற்றி
பேரும் புகழும் எட்டுத் திசையிலும் தாண்ட
பாண்டியன் போல் பொன்முடி சூடி ஆண்ட. (சே)

இதழ் : 'மாலைமணி' - 1953

## பழைய நிலை மறந்தேவிட்டாய்!

மலைபடுத்துக் கொண்டிருக்க; அதன்மேல் ஈர
முகில் படுத்துக் கொண்டிருக்கும் சேர நாடே!
சிலை செதுக்கக் கல்தந்து; மாதர்க் கெல்லாம்
சித்திரம் போல் எழில் தந்து; நிதிகள் தந்து;
இலை விரித்து, நிழல்திறக்கும் குளிர்பூஞ்சோலை
எப்போதும் உயிருள்ள நதிகள்; என்றும்
விலை வளர்க்கும் யானைப்பல்; அனைத்தும் தந்து
வருகின்றாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

கருவத்தால்; ஆணவத்தால்; நமைப் பழித்த
கனக-விசயர் என்னும் பூணூல் மன்னர்
சிரத்தின் மேல் கல் ஏற்றிக் காட்டி னானே
செங்குட்டு வன் என் போன்; அவனைப் போலே
பரவுகின்ற புகழ் வளர்த்துக் காட்டும் வீரர்;
பகுத்தறிவைக் கொல்லாத கல்வி; சாதிப்
பிரிவுகளைப் பிணமாக்கும் சக்தி - தன்னைப்
பெருக்கவில்லை, அதற்காக வருந்து கின்றேன்!

வயல்கொடுக்கும் செந்நெல்லை உணவாய் மாற்றி
விருந்து வைத்துக் கொண்டிருக்கும் சோழ நாடே;
வெயில் பார்க்கும் தாமரையைக் குளத்தில் வைத்து;
வானத்தில் மழை வைத்து; பெய்ய வைத்து;
தயவை எதிர் பார்க்காத பொன்னி ஆற்றைத்
தரைமீது ஓடவைத்துத்; தொழில்கள் வைத்து;
குயில் வளர்த்துக், கலை வளர்த்துப் பெருமை தேடிக்
கொடுக்கின்றாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

கரிகாலன் அரசாண்ட நாட்டில், இன்று
கயவர்களை, அமைச்சர்களாய் நியமிக்கின்றாய்;
எரிகின்ற நெருப்பின்மேல், புராண ஏட்டை
இழுத்தெறிய மலைக்கின்றாய்; பக்தர் மூலம்
வருமானம் தேடுகின்ற கடவுள் தன்னை
வீதியிலே பவனிவரச் செய்கின் றாய் நீ;
இருள் துரத்த விளக்கெடுத்தால், அதை அணைப்பாய்
என்கின்றாய்; அதற்காக வருந்து கின்றேன்!

பழச்சாறு போல் இனிப்பு ஊட்டும், சங்கப்
பாடல்தனை வைத்திருக்கும் பாண்டி நாடே!
மொழி வளர்க்கும் கலைஞர்களைப் புகழ்ந்துாய் வெள்ளை
முத்துக்கள் தனை ஈந்தாய்; கைசி வந்தாய்;
இழிந்த செயல் புரிந்தவனைக் கொன்று, அன்னோன்
இரத்தத்தில் கொலைவாளைப் படுக்க வைத்தாய்.
விழி, முடிவு செயும் காதல் திரும ணத்தை
வளர்த்திட்டாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

சக்கரை போய் கரும்பின்மேல் மோத; அந்தச்
சமயத்தில் தேன் வந்து சேர்ந்து கொள்ளும்,
முக்கூட்டுச் சுவை போன்ற தமிழைக் காக்க,
முன்போல நீ, சங்கம் அமைக்கவில்லை.
நக்கீரன் போன்றவனை மீண்டும், இந்த
நாட்டுக்கு அளிப்பதற்கு மறந்தே விட்டாய்.
தக்கைகளைப் பெற்றெடுத்து, மனிதர் என்று
தருகின்றாய்; அதற்காக வருந்து கின்றேன்.

---

இதழ் : 'முரசொலி' - 30.7.1954

## கவியரசும் புவியரசும்!

வான் தன்னைத் தொட்டுவிட வேண்டும் என்ற
வைராக்யத் தோடு உடல் உயர்த்தும் காட்டில்;ய
மீன்மேயும் ஓடை ஒன்று; அந்த ஓடை
மிதந்து செல்லும் நடுவழியில்; ஓரிடத்தில்;
தேன்போல சுவை கொடுக்கும் கனியைக்; கீழே
தொங்கவிட்டு; தொங்கவிடும் கிளையின் மீது,
பேன் பார்க்கும் குரங்குகளைத் தூக்கி வைத்துப்
பெருமை தரும், பெரியமா மரத்தின் கீழே;

மோதிரம்போல் சுருண்டுள்ள குழலும்; கொல்லி
மலைமார்பும்; போர் விழியும்; படைத்தோன்; மக்கள்
நீதிக்கு உயிர்தந்தோன்; சந்தர்ப் பத்தால்
நெடுங்காட்டை அடைந்துள்ள குமணன்; கல்வி
வாதமிடும் வாய்மூடிக் கொண்டு; அங்கோர்
வளராத கல்லின்மேல் அமர்ந்து; வாழ்வின்
பாதியிலே ஏற்பட்ட துயர் நினைத்து;
பகை நினைத்துப் பல்கடித்துக் கொண்டி ருந்தான்.

தன்னுடைய பசிபோக்க, அணில் கடித்துத்
தின்றதொரு பழத்தைப்போல்; குழி விழுந்த
கன்னங்கள்; புள்ளிமான் கொம்பு போல
கிளைபிரிந்த கருந்தாடி; குளத்து நீரில்,
மின்னுகின்ற கெண்டைமீன் வாலைப் போல,
முகந்தன்னில் குனிந்துகொண் டிருக்கும் மீசை
இன்னதொரு தோற்ற முள்ளோன் "அரசே" என்று
எதிர்வந்து தமிழ் வணக்கம் செய்து நின்றான்.

"புதியவரே நீவிர்யார்?" என்று; மின்னும்
பொன்முடியை இழந்துவிட்ட வேந்தன் கேட்டான்.
"உதவிசெய்யப் பிறந்து, அதைச் செய்து; என்றும்
ஒடுங்காத கீர்த்திபெற்ற வேந்தே! உம்மை;
எதிர்பார்த்து எதிர்நிற்கும் இந்த ஏழை;
இறவாத கவி வளர்க்கும் கவிஞன்; என் ஊர்,
வெதிராடும் முது விருத்தம்; நாடு என்னை,
ஒப்பிலா மணிப்புலவன் என அழைக்கும்.

நாடெடுத்து வைத்திருக்கும் இலக்கி யத்தை
நானெடுத்து, குறை தீரக் கற்றுப் பின்னர்;
வாடாத திறமை பெற்று, வறுமை யாலே
வாடுகின்றேன். ஆனாலும், கழுவி என்னைப்
பாடையிலே வைக்கும்வரை, ஆவி போன்ற
பசுந்தமிழில் பெரும் புரட்சி செய்து காட்ட,
ஏடெடுப்பேன் அல்லாமல்; பிச்சை கேட்க,
ஓடெடுக்க மாட்டேன் காண் குமண வேந்தே!

"சந்தனத்தைச் செந்தணலின் சாறு என்று
சொன்னானே ஓர் கவிஞன்; அவனைப் போல
சொந்த அறி வோடெதையும், புதுமை யாகச்
சொல்வதுதான் என் வழக்கம், திருட மாட்டேன்.
செந்தமிழின் ஆண்வடிவம் என்று என்னை
செறுக்கோடு நான் சொல்லிக் கொள்ளு கின்றேன்.
பந்தடித்துப் பழகுகின்ற உலகில்; கத்திப்
படை எடுத்த முடிவேந்தே! இன்னும் கேட்பீர்;

பகுத்தறிவைப் பாழ் படுத்தும் புராண ஞானம்
படைத்தவரை என் எழுத்து எதிர்க்கும்; "மாந்தர்
சுகித்திருக்க உதவிசெயும் பொருளை எல்லாம்;
சிலர் சுரண்ட; அதற்கு இடங் கொடுக்கும்
பகையன்றோ ஏழைகட்கு?" என்று; வாடும்
பாட்டாளி மக்களுக்கு உணர்த்தும்; வேந்தே!
சுகங் கொடுக்கத் தெரியாமல், அடிமை யாக்கித்
துயர் கொடுக்கும் துரைத்தனத்தை வைக்க லாமா?

எத்தனையோ சீர்திருத்தக் காவி யங்கள்
எழுதி இந்த நாட்டுக்குத் தந்தேன். தெய்வ
சத்தமிடும் கூட்டத்தார், எனது நூலை
"சாவுதரும் பாம்பென்று" தூற்று கின்றார்.
சத்துள்ள திறமை பெற்ற கலைஞர் எல்லாம்;
சரியாகப் புகழ்கின்றார். ஆனால், யானோ
சொத்தைகளால் தோற்கின்றேன். அறிஞர் கூட்டம்
தோற்பதெல்லாம் அறிவில்லார் இடத்தில் தானே!

மன்னவனே! என் வீட்டின் நிலையை; எந்தன்
விழி சொலுமுன் நான் கொஞ்சம் சொல்லு கின்றேன்.
தன்தாயின் மார்பில் பால் வராத தாலே
தளிர் வயதுக் குழந்தை அவள் முகத்தை நோக்க;
என் மனைவி, என் முகத்தை நோக்க; போற்றும்
என் அறிவை உணராத மடையர்க் கெல்லாம்,
என் முகத்தைக் காட்டாது மறைத்து, இங்கே
நின் முகத்தை நோக்க வந்தேன் அரசே" என்றான்.

"பசி கண்டு அஞ்சுகின்ற கீழோர் போல
பொருளின்றி, உணவின்றி, வாடுகின்றேன்.
புசிக்கவில்லை, நான் மட்டும் அல்ல, இல்லாள்
பூ, பிஞ்சுத் தரமுள்ள குழந்தை யாவும்!
கசந்துவிட்ட என் வாழ்வு இனித்தால், காதல்
கலை இனிக்கும். காதலினால் உயிர் இனிக்கும்!
இசை அரசே! புறாக்கூடு போலி ருக்கும்
என் அடுப்பைப் புகையவைப்பீர்" என்றான் மீண்டும்.

"கலை வளர்க்கும் பாவலனே! நெடு நாளாகக்
காதுக்கு உணவின்றி இருந்தேன். இன்றோ,
நிலைமைதனை மாற்றிவிட்டாய். அமுதுபோன்ற
நின்கவிதை நான் கேட்டுக் கவிதை யானேன்.
மலைவளர்க்கும் தமிழ் நாட்டில், உன்னைப்போல
மதிவளர்ப்போர் அதிகரித்துவிட்டால்; இங்கே
தலை தூக்கி ஆடாதா வீரம்? பூணூல்
தனந்தன்னை ஒழிக்காமல் விடுமா நாடு?

தூட்டர்களைத் தவிடுபொடி யாக்கி; சூழ்ச்சி
செய்பவரைப் புது நெருப்பில் தள்ளி; வெள்ளி
வட்ட நிலாக் குடைபிடித்து, காற்று சுற்றி
வருகின்ற திசையனைத்தும் அதிர வைத்துக்;
கட்டளை இட் டாண்டானே; அந்த நாளில்
குமணினிடம் நீவந் திருந்தால்; கோணல்
ஒட்டகத்தின் காலடி போல், முத்தும்; மண்ணில்
ஒளிந்திருக்கும் பசும்பொன்னும் தந்தி ருப்பேன்.

இன்றோ நான் வெறும் மனிதன். உடன் பிறந்த
எதிரியினால் திடீரென்று அணைந்த தீபம்.
என்னிடத்தில் இப்போது; துக்கம், கண்ணீர்,
இவைதவிர எதுமில்லை; உன்னைப் போல.
இன்றோ நீ வந்துவிட்டாய். என்ன செய்வேன்
இருந்தாலும் வறுமைதனைப் போக்கு தற்கு
ஒன்று சொல்வேன் அது போலச் செய்க" என்றான்.
ஒப்பில்லா மணிப் பெயரோன் "என்ன?" என்றான்.

விலைகொடுத்துச் செய்துள்ள ஆச னத்தில்,
வீற்றிருக்கும் என் தம்பி யிடத்தில்; எந்தன்
தலை கொடுத்தால், ஆயிரம் பொன் தருவான். உந்தன்
தரித்திரத்தை, அந்தப்பொன் மாற்றி வைக்கும்.
நிலை உயர; நீ உயர; உனது நாட்கள்
நீடிக்க; நற்றமிழ்க்குத் தொண்டு செய்ய
தலை கொடுக்கச் சம்மதித்தேன். வெட்டிச் செல்க.
தமிழ் காக்கும் காவலனே!" என்றான் மன்னன்.

இதைக் கேட்டு, தமிழ்க் கவிஞன் அவனைப் பார்த்து;
"எனக்காகத் தலை கொடுக்கத் துணிந்த வேந்தே!
வதைக்கின்ற பசிவந்து, இன்னும் என்னை
வாட்டிடினும் வாட்டட்டும். பிறர்செல் வத்தைப்
பதுக்குகின்ற கொடியவரின் வாட்கள்; என்னைப்
பல கூறு போடட்டும். நோய்கள் வந்து;
"சதி செய்யும் இவ்வுலகம் உனக்கேன்" என்று
சாவுலகம் அழைக்கட்டும். ஏற்பேன். ஆனால்;

புது நினைவைப் பாராட்டும் வேந்தே! உம்மைப்
புலி வந்து தின்னவரின், அதற்கு எந்தன்
சதை கொடுத்து, நான் சாவ தன்றி, உம்மை
சத்தியமாய்ச் சாகவிடேன். கோட்டை நெல்லை
விதைக்காமல் வேகவைத்து விட்டால்; பின்னர்
உழவெங்கே? பயிரெங்கே? விளைவு எங்கே?
புதுவிளக்கு தனை அணைத்து, அதை எடுத்துப்
போகவோ இங்கு வந்தேன். என்றான். சென்றான்.



இதழ் : 'முரசொலி' - 6.8.1954

# மின்னல் தரும் ஓசை

பெண் : முற்றிக் கனிந்திட்ட கோவை ப்பழம்போல
முன்பே சிவந்த உதடுகளை,
வெற்றிலை போட்டின்னும் ரத்தப் படுத்துதல்
விவேக மாகுமோ காதலரே?

ஆண் : வண்டு படுத்து உறவாடும் தாமரை
வண்ணச் சிவப்பு முகத்தினிலே;
வண்ணக் கிளிப்பிள்ளை வாய்நிறம் போல்பொட்டு
வைப்பது மட்டும் சரிதானா?

பெண் : மிதக்கு நிலாமுக மங்கையின் உதடு
மென்று தின்கின்ற கற்கண்டு என்றால்
இதுவரை எந்தனை முத்தமிட்டும் அவை
இன்னும் கரையாதிருப்பது ஏன்?

ஆண் : வெட்டிய மாம்பிஞ்சு போன்ற விழியினால்
'வாருங்கள்' என்று இழுப்பவளே!
சுட்ட கொழுக்கட்டை மேல்கலத் தண்ணீரைக்
கொட்டினும் மாவு கரைந்திடுமா?

மாதவிபோல அழகு படைத்துள்ள
மாணிக்க தீபமே! ஆணிப் பொன்னே!
மின்னல் இருக்க, இடைதனிலே, ஓசை
மட்டும் இல்லாது இருப்பது ஏன்?

பெண் : கொட்டிக் கிடக்கின்ற முத்'தெடுத்து' நூலில்
கோத்த சரம்போல் சிரிப்பவரே!
ஒட்டு மாங்கனியின் கன்னத்தைத் தாருங்கள்
ஓசையை உண்டாக்கிக் காட்டுகிறேன்!

இதழ் : 'முரசொலி' - 13.8.1954

## தாமரைக் குளம்

ஊருக்கு நேர்கிழக்கே; கவத்து மேட்டில்;
உழவுக்கு உயிர்கொடுக்கும் மாடு கட்டிப்
போரடித்துக் கொண்டிருக்கும் சமயந் தன்னில்;
புதுமனைவி அங்குவரக் கண்ட குப்பன்;
நேர்க்கோடு போலிருக்கும் பாதை மீது;
நடந்தபடி, பறந்தபடி, சென்றான். மங்கை,
கூர்விழியால் சுவைபார்த்து; மூன்று நாவாய்க்
கொடுக்காத உதடுகளால் "அத்தான்" என்றாள்.

கணவனுக்குத்தான் கொண்டு வந்த சோற்றைக்;
கை வளையல் சத்தமிட ஊட்டிப், பின்னர்,
பணங் கொடுத்து வாங்கியதோர் பலாப் பழத்தின்
பொன்நிறத்துச் சுளைதந்தாள். அதனைத் தந்து,
மணிக் "கட்டில் பேச்சு" தந்தாள், துணியி னாலே,
மறையாமல் இருந்துவரும் உதடு தந்தாள்,
இணையில்லா வரிச்சிரிப்பு தந்தாள். அன்னோன்;
இத்தனையும் தந்தவட்கு முத்தம் தந்தான்.

கருவேல மரத்தடியில், கணவன் தந்த
கனிமுத்தம் தனைவாங்கிக் கொண்டு, மங்கை
திரும்பிவரும் தருணத்தில்; இரண்டு நண்பர்-
செந்தமிழைக் கெடுப்பவர்க்கு வால் பிடிக்கும்
ஒரு தமிழன்; திருகாத மீசை யுள்ளோன்;
வேண்டுமென்றே உண்மைதனை மறுத்துக் கூறி,
வருகின்ற ஓர்தலைவன் தனைக் குறித்து,
வைகின்ற பேச்சுதனை - மேலும் அன்னோர்;

"தமிழரிலே வட நாட்டான் இருக்கு மட்டும்,
தமிழ்நாடு அந்நியர்க்கு அடமா னந்தான்.
அமுதான தமிழ்ச் சொல்லால் "வணக்கம்" என்றால்;
அதை மறைக்க "நமஸ்காரம்" வந்தே தீரும்.
நமக்குள்ளே விரோதிகளை வளர்த்து வந்தால்;
நம் நாட்டில் அந்நியன்தான் குடும்பம் செய்வான்.
சமுதாயம் திருந்துதற்கு, முதலில் இந்தச்
சழக்கர்களின் சதைஉடலைக் கிழிக்க வேண்டும்!

நூலிழைக்குத் தறியிடத்தில் வேலை அன்றி
நல்யாழின் நரம்பினிடம் வேலை இல்லை,
வேலெடுத்துப் போர்புரியும் திராவி டத்தில்
வடநாட்டுக் காரனுக்கு என்ன சத்தம்?
சாலைமரக் கனியோநம் செல்வம்; இங்கு
சஞ்சரிக்கும் அந்நியர்க்கு? இதுநாள் மட்டும்
ஓலையைப்போல் மனம்சுருண்டு விட்டோம்" என்று
உரைத்திட்ட வார்த்தைகளைக் கூர்ந்து கேட்டாள்.

இக்கருத்து முழுவதையும் கேட்டுக் குப்பன்
எடுத்தணைக்கும் பெண்பதுமை எழுச்சி பெற்றாள்.
மக்களுக்கு இனஉணர்ச்சி; அறிஞர் பேச்சால்
மலர்ந்துவரும் நிலை நினைத்து மகிழ்ந்தாள் "நாட்டில்
அக்கரமம் ஒழிவதெந்நாள்? அது ஒழிந்தால்
அன்றோநம் திராவிடர்க்குத் திருநாள்!" என்றாள்.
தெக்கணத்து மயிற்சாயல் காட்டி; கர்ப்பம்
தொகுத்தளித்த அழகுப்பெண் நடந்து சென்றாள்.

இளங்காற்றில் நடுங்குகின்ற ஆடை மீது;
ஏற்படுமே மேடுபள்ளம்; அதனைப் போல,
குளந்தன்னில் சிறு அலைகள், பெரிய மீன்கள்.
குவியாத தாமரைப்பூக் கூட்டம். வாயைப்
பிளக்காமல் தூங்குகின்ற அரும்பு; யாவும்
புதுக்காட்சி தரக்கண்டு; நெருப்பு எண்ணம்
வளர்க்கின்ற கலைஞனைப்போல்; கவிஞ னைப்போல்;
வாரிஉண்டாள் அழகுதனை, விழி இரண்டால்!

பலர் காணும் தாமரைப்பூ தன்னை நோக்கிப்,
பார்வையோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள்.
இலை பார்த்தாள். தன்சேலை நிறத்தைப் பார்த்தாள்.
இளம்பருவ உடல்தன்னைப் பார்த்துக் கொண்டாள்.
சில நாட்கள் ஊர்சென்று, மீண்டும் வீடு
திரும்பிவந்த கணவனைப்போல் ஆவ லோடு;
மலர்மீது கருவண்டு ஒட்டிக் கொண்டு
மருவுகின்ற காதல்நிலை தன்னைக் கண்டாள்.


கண்ணகியின் விழிபோல நிறம் படிந்த
கருவண்டின் உடற்சுமையை, எந்தப் பூவும்
திண்ணமாய்த் தாங்கிவிடும். அன்னம் தன்னை,
சுமந்திடத்தான் தாமரைக்கு சக்தி உண்டு.
விண்மடந்தை லட்சுமியாம்; அந்த மாது
உட்காரும் ஆசனமாம் தாம ரைப்பூ!
பெண்ணழகி கனமெங்கே? அவளைத் தாங்கும்
பூவெங்கே? நம்புவோர்க்கு மூளை எங்கே?

வெண்முல்லை தனைக்கண்டால், பெண்கள்; வெட்டி
வேர்க்கூந்தல் தனில் சூடத் தான் நினைப்பார்.
நண்டுக்கண் போலிருக்கும் வேப்பம் பூவை;
நாடாண்ட தென்பாண்டி நாட்டு வேந்தன்,
கொண்டு வரச் சொன்னதெல்லாம்; குழந்தை போல
கசக்கி எறிந்திடஅல்ல, மாலை கட்ட!
எண்ணத்தில் அறிவிருந்தால், உயர்ந்த மேடை
இருக்கையிலே, பூமீதா ஏறு வார்கள்?

உயிருள்ள தாமரையின் மீது யாரும்
உட்கார நினைப்பதில்லை. நினைக்க மாட்டார்.
அயலாரும், ஆரியரும்; எழுதி வைத்த
அறிவற்ற புராணத்தை மக்கள் நம்பி;
மயக்குகின்ற சித்திரத்தால்; மலர்ந்த பூவை
மங்கைக்குச் சுமைதாங்கி ஆக்கி விட்டார்.
சுயமரியாதைவளர்த்தால்; இதனைப் போன்ற
சித்திரங்கள் அத்தனையும் பாடை ஏறும்!

ஓடுகின்ற காவிரியில்; கங்கை தன்னில்;
உயிர்மீன்தான் அங்குமிங்கும் நீந்தும்; போகும்.
ஏடெதிர்த்து நீந்திடுமா? நீந்திற் றாமே!
இருண்டகருங் கல்கூட தெப்ப மாச்சாம்!
கேடுகளை ஒழிக்காமல், சீர் திருத்தம்
கூறுவதால் பயனில்லை. வெற்றி இல்லை.
நீடிக்கும் சுடர் விளக்கின் நிழலின் மீது
நீர்தெளித்தால், அவ்விளக்கு அணைந்தா போகும்?

எண்ணமிட்டாள் இவ்விதமாய். இளமை யோடு
இருக்கின்ற அரும்புதனைப் பறித்தாள். பின்னர்
வண்ணத்தால், குளிர்ச்சியினால், கீர்த்தி பெற்று;
"மலர்களுக்கே அரசி" எனும் பட்டம் வாங்கி;
கிண்ணம்போல் வடிவுதரும் மலர்க் கூட்டத்தைக்;
கொண்டையிட்டுக் கொண்டிருந்த கோதை கொய்து;
பண்பாடும் வண்டுதனைப் பாடச் சொல்லிப்
பழம்போன்ற தன்வாயை மூடிக் கொண்டாள்!



இதழ் : 'முரசொலி' - 20.8.1954

## அந்த நாளில் இருந்ததில்லை!

வலைவீசும் படலங்கள்; புராண நூற்கள்;
வைப்பாட்டி வைத்திருக்கும் தெய்வம்; யாவும்,
தலைதூக்கா நேரத்தில்; உரிமை தந்து
தமிழரெலாம் ஒரேஉலகம் கண்ட நாளில்;
'மலை' என்ற சொல் உண்டு. 'அசலம்' இல்லை.
'மறை' உண்டு. வேதமில்லை. மீட்டும் யாழில்,
புலமை மிக்கோன் ராவணன்தான் இருந்தான். அன்றிப்
பார்ப்பார நாரதர்கள் இருந்த தில்லை!

விழித்தபடி இருக்கின்ற விழியை நோக்கி
வேல் வந்தால்; விலகிவிட்ட ஆடை தன்னை,
இழுத்துடனே மூடுதல்போல், இமை மூடாமல்;
எதிர்த்திட்ட போர்வீரர் இருந்தார் அன்றி;
செழித்தமரக் கூட்டத்தில் மறைந்து கொண்டு
சூழ்ச்சியுடன் அம்பெய்து, வாலி தன்னை,
அழித்தானே வடநாட்டு ராமன்; அந்த
ஆரியன் போல் பேடிஇங்கு இருந்த தில்லை!

கடன்பட்டோன் தான்பட்ட கடனைத் தீர்க்க,
கால்நடைகள், நிலம், வீடு வாசல் என்னும்
உடைமைகளை தான் விற்பான்; வேறு ஏதும்
வழியில்லை, வகையில்லை, கொடுப்ப தற்கு
முடியவில்லை எனத்தெரிந்தோன்; மானமுள் ளோன்,
மரணத்தை ஏற்பதன்றி-அரிச்சந் ரன்போல்,
கடனுக்கு மனைவிதனை, இங்கே விற்ற
கதையில்லை. சரித்திரத்தில் அழுக்கு இல்லை.

நுரைவட்டம் போலிருக்கும் நிலவு, விண்ணில்
நீந்துகின்ற வேளைதனில் வந்து; பள்ளி
அறைதனிலே எரிகின்ற புகை விளக்கை
அணைத்து அவ் விடந்தன்னை இருட்டு ஆக்கி;
முறை வைத்து, ஐவருக்கு மனைவி யாகி
முத்தமிட்டும்; மற்றுமவள், கர்ணன் என்னும்
துரைஅணைய மாட்டாரா!" என நினைத்த
துரோபதைக்குக் கோயில் அன்று இருந்த தில்லை.

மழைவானம் தனில் தோன்றும் வான வில்லை,
'மேகத்தின் புருவம்' எனக் குறித்தார் அன்றி,
அழிந்துவிடும் இளமைக்கு உவமை காட்ட,
அதை எடுத்துக் கூறவில்லை அந்த நாளில்,
விழிதன்னை மலர் என்றும்; முகத்தில் வைத்த
விளக்கென்றும் வர்ணிக்க மறந்து; பீளை
எழுகின்ற இடமென்னும் கிழ நினைப்பை
எந்நாளும் சொன்னதில்லை நமது முன்னோர்!

கடவுளெனும் தெளிவில்லா நினைவு பற்றிக்
கவலை என்ப தந்நாளில் இருந்த தில்லை.
தடையில்லை காதலுக்கு. சாதி பேதச்
சண்டைஎன்றே ஒன்றில்லை. வாழைப் பூவின்
மடல்போன்ற காதுள்ள குதிரை, யானை,
மற்றும் தேர், காலாட்கள், அனைத்தும் உள்ள
படைவேந்தர் வெற்றிக்குத் திருநாள் உண்டு.
படித்துறைக்கும், கற்களுக்கும் விழாக்கள் இல்லை!

இதழ் : 'முரசொலி' - 27.8.1954

## நடுகல்—வாழ்க!

நித்தம் பிறக்கும் இரத்த வெய்யில்
உலகின் இருட்டை இழுத்து எறிந்தது.
எழுந்தேன். விழிகள் எனக்குமுன் எழுந்தன.

சேர்த்து மனைவியை போத்திய உடம்பில்
போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு
வெளுத்த உலகின் வெளிப்புறம் நடந்தேன்.

துடிக்கும் அலைகள்; தாமரை; ஊரில்
படுத்துக் கிடக்கும் பெருமலை; மாந்தளிர்;
பனித்துளிக் கூட்டம் அனைத்தும் மின்னின.

வெளிமான் என்னும் வேந்தனைக் குறித்துப்
பெருஞ்சித் திரனார் பாடிய பாடலைப்
பாடிக் கொண்டே போகையில்; நெருஞ்சிமுள்
நடக்கும் கால்தனில் நறுக்கெனத் தைத்தது.
குளக்கரை வந்தேன். கோதை ஒருத்தி,
போரிடும் அம்புப் பார்வையால், தோள்தனில்
ஈரப் புண்செய் தென்னை அனுப்பினாள்.

தோலுடல் எரியத் தொடர்ந்து நடந்தேன்.
வீதியின் வழியாய் விரைந்து போகையில்;
மலரின் குழியில் மணிநிற வண்டுகள்
விழுந்து கிடக்கும் விபத்தைக் கண்டேன்.

வாய்க்கால் தாண்டி வரப்பிலே நடந்தேன்.
வயலில் நிறுத்திய பயிரின் வகைகள்,
தண்ணீர் கேட்டு என்னை நிறுத்தின.
மூடிக் கிடந்த மடையைத் திறந்து
அவற்றின் தாகம் அடக்கினேன். நடந்தேன்.

முள்ளுக் கருவேல் மரத்தைக் கண்டு
பற்குச்சொடிக்கப் பறந்தேன். ஓடித்தேன்.
திரும்பினேன். கண்கள் திரும்பின வேறிடம்.
பாழ்மண் டபத்தின் பக்கமாய் நின்ற
வயோதிகக் கருங்கல் வாவென் றழைத்தது.
ஊமைக் கல்லிடம் உடனே ஓடினேன்.

அந்தக் கல்லின் அங்கம் முழுவதும்
எழுத்து வரிசை இருப்பதைப் பார்த்து
ஆசையோ டதனை வாசிக்க லானேன்.

வெண்பூதி யாரெனும் வெண்கவி யின்மகள்;
கொல்லன் அடித்துக் கொடுத்தவா ளேந்தி;
கழுமலம் எனுசீர் காழிச் சண்டையில்
எதிர்த்த எதிரியை எதிர்த்துப் புகழோடு
இறந்தாள் என்ற சிறந்த சரித்திரம்
அந்த வரிகளில் அடங்கி இருந்தது.

அந்தநாள் தமிழரை, அப்போது பெண்கள்
இருந்த நிலையை; மாதர்க்கு ஆண்கள்
தந்த சுதந்திரத் தன்மையை; ஒருமுறை
நினைத்தேன்; எனது நெஞ்சம் குளிர்ந்தது.

வீர மங்கையின் வாழ்க்கையைச் சொல்லும்
நடுகல் லேநீ வாழ்க.
என்று வாழ்த்தி இடம்பெயர்ந் தேனே!

இதழ் : 'முரசொலி' - 3.9.1954

## புரட்சிக் கவிதை...

அடுக்கடுக்காய் சிலரிடம் போய் செல்வம் சேர
அதை இழந்த பலமக்கள் ஏழை யாகித்
துடிக்கின்றார் புழுப்போல. பிச்சைக் காரர்
தினந்தோறும் பெருகுகின்றார். இதை உணர்ந்தும்,
தடுத்து அதை மாற்றாமல்; இரப்போ ருக்குத்
தர்மத்தைச் செய்துவரின், எந்த நாடும்
அடையாது பொது உடைமை. ஆகை யாலே,
அறஞ் செய்ய விரும்பாதே முன்னோர் போல.

நீக்கமற நிறைந்துள்ள கடவு ளுக்கு,
நிறமில்லை, வடிவில்லை என்றால்; தச்சன்
ஆக்கிதரும் மரப்பதுமை மட்டும், தெய்வம்
ஆய்விடுமா சொல்லுங்கள்? என்று, பக்தர்
மூக்குதனை உடைக்கின்ற கேள்வி கேட்டு
விரட்டாமல், தோள்மீது வாக னத்தைத்
தூக்கிவினை செய்யாதே... செய்தால் இந்த
தேசத்தில் உன்னைப்போல் முட்டாள் இல்லை.

வாடுகின்ற ஏழைமக்கள்; ஓடெடுப் போர்;
மான்விழிபோல் சாளரங்கள் அமைந்த, மாடி;
வீடுகளில் வசிப்பவர்கள்; உயர்வு; தாழ்வு;
வேண்டாத வேற்றுமைகள்; இதனைப் போன்ற
மேடுபள்ள மனப்பான்மை யோடு, இந்த
மேதினியை ஓர் தெய்வம் படைத் திருந்தால்;
மூடர்களை அறிவுள்ளோர் வெறுத்தல் போல
மதியற்ற தெய்வமிகழ். கும்பி டாதே!

மார்தட்டி, கூர்மீசை திருகி, ரத்த
வாளெடுத்து, "அந்தணரி"ன் தலை எடுத்துப்
பார்த்திட்ட தென்னாட்டான். இனத்தைக் காக்கப்
போரிட்டோன். புவிப்பெரியோன். இரண்யன் தன்னை,
ஆரியர்கள் கூறுதல் போல், "அரக்கன்" என்று
இழித்துரைக்கும் தமிழ்மகனைப் பார்த்தால், பூணூல்
"பார்ப்பானின் கையேடே!" என்று கூவு.
பளிச்சென்று சுளிக்கச் சொல். பயப் படாதே.

நீர்மீது கொட்டிவிட்ட உப்பு போல
நம் தமிழர் வரலாற்றை அழித்த, ஆதிப்
பார்ப்பனரின் சாத்திரங்கள்; அதனை நம்பிப்
பாடிவைத்த நம்புலவர் பாடல், யாவும்,
வேர்வையைப்போல் பயனற்ற தண்ணீர். இந்த
விளக்கத்தை மறுப்பவர்கள், முன்னோர் கண்ட
சீர்த்திருத்தம் கொல்பவர்கள். அவரை எல்லாம்
துன்பத்திற்கிடங்கொடுத்துத் திருத்த வேண்டும்.

கோடையிலே பாடுகின்ற குயிலே! கண்கள்
கொத்தி இங்கு அழைத்துவந்த அழகே! சங்க
எடுதரும் பாடல்களின் சுவையே! அந்தி
இளங்காற்றே! எனப்புகழ்ந்து, பிறகு முத்தம்,
ஆடுகின்ற தருணத்தில்; உடலில் உள்ள
அணு அனைத்தும் பூரித்து மயங்க, இன்பம்
தேடுகின்ற நடு இரவில்; இனிக்க வைக்கும்
தையல்சொல் கேட்பதுபோல், போதை இல்லை!

இதழ் : 'முரசொலி' - 10.9.1954

## சிறந்தது எது?

வீரர்களில் சிறந்தவன்யார்? என்றால், செந்த
மனைவிதனைப் பறிகொடுத்துப் பிறகு மீட்ட,
ஆரியரின் பேரரசன் இராமன் என்பர்.
அவனல்ல, ராவணன்தான் வீரன்என்பேன்.
தேரெடுத்து, வாளெடுத்துப் படையெ டுத்துச்
சாகடித்துத் திரும்பிவந்த நம் கலிங்கப்
போரிருக்க; பாரதப்போர் தன்னைப் பற்றிப்
புகழ்வோனைப் புல்லனென்பேன். பேய னென்பேன்!

மலைகளுள் சிறந்ததெது? இதுபோல் கேட்டால்,
மேருஎன்பர். பொதிகைஎன்பேன். இமயம் போன்ற
தலைஉயரம் தென்மலைக்கு உண்டோ? என்றால்,
தென்றல்தனை மேருமலை தருமோ? என்பேன்.
நிலந்தடவி, ஊர் தடவி, நிலவை நோக்கும்
நிர்வாணக் கடல் தடவும் கங்கை ஆறு;
தலைபோன்ற தென்றால்; அத் தலையின் கண்கள்
தென்னாட்டின் காவிரிதான் என்று சொல்வேன்.

இலைதனிலே சிறந்ததெது? என்று கேட்டால்,
எருதேறும் சிவபெருமான் பக்தர்; வில்வ
இலைஎன்பர். வைணவத்தை வளர்ப்போ ரெல்லாம்
இல்லை இல்லை துளசிதான் சிறந்த தென்பர்.
சிலைவணக்கம் செய்தவனை மறுத்து, பொங்கல்
திருநாளைக் கொண்டாடி வந்த சோழன்
மலைமார்பில் அசைந்திட்ட ஆத்தி மாலை,
வைத்திருந்த பச்சிலையே சிறந்த தென்பேன்.

உடைதனிலே உயர்ந்ததெது? என்று, நாட்டில்
உள்ளவரை நாம்கேட்டால்; காதல் செய்யும்
துடியிடையாள் உடுத்திவரும் சேலை தன்னைச்
சிறந்ததென்பர் மயக்கத்தில்! நானோ; சோறு
வடித்ததொரு பானையைப்போல் தலை குனிந்து,
வாடுகின்ற ஏழைதனைப் பார்த்து; 'இந்தா
உடுத்துஇதை' எனக்கொடுக்கும் கிழிந்த கந்தல்,
ஒளிவீசும் பட்டைவிட உயர்ந்த தென்பேன்.

நாட்களிலே சிறந்ததெது? என்று கேட்டால்,
ஞாயிறென்பர். திங்களென்பர்; நம்மை எல்லாம்
ஆட்டிவைக்கும் எம்பெருமான்; தூது சென்ற
அந்நாளே புனிதமென்பர் புராணப் பித்தர்.
வாட்களினால் புண்பட்டு; மார்பை நோக்கி
வருகின்ற வேலுக்கு வரவு தந்து,
நாட்டுக்கு உயிர்தன்னைத் தந்தான் என்னும்
நற்சேதி கேட்கும்நாள் சிறந்த தென்பேன்.

சுவைகளிலே சிறந்ததெது? இந்தக் கேள்வி
சிலர்காதில் விழுந்தவுடன்; விரகத் தாலே
தவிக்கின்ற தருணத்தில், தையல் வந்து
தருகின்ற முத்தமென்பர். தமிழ்தான் என்பேன்.
சிவனென்ற பார்ப்பானும், வெண்ணை தன்னைத்
திருடியுண்ட திருமாலும்; தெய்வம் என்று
கவிஎழுதிக் கடவுள்நெறி தனைக் கெடுத்த,
கம்பர்களை; கலைஞர்களைத் துரோகி என்பேன்.

இதழ் : 'முரசொலி' - 17.9.1954

## கற்றவனின் காதலி!

சேலைஅசைய; நிழல் அசைய - இரு
செவ்வாழைத் தண்டு தொடை அசைய-முத்து
மாலை அசைய; வளை அசைய - ரச
மாம்பழக் கன்னத்தின் மேடசைய - நெய்யும்
நூலிடை பூங்கொடி போலசைய - கலை
நெஞ்சில், தமிழின் நினைவசைய - இரு
காலில் படிந்த சிலம் பசைய - கடல்
கண்ணசைய; வஞ்சி வீடுவந்தாள்.

"மந்திரமாவது நீறு" என்னும் - தே
வாரப்பதிகத்தைப் பாடிக் கொண்டே - அங்கு
வந்தஇளைஞனைக் கண்ட உடன் - 'அத்தான்
வா' என்று வஞ்சி அழைக்க லுற்றாள் - "அடி
இந்தா கொடிமுல்லை, சூடிக்கொண்டு - என்னை
எச்சில் படுத்துஉன் முத்தத்தினால்!" - என்று
சந்தனம் வீட்டில் இருக்கையிலே - வெந்த
சாம்பலைப் பூசுவோன் கெஞ்சி நின்றான்.

பெய்யும் மழைபோல் உதவி செய்யும் - மங்கை
பேசாதிருந்திட; மீண்டும் அவன் - "துயர்
செய்யும்காதல் பருவம் என்னை; - விழி
தூங்க மறுக்குது ராத்திரியில்! - அடி,
வெய்யில் அடிக்கையி லேஉதவா - குடை
வீட்டில் இருந்துதான் என்னபயன்? - நான்
கொய்யும் கனிதன்னை எத்தனைநாள் - வீட்டுக்
கொம்பில் இருக்க விடுவ" தென்றான்.

"ஆவணி மாதத்தில் உன் கழுத்தில் - மஞ்சள்
ஆவாரம் பூத்தாலி கட்டுகின்றேன் - பின்பு
கோவில்குளம் எங்கும் போய்வரலாம் - இன்று
கொஞ்சம் பசியைத் தணித்திடடி! - பச்சை
மாவிலை போன்ற பசுங்கிளியே! - வைர
மாலை தரும் அழகின் ஒளியே! - எந்தன்
காவிச் சிவப்பு உதட்டினிலே - கட்டிக்
கற்கண்டு ஒற்றடம் தந்திடடி".

முத்தன் இதுபோல் மொழிந்திடவே - "வஞ்சி
வேடிக்கையாய் உரை யாடிக்கொண்டு - இங்கு
எத்தனை மரங்கள் நிற்கின்றன? - இதை
எண்ணி சரியாகச் சொல்லு" என்றாள் - அவன்.
மொத்தக் கணக்கிட்டு, முப்ப தென்றான் - அதை,
வஞ்சி மறுத்து, சிரித்தபடி - "சரி
அத்தோடு உன்னையும் சேர்த்துக் கணக்-கு
அளிக்கத் தவறினை, அத்தான்!" என்றாள்.

"அப்படி எனில் நான் ஓர்மரமா?" - என்று
ஆத்திரத் தோடவன் கேட்கையிலே - அந்த
செப்புச் சிலை நிகர் சுந்தரியாள் - தன்
சேல் விழியை அவன் மேல் திருப்பி - அத்தான்
இப்படிவா என்றாள். வந்து நின்றான், - 'கல்வி
அற்றவனும் மரம் போன்றவனே! - இது,
இப்போது நான் சொல்லும் வார்த்தையல்ல - ஔவை
எடுகுறிப்பிடும் பட்டப் பெயர்!"

எட்டிப்பழம்போல் அழ கிருந்தும் - கல்வி
இல்லாவிடில் மேன்மை இல்லைஅத்தான் -செப்புத்
துட்டுக்குப் பொன்ஒளி வந்திடுமோ? - சிலை
செய்திட, செங்கல் உதவிடுமோ? - உயிர்
விட்டுப் பிரிந்தாலும் விட்டுவிடாப் - புகழ்
உண்டாக்கும் கல்விநீ கற்றுவரின் - என்னைத்
தொட்டு சுகிக்கலாம் என்றுரைத்தாள் - "சரி
சென்றுவருகிறேன்" என்று சென்றான்.

சைந்திரம் என்னும் நகரடைந்து - அங்கு
சாலியனார் என்னும் ஆசானிடம் - ஒரு
ஐந்து வருடம் தொடர்ந்தபடி - புது
அறிவு புகட்டும் மதுரைத்தமிழ் - கற்று,
நைந்தநினைவு நிறைந்த திருந்தோன் - மெச்சும்
நல்லஅறிஞனாய் மாறிவிட்டான் - இதைப்
பைந்தமிழ்க் காதலி கேள்விப்பட்டாள் - அவள்
பாராட்டை, முத்தனும் கேள்விப் பட்டான்.

"ஆட்டுத் தலைபோன்ற கொண்டையிலே - உயிர்
அற்றகுறிஞ்சி மலர் அணிந்து - தமிழ்ப்
பாட்டுப் படித்திடும் பெண் அமுதே! - புதுப்
பாசக் குருவியே! பால்நிலவே! - கற்றுக்
கேட்டுத்தெளிந்து புலமை பெற்றேன் - இனி
கோவை இதழ்தர அட்டியுண்டோ?" - என்று,
கேட்டு ஓலையை முன் அனுப்பி - இனிக்கும்
கலவை முத்தம் வைத்திடப் பின்னே வந்தான்.

வாசிக்கச்சென்று திரும்பி வந்த - அறி
வாளனைக் கண்டதும், வண்ணக்கொடி - காதல்
ஆசையுடன்ஓடி 'அத்தான்' என்றாள் - அவன்,
ஆனந்த ஓசையால் 'அன்பே' என்றான் - பின்னர்
"மாசில் வீணை என்று, 'பாடு' என்றான் - ஏன்?
மந்திரமாவதென்று நகைத்தாள் - சேதி
பேசத் தொடங்கினள், பெண் வடிவம் - பேச்சைப்
பின்னத் தொடங்கினன், பேரறிஞன்!

"சின்ன விழிதனில் விண்ணழகு - காட்டும்
சித்திரமும் கல்விப் பத்திரமே! - நீ
என்னை அறிவாளி ஆக்கிவிட்டாய் - நானும்
என் அறியாமையைப் போக்கிவிட்டேன் - அடி
உன்னை மனமார வாழ்த்துகின்றேன் - நாட்டில்,
உள்ள கொடுமையை வீழ்த்து கின்றேன் - இனி
அன்னந்தண்ணீர் ஏதும் வேண்டாமடி - நீ
அருகில் இருக்கையி லேமயிலே!

வள்ளுவன் என்கின்ற பேரறிஞன் - தந்த
வாழ்க்கை முறைநூல் இருக்கையிலே - நம்மைக்
கொள்கை அடித்திடும் ஆரியர்கள் - இங்கு
கூறும் மனுநூலைப் போற்றுகின்றோம் - சிறு
எள்ளுப்பூ மலர் பூத்திருக்க - ஒரு
.......................................
கள்ளிப்பூ மீதுகை நீட்டுவதோ - கருங்
கூந்தலுக்கு மலர் தேடுபவர்?

நல்லோர்கள் கூறிய தெய்வத்திற்கு - ஒரு
நாடில்லை; வீடில்லை; ரூபமில்லை; - மக்கள்;
புல்லர் புராணத்தை நம்பியதால் - பாம்புப்
புற்றுகூட கோயில் ஆயிற்றடி - புது
அல்லிமலரே! நமக்கு மணம் - இங்கு
ஆயின பின்னர் உடனடியாய் - கோயில்
இல்லாத ஊரில் குடியிருப்போம் - என்றான்.
இன்பப்பதுமை தலை அசைத்தாள்.

சந்நதி முன்சென்று, நந்திதனைப் - பார்த்து
சற்றேவிலகி இருக்கச் சொன்ன - பக்த
நந்தனார்போலக் கல் தெய்வங்களை - நம்
நாட்டினை விட்டே விலக்கிடுவோம் - அடி,
கந்த புராணத்தில் தீயிடுவோம் - புத்தன்
கொள்கையை எங்கும் பரப்பிடுவோம் - நம்மைத்
தொந்தரவு செய்யும் சாதிமதங்களை
செத்து மடிந்திடச் செய்திடுவோம்.

ராவண காவியம் ஒன்றெழுதி - அதில்
ராமன் அயோக்கியன் என்றுரைப்போம் - வான
தேவர்களை திரு வள்ளுவ நாயனார்
சொன்ன துபோலக் கயவர் என்போம் - பஜ
கோவிந்த பக்தர்கள் செய்துவரும் - கதா
காலக்ஷே பத்தை ஒழிக்காவிடில் - தலை
சீவிய முண்டம்போல் செத்துவிடும் - தமிழ்
சங்கத்து எட்டுச் சரித்திரங்கள்!

ஒத்தஅழகு உனக் கிருந்தும் - அன்று
ஓதா திருந்தினை; நான் மறுத்தேன் - இன்றோ,
முத்தமிழ் கற்றுத் தெளிவடைந்து - நீ
முன்னேற்ற எண்ணம் படைத்துவிட்டாய்! - கடல்
கத்தும் உலகில் நீ பேரறிஞன் - நான்
கற்றவன் காதலி ஆகிவிட்டேன்! - இதழ்
முத்திரை இட்டு மகிழ்ந்திடுவோம் - என்று
மங்கை முடித்தனள் பேச்சுதனை.

"முல்லைக்கு ஏதடி உன்சிரிப்பு? - கடல்
முத்துக்கு ஏதடி உன்மதிப்பு? - வான
வில்லுக்கு ஏதடி உன்அழகு? - கெண்டை
மீனுக்கு ஏதடி உன்துடிப்பு? - தமிழ்ச்
சொல்லுக்கு தான்உண்டோ உன் இனிமை! - என்று
சொல்லி முடிக்கும் சமயத்திலே - அவள்,
கொல்லி மலைமார்பில் சாய்ந்துவிட்டாள் - அன்னோன்
கொஞ்சத் தொடங்கினன் வஞ்சிதனை.

சித்திரக் கன்னத்தில் முத்தமிட்டான் - புறா
சத்தமிடுதல் போல் சத்தமிட்டாள் - மார்பில்
முத்து வடங்கள் அழுந்து தென்றாள் - கிளி
முக்குநகம் காயம் செய்யுதென்றான். - சோழன்
கத்தி வெளிச்சத்தைப் போலிருக்கும் - அவள்
கண்ணின் வெளிச்சத்தைப் பார்த்தபடி - பெண்ணே!
கொத்தி வருத்திடும் காதல்பசி - மட்டும்
கூட்டு முறையில்தான் தீருமென்றான்.

ஈரப்பனிஎன்னை வாட்டு தென்றாள் - மங்கை
இன்பசரீரத்தைப் போர்த்திக் கொண்டான் - அவள்
ஊரேஉறங்குது என்று சொன்னாள் - அவன்
ஓராயிரமுத்தம் வேண்டு மென்றான். - அவன்
கூரானகண்ணை சிவக்க வைத்தாள் - அவள்
கோவை உதட்டை வெளுக்க வைத்தான் - நோய்
தீராத சந்திரன் தொங்கையிலே - நோய்
தீர்த்தனர், தூங்கினர், தோட்டத்திலே!

இதழ் : 'முரசொலி' - 24.9.1954

## சண்பகமரம் சாய்ந்தது

கொக்கரித்துப் பாயட்டும் நமது கத்தி
கொலைசெய்து பருகட்டும் புதிய ரத்தம்
தெக்கணத்துச் சிங்கங்கள்! எழுவீர் - என்றோர்
தமிழ்ப்பாடல் படித்துக்கொண் டிருக்கும் போது;
சிக்கிவிட்டாய் மரணத்தின் கரத்தில் - என்ற,
சேதிதனைக் கேட்டவுடன் எனது கண்கள்,
கக்கிவிட்ட கண்ணீரில், மூழ்கி விட்டேன்.
கவிமணியே கனலுக்குள் மூழ்கி விட்டாய்.

முள்வெடுத்து ஆசிரியர் தடுக்கில் குத்தி
வைத்திட்ட பருவத் திலே துடுக்குப்
பிள்ளைஎனப் பேர்பெற்றாய். மனையாட் டிக்குப்
புருடனெனப் பேர்பெற்றாய். இந்நூற் றாண்டில்;
தென்னுதமிழ்ப் பெருங்கவிஞன் எனும்பேர் பெற்று,
சிலகாலம் நோயாளி யாகி; இன்று
பிள்ளைஇல்லா மனைவிஅழ, பிணம் என் கின்ற,
பேர்பெற்றாய்! பிணமாகாப் புகழைப் பெற்றாய்!

கற்றவனே! மயில்மேயும் மலை நிலத்தின்
கருப்பொருளைப் போன்றவனே! மரணம் வந்து-
விற்றதொரு பொருளைப்போல் எடுத்துக் கொண்டு
ஓடிற்றோ, உன்உயிரை! இல்லை நீதான்;
நெற்றாகி விட்டதொரு தேங்காய், ஓர்நாள்
நிச்சயமாய் விழத்தானே வேண்டும்-என்று,
சுற்றத்தார் வாயலற. விழிப்பே இல்லா
தூக்கத்தில் கனவின்பம் காண்கின் றாயோ!

பானைஉடைந் தால்அந்தப் பானைக் குள்ளே,
பரவியுள்ள காற்றுஅவ் விடத்தை விட்டு,
வான்நோக்கி நகராது. அதனைப் போல,
வைகுந்தம் எவர்மூச்சும் போவ தில்லை.
தேனுக்கு நிகரான தமிழை விட்டு;
சுவைவிட்டு; சுகம்விட்டு; உயிரை விட்டு;
ஏனோசெந் தமிழ்நாட்டை ஏங்க விட்டு;
இடுகாட்டில் வெண்சாம்பல் ஆகி விட்டாய்!

சோலையிலே சஞ்சரிக்கும் குயில்கள்; இன்றோர்,
சண்பகப்பூ மரம்சாய்ந்த தென வருந்தும்.
காலையில்நீ இருந்தாயே! எம்மை எல்லாம்
கைவிட்டு மறைந்தாயே - என்று, செய்யுள்
ஓலையெல்லாம் ஒப்பாரி வைத் திருக்கும்!
வீடெல்லாம், நாடெல்லாம், அழுதி ருக்கும்!
மாலையிலே இறந்தஉன் உடலை வந்து
மொய்த்திருக்கும் ஈகூட அழுதி ருக்கும்!

ஒப்பற்ற ஒருமுத்து, பாண்டி தன்னில்
ஒளிவீச, அம்முத்து போன்ற நீயும்,
அப்பரைப்போல் எண்பத்தோ ராண்டு வாழ்ந்து,
அங்கத்தில் சுருக்கங்கள் தாங்கி னாலும்,
எப்போதும் இப்புவியில் இளமை யோடு
இருக்கின்ற கீர்த்திபெற்றாய். அந்தக் கீர்த்தி,
முப்போதும் தவராது! நிழலுக் கென்றும்
மூப்பு நரை, ஏற்படுவ தில்லை அன்றோ!

வடமொழியில், செந்தமிழில், புலமை மிக்க
மறைமலைக்கும்; அறிஞர்பண் டித மணிக்கும்;
குடங்குடமாய்க் கண்ணீரை வடித்தும்; பின்னர்,
கலைவேந்தர் திரு.வி.க. பெரியா ருக்கு,
மடைதிறந்த வெள்ளத்தை விழியால் தந்தும்;
மனமொடிந்து இருக்கையிலே, நீயும் உந்தன்
கடைமூடிக் கொண்டாயே சரியா? நாஞ்சில்
கவிமணியே! இனிஅசையா மணியே! அந்தோ!

இதழ் : 'முரசொலி' - 1.10.1954

## நெடுஞ்செழியன்

அடி யடா முரசு - இடி
அதிர் வதைப் போலே!
கடல் குரல் எழுப்பு - பகை
காதினைப் போய்த் தொடட்டும்.
நடத் தடா படையை - நம்
நாட்டை எழுப்பி விடு.
அடி! உதை! குத்து! - வெட்டு!
அனைத் தையும் தொடங்கு.

துடிக்கும் நம் பகைவர் - தலைத்
துண்டுதுண் டாக்கி வரக்
கிடைத்த தடா வேலை - போர்க்
களத்தில் வாட்க ளுக்கு!
அடைக் கலம் என்று - பகை
அரசர் கூறும் வரை;
நடத்து வோம் போரை, - போய்க்
கொண்டு வா தேரை!

எழுச்சி வீரர் களே! - நமை
எதிர்க்கும் நாட்டி னரை;
அழுதிட வைப் பீர் - நீர்
அருவி யைப் போலே!
அழுத் துக சேற்றில் - கல்லை
அழுத்து தல் போலே!
கிழித்து விட்டெறி வீர் - ரத்தக்
கிணறு கள் செய்வீர்!

'பொக்கி கள்' என்றானே! - அந்தப்
பஞ்சாங்க நாட்டு மன்னன்;
முக்கிய மாய் அன்னோன் - தலையை
மோதிடு வீர்' மலையில்!
செக்கச் சிவக்க வைப்பீர் - சென்று
சண்டை செயும் களத்தை!
'கக்கரிக் காய்' அவர்கள் - சீவும்
கத்தியைப் போன்றவர் நாம்!'

திறந்த இவ்வுல கில் - உள
தேசங்க ளத்த னையும்;
பறந்து தாக்கி டினும் - தமிழ்ப்
படை யை வெல்லாது,
பிறை பிறை யாக - நிலவைப்
பிளவு செய்வது போல்;
நறுக்கு மோ வானம் - வட்ட
நெருப்புச் சூரி யனை!

ஊரதி ரும்படி யாய் - மன்னன்
உரைத்த னன் இதுபோல்.
வீர ரெலாம் கேட்டு - ஆ
வேசத் துடன் எழுந்தார்.
காரிய மின்றி அங்கு - வந்த
காவித் துணி முனிவன்;
போர்விழி வேந்த னிடம் - சில
பேசத் தொடங்கு கின்றான்.

சங்கு எடுத் தெறியும் - கிழ
சமுத் திர வேந்தே!
அங்கந் தனை அழிக்கும் - கொலை
ஆயுதக் கூட்டத் தோடு'
எங்கு அனுப்பு கின்றாய் - நீ
இப்படை தன்னை? என்றான்.
சிங்கத்தை வெல்லு கின்ற - நெடுஞ்
செழியன் சொல்லு கின்றான்;

சுவைக்கும் செந்தமி ழில் - தம்
சொந்த மொழி நுழைக்கும்;
சிவத்த தோலுடை யோர் - பொருள்
சுரண்டும் தீய வர்கள்;
புவி தனைக் கெடுப்போர் - பொய்
புரட்டு செய்திடு வோர்; - தமை,
அவித்த நெல்லது போல் - யாம்
ஆக்கி வர விடுத்தோம்!

சந்தன நாடு தனை - வேல்
சண்டை யினால் தொடுவேன்.
குந்தல நாட்டி னரைக் - கப்பம்
கட்டிட வைத்திடு வேன்.
கொந்த ளித்து எழுந்த -தமிழ்க்
கூட்டம் சில தினத்தில்;
தந்திர மாய் நடக்கும் - வடக்கைத்
தவிடு பொடி யாக்கும்!

செங்கதிர் போய்ப் படியும் - மேற்
றிசை தனைப் பிடிப்பேன்.
கங்கைக் கரை யினரை - என்
கத்திகள் குத்தி வரும்!
அங்கு மிங்கும் இருக்கும் - நா
டனை த்தும், காலடியில்!
எங்கும் எனது கொடி - பிற
கெல்லாம் எனது இட்டம்!

வெள்ளிச் சிரிப் புடைய - வீர
வேந்தன் இது உரைக்க;
குள்ள உருவுடை யோன் - இது
கேட்டுச் சிரித்து; புது
வெள்ளத்தைப் போல் சிவந்த - மேல்
வேட்டி தனை எடுத்துப்
பிள்ளையைப் போல் தனது - தோளில்,
போட்டனன். பேசு கின்றான்;

குப்பை உலகம் இது! - இங்கு
காணும் பொருள் அனைத்தும்
சொப்பனம் போல் மறையும் - உருத்
தோற்றங்கள், கண் மயக்கம்.
உப்பு நிறைந்த உடல் - பெற்றோர்
எச்சிலின் அச்சுகள் நாம்.
எப்பொழு தும் அழுகை - தனை
ஏற்படுத் தும் உலகம்!

விண்ணுக்கு உண்மை யிலே - நீல
வண்ணம்; வடிவு; இல்லை.
கண்ணின் முடிவுகள் தான் - பகற்
காலமும் ராத்தி ரியும்!
விண்ணுலகென் றழைக்கும் - மோட்ச
வீட்டை அடைவதற்கு;
பெண்டு, பிள்ளை, பொருள்கள் - யாவும்
பெருந் தடை கற்கள்!

இதை உண ராமல் - நீ
ஏதேதோ பேசு கின்றாய்.
குதித் திடு கின்றாய். பொங்கிக்
கொதித் திடு கின்றாய்.
அதுகிடக் கட் டும் - உன்
ஆசை நிறை வேறின்;
புது திட்டம் உண்டோ - ஏதும்?
பார்த்தி பனே! என்றான்.

அத்தனை நாட்டி னுக்கும் - யான்
அதிப னாகி; நிலா
ஒத்த குடை நிழலில் - பல
வருடம் ஆட்சி செய்து;
முத்திரைப் பொன் முடியை - முடிவில்
மைந்த னிடங் கொடுப்பேன்.
சத்த மிடும் உலகில் - பின்னர்
சத்த மிடா திருப்பேன்.

தூண்டும் வெறி உணர்வால் -தீய
செய்கை புரிந்திடு வோர்;
கூண்டு உலகி னிலே - சுகம்
கண்டவர்; காணா தவர்;
ஆண்டு அலுப்ப டைந்தோர் - வய
தானவர்; யாவ ருக்கும்;
வேண்டு மன்றோ ஓய்வு? அதுவும்
வேண்டு மன்றோ மூப்பில்?"

"முள்ளு மனது டையோர் - மூடர்;
முன்னர் பிழை புரிவர்;
உள்ளம் பின்னர் தெளிவர் - இதில்
ஒன்றும் வியப்பு இல்லை.
தெள்வத் தெளிந்த வர்கள் - குற்றம்
செய்து திருந்து வதில்,
எள்ளள வும் பெருமை - நான்
இல்லை என்றே உரைப்பேன்.

கத்திக் கொலை தனிலே - வீரம்
கண்டு; கடைசி யிலே
உத்தம னாயி ருக்க - நீ
விரும் புதல் சரியா?
சத்துவ காரியத்தை - உடனே
செய்திடல் வேண்டா மோ?
உத்தமன் ஆவ தற்கு - நாள்
வாரத்தைப் பார்ப்ப துண்டோ?

சொன்னான் இது போல - முனிவன்.
தேசத்தை ஆளு பவன்;
என்றோ ஒருநாள் நீ - நிச்சயம்
இறக்க வேண்டு மன்றோ?
இன்றே இறந்து விடேன் - என்று
எதிர்த்து கேள்வி இட்டான்.
ஒன்றும் விளங்காமல் - முனிவன்
விழிக்க, வேந்தன் சொல்வான்;

புல்வர் தமை எதிர்த்தே - இனப்
போரிட்ட ராவ ணனை;
நல்ல தமிழ் மகனை - வீர
னாக இறந் தவனை;
பொல்லா அரக்கன் என்றே - பூ
ணூல் கூட்டம் சொன்னது போல்,
வெல்லச் சுவை உலகை - நீ
வேம்பென்று கூறு கின்றாய்.

நீலக் கரு விழியை - பனை
நுங்கு என்றெ பழிக்கும்;
ஓலைச் சுருவது போல் - சுருள்
உள்ளம் வளர்ப் பவனே!
வாலிப ஆனந் தமும் - பெண்கள்
வைத்திருக் கும் இனிப்பும்
சோலை கனிச் சுவையா? - எட்டி
போலக் கசப் பவையா?

முற்றிய தாடி உள்ள - முழு
முடனே"! எப்பொழு தும்,
சுற்றி வரும் உலகம் - விழி
சொப்பனம், மாயம், எனில்;
மற்றவர் தோற்று வித்த - சாதி
மதம் சடங் கனைத்தும்,
கற்பனை ஆகு மன்றோ? - கடவுள்
கருத்தும் பொய்மை அன்றோ?

உடைமை, மக்கள், மனை - சுகம்
ஊட்டும் மனைவி; எலாம்;
தடங்கல் மோட்சத் திற்கு - என்னும்
தீயனே"! தீயின் புகை;
தடுக்கி வீழ்வ துண்டோ - இந்தத்
தாரணி யில் யாரும்?
குடிக்க நீர் கொடுக்கும் - மணற்
கேணி கவிழ்வ துண்டோ?

செவ்விதழ் தாம ரையும் - துள்ளும்
சேல்விழி மங்கை யரும்;
அவ்வள வவ்வள வாய் - வளர்
அந்திப் பிறை நிலவும்;
ஒவ்வொரு ஆசை தரும் - மலர்;
ஓடும் நதிகள்; கண்டு,
இவ்வுல கம் அழகின் - வேலை
என்பதை யார் மறுப்பர்?

திரு விழா இருந்தும் - பெருந்
துக்கத்தை மெச்சி வரும்,
குருக்கள் ஆரி யனே! - சிறு
குள்ள நரிப் பயலே!
திருக் குறள் பிறந்த - தமிழ்
தேசம் முழு வதையும்,
இருட்டு ஆக்கு கின்றாய் - நீ,
என்று உரைத்த படி.

எடுத் தனன் கொலைவாள் - வெட்டி
எடுத் தனன் தலையை,
முடிந் ததே மூச்சு - தலை
வீழ்ந் ததே தரையில்!
கொடிய ஆரி யர்கள் - இது
கேட்டு நாடு விட்டு,
எடுத்தனர் ஓட்டம்! - வேந்தன்,
ஏறி னன் தேரில்!

இதழ் : 'முரசொலி' - 8.10.1954

# இப்படிக்கு...

வடவேந்தர் உடல்கிழித்தேன்; வேங்கை போல!
மார்தட்டும் பகைவர்தமைக் கொன்று கொன்று,
ஓடிபட்டேன். கொல்லனிடம் அடிகள் பட்டேன்.
உடனேநான் செப்பனிடப் பட்டேன். மீண்டும்;
படைவீரன் வலக்கரத்தில் வசித்தேன். போரில்
பச்சை ரத்தம் பருகினேன். ஆனால் இன்றோ;
எடுப்பதற்கு ஆளின்றித் துருப் பிடித்து
இருக்கின்றேன் - இப்படிக்கு இரும்புப் போர்வாள்!

ஆவின்பால், கொம்புத்தேன், மற்றும் உள்ள
அபிடேகப் பொருள்போல; என்னைக் கொய்து
கோவிலுக்குள் அனுப்பாதே. நட்ட கல்லைக்
கும்பிடநான், பக்தனைப்போல் மூடனல்ல.
பாவுக்குள், வெண்பாவே சிறந்த தென்பர்.
பூவுக்குள் அப்படித்தான் நானும், வாழ்வில்,
தேவையுள்ள கீர்த்திபெற, என்னைப் பார்த்துத்
தெரிந்துகொள் - இப்படிக்குத் தாம டைப்பூ!

மழைஎன்னும் நீர்க்கோடு; என்மேல் வீழ்ந்தால்,
மனைவிதொட்ட கணவன்போல் குளிரு கின்றேன்.
பழம்போல சுவையூட்டும் பெண்கள்; என்மேல்
படிந்தவுடன் மயங்குகின்றேன். 'தமிழர்க் கூட்டம்
எழுந்ததுபார்' என்கின்ற குரலைக் கேட்க;
எதிரிகளின் பிரேதத்தை, ரத்தந் தன்னை,
இழுத்துக்கொண் டோட, இன்று விரும்பு கின்றேன்.
இப்படிக்கு ஓடங்கள் உலவும் ஆறு!

மண்ணுக்குள் வேர்நுழைத்து, விண்ணை நோக்கும்
மரங்களுக்குள்; வீரன்புகழ் எனக்கே உண்டு.
உண்மைஇது. துதிக்கைபோல் இருக்கும் தாறு,
ஒன்றீந்தால் நின்றுவிடும் எனதுமூச்சு.
எண்ணிப்பார் பெண்பாவாய்! கோழை போல,
இருநூறு தரம்வாழ்வில் இறக்கின் றேனா?
எண்ணிப்பார் என்சாவை! வீரன் சாவை!
இப்படிக்கு மலையடியில் வாழும் வாழை!

வெள்ளத்தால் ஆபத்து எனக்கு இல்லை.
வெந்தணலில் வெந்திடவே மாட்டேன். என்னைத்
தள்ளுவது, விளக்கணைத்து இருட்டு தன்னைத்
தருவித்துக் கொள்வதுபோல் ஆகும். மாந்தர்
உள்ளத்தை உயர்த்திடுவேன், எனைநே சித்தால்.
வேம்பென்பர் மூடர்எனை. மாவில் சேர்க்க,
மொள்ளுகின்ற பாகுஎன, அறிஞர் என்னை
மதித்திடுவர் - இப்படிக்கு இறவாக் கல்வி!

அகப்பொருளின் இலக்கணத்தை அறிந்து, இன்பம்
அனுபவிக்கும் காதலரை; அரசர் தம்மை;
மிகப்பெரிய புலவர்களை; நாட்டைக் காக்க
வாளெடுத்த மாதர்களைச்; சுமந்தேன். இன்றோ,
அகத்தைஇருட் டாக்குகின்ற புத்த கங்கள்
அடுக்கிவைத்த வீடுகளை; கோவில் தன்னை;
பகைவர்களைப்; பார்ப்பனரைச் சுமந்து, துன்பப்
படுகின்றேன் - இப்படிக்கு உன்தாய் நாடு!

இதழ் : 'முரசொலி' - 15.10.1954

# மங்கையர்க்கு அரசி

**வைகறை**

ஒருநாளில் பின்பகுதி, ஓய்வால்; காதல்
உறக்கத்தால் ஓடிற்று எங்கோ! மீண்டும்
வரும்நாளில் எதுசெய்தல் வேண்டும்? வாழ்க்கை
வளர்வதற்கு வழிஎன்ன? என நினைப்பேன்.
திருந்திவரும் தமிழ்நாட்டை, பக்தி ஊட்டித்
திருப்பிவரும் கிழமூளைக் காரர் தம்மை;
உரித்தவிதை போல்ஆக்க வேண்டும் என்று
வைகறையில் தீர்மானம் செய்து கொள்வேன்.

**காலை**

உரைகல்லில் சரிபார்த்த பொன்னைப் போல
ஒளிவீசும் காலையிலே எழுந் திருந்து;
நுரைக்குற்றம் நீங்காத நதியை நோக்கி,
நீராடச் சென்றிடுவேன். நமது முன்னோர்
உரைத்தபடி, நீர்மீது உமிழேன். நீரில்;
உடுத்துள்ள ஆடைதனைப் பிழிய மாட்டேன்.
கரைஏறி, இல்லத்தை அடைந்து, மீண்டும்
கடமைகளைத் தளராமல் தொடர்ந்து செய்வேன்.

**நண்பகல்**

வீண்பேச்சு; கோள்மூட்டல்; இதனைப் போன்ற
வேலைதனில் ஈடுபடும் பெண்டிர் கூட்டம்;
தூண்அன்றோ! மரமன்றோ! மழைநீர் பட்டுத்
துருப்பிடித்த இரும்பன்றோ! இவர்கட் கெல்லாம்,
ஆன்றோரை நினைவூட்டி, அறிவில் மூத்த
ஔவையைப் போல் அறிவுபெறும் மார்க்கம் சொல்வேன்
நீண்டபல பிரசங்கம்; வருவோர்க் கெல்லாம்
நண்பகலில் பலதினங்கள் நடத்தி வைப்பேன்.

**மாலை**

பலர்போல, பகலில்நான் உறங்க மாட்டேன்.
பகல் உறக்கம் உயிர் குறைக்கும் என்ப தாலே!
கலைநூற்கள் பலபடிப்பேன். தினமும் வீட்டுக்
கணக்குதனை எழுதிவைப்பேன். மாலைப் போதில்,
தலைவாரிப் பூச்சூடி; பொட்டு ஒட்டித்
தமிழ்க்காதல் துரைவருவார் என்று; வீட்டு
நிலைவாசல் முன்வந்து எட்டிப் பார்ப்பேன்.
நீந்திவரும் வான்நெருப்பு என்னைப் பார்க்கும்.

**ஏற்பாடு**

சொல்நிறைந்த தமிழ்நாட்டில், எற்பா டென்று
சொல்லிவரும் கதிர்மறைந்த நேரந் தன்னில்;
நல்விளக்கு தனைஏற்றி, இருட்டு தன்னை
நறுக்கென்று மறையவைப்பேன். 'அரும்பே'! என்று
செல்லமுடன் என்மகனை அழைத்து; அன்னோன்
செங்கரத்தில் சுவடிதனைத் தருவேன். மைந்தன்,
வெல்லத்தை வென்றுவரும் குரலால்; ஏட்டை
வாசிப்பான். அதுகேட்டுக் குளிர்ந்து போவேன்.

**யாமம்**

நொச்சிப்பூ உதிரும்யா மத்தில், எந்தன்
நித்திரையை என்கணவர் விரல் கலைக்கும்.
நச்சரிப்பார். எச்சரிப்பேன். என்பக் கத்தில்
நகரென்பார், நான்மறுப்பேன். ஊடல் தீர்ப்பார்.
இச்சமயம் நிலவேது? இருள்தான்; என்பேன்
'இருள்தானே பூனைக்கு வேண்டும்' என்பார்.
உச்சரிக்கும் உதடுகளைத் தருவார். ஈர
உடைபோல, அவர்மீது ஒட்டிக் கொள்வேன்.

---

இதழ் : 'முரசொலி' - 22.10.1954

## பாமபாணம்

இளைத்த நிலா முளைத்திருக்கும் இரவு நேரம்.
எதிர்வீட்டில் இளஞ்சிறுமி அண்ண னோடு
சுவைத்தமிழ் நூல் வாசித்துக் கொண்டி ருந்தாள்.
சேவலைப்போல் எழுந்திருக்கும் முத்தன்; வீட்டு
வெளித்திண்ணை மீதமர்ந்து, நீல வானை,
விழியாலே தொட்டுக்கொண் டிருந்தான். பச்சைக்
கிளிப்பேச்சுக் குரலாலே. "அத்தான்" என்று.
கூப்பிட்டாள் அவன்மனைவி, உள்ளே சென்றான்.

குளம்வளர்க்கும் தாமரைப்பூ அழகி, தன்னைக்
கொத்துகின்ற வாலிபனைப் பார்த்து, "அத்தான்,
விளக்கினிலே எண்ணெயில்லை. உண்ப தற்குள்,
வண்டுநிற மாகிவிடும். வீடு' என்றாள்.
ஒளிவீசும் உன்வதனம், உதடு, பார்வை.
விரல்ஓடு என்றழைக்கும் நகங்கள், யாவும்;
கிளைவிளக்கு போல் வெளிச்சம் கொடுக்கும். "யானைக்
கொம்பேநீ, குடித்திடநீர் தருக" என்றான்.

நீர்தந்தாள். அதுதந்து, முகத்தி னாலே
நிலாவெளிச்சம் தந்திட்டாள், வீட்டுக் குள்ளே.
கூர்விழியால், மௌனமொழி தந்தாள், பின்னர்க்,
கொஞ்சுகின்ற வேலைசெயும் இதழ் திறந்து,
"கார்காலம் வந்த"தென்றாள். முத்தன், கேட்டுக்,
"காதலர்கள் வசிக்கின்ற இல்லந் தன்னில்,
போர்வைஇனி விலைபோகா" தென்றான், மங்கை
"பொங்கலுக்கும் கரும்புவிலை போகா" தென்றாள்.

"பட்டாடை, பணியாரம், புது விருந்து,
பனையூரில் காத்திருக்கும் நமக்கு! நேற்று,
சுட்டேனே பலகாரம்; அதனைப் போல,
சுட்டிருப்பர் தாய்வீட்டில். வெண்பு றாவின்,
முட்டையைப்போல் வடிவுதனைக் காட்டு கின்ற
வரகரிசி யால்செய்த அதிர சங்கள்,
எட்டுக்கு வைத்தாலும் தின்பேன். உங்கள்
இதழ்போல இனிப்பாக இருப்ப தாலே!

சனிக்கிழமை இந்நேரம், என்தாய் வீட்டில்
சங்கீத இரவுதனைக் கழிப்போம் "கொய்யாக்
கனிகொத்தும் கிளிப்பிள்ளை, மீண்டும் நம்மூர்க்
கனியோடு வந்ததுபார்! என்று, அந்தப்
பனையூரே நமைப்பார்த்துப் பேசிக் கொள்ளும்
பாருங்கள்" என்றிட்டாள். உடனே முத்தன்,
"இனிமைதரும் மாம்பழமே! உன்தாய் ஊர்க்கு,
ஏனிந்தப் புதுப்பயணம்? என்று கேட்டான்.

"தலைத்தீபா வளியன்றோ நமக்கு!" என்று
தமிழச்சி, சுவையோடு சொன்னாள். "முன்னாள்
கொலைபட்ட நரனோநம் இனத்தான். அன்னோன்
குன்றுபோல் வீழ்ந்திறந்த கண்ணீர் நாளில்,
இலைபோட்டுப் படைத்திடுதல் சரியா? அன்றி,
இறந்ததற்கு அழுதிடுதல் முறையா?" என்று,
சிலைபோல நின்றவளை முத்தன் கேட்டான்.
சோலைமலர் போல்மங்கை ஊமை யானாள்.

இரணியனைத் தூணுக்குப் பின்பக் கத்தில்
இருந்தபடி, கொன்றானே கோழை; அந்தப்
பரந்தாமன் என்கின்ற கறுத்த பார்ப்பான்.
பத்தினியின் உதவியினால் நரனைக் கொன்று,
இருகூறு செய்திட்டான். சூழ்ச்சி யாலே!
"எந்நாடே! வேதியனை வீழ்த்து!" என்று,
விரிந்தமணல் காவிரிநீர் போல, மக்கள்
உள்ளத்தைக் குளிரவைத்தோன். கூறிச் செத்தான்!

நம்வீட்டில் யாரேனும் இறந்து விட்டால்
நடுங்காமல் போய்விடுமா நமது தேகம்?
கம்மாதா நமதுகுரல், துக்கத் தாலே!
கலங்காதா நமதுள்ளம், சாவுக் காக.
இம்மென்னும் ஓசைதரும் மழைநீர் போல,
இருவிழியும் அழுவதற்கு மறந்தா போகும்?
செம்மையுள ஓர்தமிழன்; நரகன்; செத்த
தேதிக்கு மட்டும்ஏன் இக்கொண் டாட்டம்?

நரனென்போன் அரக்கனல்ல, அரசன்! அன்னோன்.
நற்றமிழ்க்குப் பெருந்தொண்டு புரிந்தோன். யாகம்
புரிந்திட்ட ஆரியரின் சிரம் அறுத்துப்
போர்ப்பொழுது போக்கியவன். உலக வீரன்!
ஒருசிங்கம் தலைமீது, காலை வைத்து,
விரோதிகளை அதட்டிவைத்து, நீதி வைத்து,
வரிநெல்லிக் காய்போல விழி அமைந்த,
முயல்வாழும் வெண்முல்லை நாட்டை ஆண்டோன்!

நாமெல்லாம் அவன்இனத் தார். இன்னும் சொன்னால்,
நாடாண்ட ராவணனின் வம்சம். 'வாழ்வில்,
காமத்துப்பால் வேண்டாம், மோட்சம் காண,
காவிஉடை அணியுங்கள்' என்று, மக்கள்;
சேமத்தைச் சாகடிக்கும் பார்ப்பான் பேச்சைச்
சிதறடித்த வள்ளுவரின் சுற்றத் தார்நாம்.
சோமமெனும் மதுகுடித்த மிலேச்சர் தம்மைச்
சுடுகாட்டுக் கனுப்பியவர், நமது முன்னோர்!

கானகத்து வேங்கைதனைப் பிடிப்ப தற்குக்
கற்பலகைக் கதவமைப்போன் தமிழன். பெண்ணைக்
காணட்டும் என்கின்ற நோக்கத் தோடு;
கண்ணாடிக் கதவமைப்போன் பார்ப்பான், வாழ்வில்
மானத்தைக் கவரிமான் போலக் காத்து
வருகின்ற தனிக்கூட்டம், தமிழர்க் கூட்டம்!
தேனற்றுப் போய்விடினும், தமிழைக் கொண்டு
தித்திப்பு விருந்துவைப்போன் தமிழன் ஆவான்.

பகை தூண்டும் பார்ப்பனர்கள், இதனை எல்லாம்;
பொய்என்பர். உண்மைக்குத் திரும்ப மாட்டார்.
மிகஉணர்ந்த பேரறிஞர், எதுசொன் னாலும்,
மடையருக்கு ஏறாது. அரும்பில் காற்றுப்
புகுவதற்கு வழியில்லை அன்றோ? நம்மில்,
பகுத்தறிவு, இனஉணர்ச்சி, இரண்டும், அற்றோர்.
சகித்தபடி, கரிநாளை வாழ்த்து வார்கள்.
சுரணையுள்ள திராவிடர்தான் கலங்குவார்கள்.

என்றுரைத்தாள். இதுகேட்டு அந்த மங்கை
இறந்தவனோ நம்இனத்தான். நற்கு ணத்தான்.
கொன்றவனோ ஓர்பொய்யன். அவனுக் காகக்
கொண்டாட்டம் நம்மவரால்! வெட்கம்! வெட்கம்!
நின்றுவிட வேண்டும்இந்த நிகழ்ச்சி. நம்மோர்
நிறுத்திவிட வேண்டும்இந்தத் திருநாள் தன்னை,
என்றுரைத்தாள். ஆவேசத் தோடு, முத்தன்
எக்களித்து, வஞ்சிக்கு வாழ்த்து சொன்னான்.

எழுந்திட்டாள் அவ்விடத்தை விட்டு, மங்கை.
இவையோனும், அவளோடு எழுந்தான். பின்னர்,
பிழியாத கனிகேட்டான். கன்னம் தந்தாள்.
படராத கொடிகேட்டான். இடையைத் தந்தாள்.
"தழையில்லா மூங்கில்தனைத் தருக" என்றான்.
தங்கநிறத் தோள்தனைத் தந்தாள். தந்து,
மழைக்காலம் வருவதற்கு முன்னே, முத்தன்;
வரவழைத்த உயிர்ப்போர்வை அவன்மேல் வீழ்ந்தாள்!

இதழ் : 'முரசொலி' - 29.10.1954

# கடலோடி

காம்பு விளக்கும். கண்ணாடி நிலவும்
எரிந்து கொண்டு இருக்கும் நேரம்
கூவும் கோழியின் கழுத்து போன்ற
அரிவாள் மணையில், கறிகாய் தன்னை
அரிந்து கொண்டு இருந்தாள் அஞ்சலை
அஞ்சலை, நிலக்கரி நிறந்தான். ஆயினும்
உடலின் அமைப்பு; உளியின் உதவியால்
கட்டிப் பாறையில் வெட்டிய சிலைதான்!

அவளது கணவன் அஞ்சான் என்பவன்.
புளியங் கொட்டை போன்ற விழிகள்
உள்ள ஆட்டை ஓட்டிக் கொண்டு
வந்தான் வீடு. வந்தான் அவளிடம்.
நின்ற வினாக்குறி படுத்தது போல
இருக்கும் மீசையை இடது கையினால்
முறுக்கிக் கொண்டே, மனைவியை நோக்கி;
"நறுக்கிய மாம்பழச் சாறே! கேட்பாய்,
கன்னியா குமரி சென்று, அங்கே,
பள்ளக் கடலில் பதுங்கி இருக்கும்
முத்துக் குளிக்க சித்தங் கொண்டேன்.
"சித்திரப் படுக்கையே! சென்று வரட்டுமா?"
என்றான். 'நல்லது' என்றாள். சென்றான்.
அஞ்சான் சென்று ஐந்துநாள் ஆனது!
அஞ்சலை உறங்கியும் ஐந்துநாள் ஆனது!
ஒருநாள் காலை ஒன்பதே கால்மணி.
பள்ளி செல்லும் பிள்ளைகள் இருவர்;

கன்னியா குமரிக் கடலில் பெரும் புயல்
வீசும் சேதியைப் பேசிக் கொண்டே
போவதை அந்தப் பேதை கேட்டு,
அவருக்கு எதுவும் ஆபத்து நேர்ந்ததோ
என்று நினைத்தாள். நினைத்த உடனே,
அடிக்கடி அசையும் இமையில் வந்து
தொத்திய கண்ணீர் முத்தாய் உதிர்ந்தது.
அழுத துளியும், பொழுது மாக
இருக்கும் போது, இவளுக் காக,
கணவன் எழுதிய கடிதம் வந்தது
ஆவ லோடு அதனைப் பிரித்தாள்.

'அஞ்சலை! எனது ஆசையின் உதவியே!
உன்னைப் பிரிந்த ஒருமா தமாக
இரவு உலகம் இனிக்க வில்லை.
மனது எல்லாம் மந்தம் ஆனது.
கொத்தும் கிளிநான் குமரிக் கரையிலும்,
கொய்யாப் பழம்நீ கூரை வீட்டிலும்
இருப்பதால் அல்லவா இந்தத் தொல்லை.

ஆகையி னாலே, தோகைப் பறவையே!
நாளை இரவு நிச்சயம் வருகிறேன்"
என்று எழுதி இருப்பதை, மங்கையின்
பார்வை இரண்டும் பார்த்திட, மனது
வாசித்து முடித்தது. முடிந்ததும் உதடுகள்
சந்தோ ஷத்தால் சிவந்து போயின!
அடுத்தநாள், உதயம். நடுப்பகல் முடிந்து
அந்திப் பொழுது வந்து பிறந்தது.
அத்தான் நினைவு அவளைத் தைத்தது.

உடனே அந்தக் குடும்பத் தலைவி.
நாயின் நாக்கு போன்ற பாதம்
நாட்டியம் ஆட, தோட்டம் சென்று
பூவும் அரும்பும் பறித்துச் சூடி,
வெள்ளைச் சிரிப்புடன் உள்ளே வந்து,
புடைவை மாற்றி பொட்டு திருத்தி
அழகை உடலிலும், அன்பை நெஞ்சிலும்,
தேக்கிக் கொண்டு, திறந்த விழியும்
துடித்த நினைப்புமாய்ப் படுத்துக் கிடந்தாள்.
'அன்னமே' என்று அழைத்த படியே
ஆளன் வந்தான். அழகி பறந்து,
'மச்சான்' என்று மார்பில்படிந்தாள்.
வெடுக்கென் றணைத்தான். எடுத்தான் அவளை உடனே
உதட்டில் உதடு பதித்து எடுக்கும்
முத்தம் அதுதரும் சத்தம் வளர்ந்தது!
இருந்த விளக்கு இவர்களால் அணைந்தது!



இதழ் : 'முரசொலி' - 26.11.1954

## சிவப்பும் வெளுப்பும்!

அந்தியிலே சிறுமயக்கம் அடைந்து; விண்ணின்
அழகுநிலா கண்டு, பெரு மூச்சு விட்டு;
சந்தனத்தைத் தொட்டு, உடல் வெப்ப மாகித்
தணல்மீது நிற்பதுபோல் தவித்துப்; பின்னர்.
சுந்தரியும் சுந்தரனும், தோளில் சாய்ந்து
சுகங்காணும் சமயத்தில்; காதல் கண்கள்,
அந்திநிறம் போல்சிவக்கும்! இதழ்கள்-முத்தம்
அதிகரித்தால், தாழம்பூ போல் வெளுக்கும்!

குடைபிடித்து அரசாண்ட தமிழைப்; பாது
காத்துவரும் பாவலர்க்கும்; நாவ லர்க்கும்.
அடிபட்ட பால்மரம்போல், கண்ணீர் நீட்டி
அழுகின்ற ஏழைகட்கும்; மகர யாழைத்
தடவிஇசை எழுப்பிவரும் பாண ருக்கும்;
சதமென்று வருவோர்க்கும்; அள்ளி ஈயும்
கொடைவள்ளல் இருகரமும் சிவக்கும்! கேட்டும்
கொடுப்பதற்கு இல்லைஎனில் முகம் வெளுக்கும்!

மலைகாட்டி, தோள்காட்டி, உறுமு கின்ற
மேகத்தின் இடிகாட்டி, சத்தங் காட்டும்
அலைகடல்போல் பெரியபடை ஓர் புறத்தில்
அதுபோல மற்றுமொரு படைஓர் பக்கம்.
பலநாட்கள் இருபுறத்தும் மரண யுத்தம்.
போர்க்களத்தில் பாய்ந்துவரும் அம்பைக்கண்டு,
குலைநடுங்கும் கோழைகளின் கால் சிவக்கும்!
கோழைஉயிர் தப்பின், அவன் செயல் வெளுக்கும்!

இலைநிழலால் பந்தலிடும் சோலை சென்று,
இளவயது அரும்புகளை மோதி; நீரில்
மலர்ந்துள்ள தாமரையைத் தழுவி; கொல்லை
முல்லைக்கு முத்தமிடும் தென்றல் போல;
இலக்கணத்தில் ஈடுபட்டு; இசைநூல் கேட்டு;
இலக்கியங்கள் பலகற்று; தினம் ஆராயும்,
கலைவாணர் தமிழ்நெஞ்சம்! சிவக்கும்! கற்றார்
கூட்டத்தில் அவர்சென்றால் புகழ் வெளுக்கும்!

அழகுநிலா; விண்மீன்கள்; அல்லிப் பூக்கள்!
ஆனந்தம் தேடுகின்ற அன்றில்; நாவல்
பழம்போன்ற கருவண்டு; அந்த வண்டின்
பிரயாணம்; காதலரின் போதைப் பேச்சு;
நிழல்தேடும் உயிர்க்கூட்டம். வீட்டுக் குள்ளே
நீண்டெரியும் ஒளிவிளக்கு; யாவும் ஓய்ந்து
கிழக்கினிலே கதிர்பிறந்தால் வான் சிவக்கும்!
கதிர்வெய்யில் பாய்ந்தவுடன் நிலம் வெளுக்கும்!

இலைதின்னும் ஆடுகளை மேய்த்துக் கொண்டே
இங்குவந்த ஆரியரை எதிர்த்து, வாழ்வில்
பலதடவைப் போரிட்ட இரண்யன் போல;
பட்டாளச் சிரிப்போடு, பகைக்கூட் டத்தின்
தலைஅறுத்து; எதிரிகளின் இரத்தத் தாலே
தரைமெழுக, திராவிடப்போர் தொடங்கும்நாளில்
உலைக்களத்தில் புதுஇரும்பு தினம் சிவக்கும்!
உருப்பெற்ற ஆயுதத்தின் வாய் வெளுக்கும்!

இதழ் : 'முரசொலி' - 3.12.1954

## கவனம் வை!

பாய்கின்ற சிங்கத்தின் பிடரி மீது;
படைத்தமிழன் கையிருக்கும். பார்ப்பா னுக்கோ;
வாய்ருசிக்கப் பால்கொடுக்கும் பசுக்கூட் டத்தின்
வால்(ப்)பக்கம் கையிருக்கும். தீர்த்தம் ஏந்த!
நாயின்கால் போலமிக நெருக்கம் உள்ள
நண்பனென நம்பவைப்பான். எப்போதும் காக்
காய்பிடிப்பான்; கால்பிடிப்பான்; கத்தி வைப்பான்;
கவனம்வை; கவனம்வை; இவனி டத்தில்!

முப்புரத்தை எரித்தானாம் கைலைப் பார்ப்பான்!
முகத்தினிலே மீசைஇல்லா கோழை ராமன்!
எப்படியோ அனுமானை வசப் படுத்தி,
இலங்கையிலே தீவைக்கச் செய்தான். இந்தத்
தப்பிலிகள், திராவிடரை ஏய்த்து; வாழ்ந்து;
செத்துவிட்டார்! எனினும் இவர் உடல் எலும்பு,
இப்போது கிடைத்தாலும், தூள்தூ ளாக்கும்
எண்ணங்கொள், எண்ணங்கொள், தயங்கி டாதே!

நெற்றியிலே பொட்டிருக்கும்; போர்க் களத்தில்
நின்றிருந்தால், வேல்வைத்த புண் இருக்கும்.
மற்றபடி, நெற்றியிலே விழி இருக்க,
மார்க்கமில்லை. அதனாலே, அதனைப் போன்ற
குற்றமுள்ள கற்சிலைகள்; கொடும் வைதீகக்
கருத்துள்ள சித்திரங்கள்; மதங்கள்-தன்னை,
உற்பத்தி செய்தவனும், நஞ்சும் ஒன்றே!
உணர்ந்திடுக; உணர்ந்திடுக வரவேற் காதே!

பலதெய்வம் இருக்கத்தான் வேண்டும் - என்னும்,
பொய்யான எண்ணங்கள். சடங்கு நூற்கள்;
தலைவிதியை, மறுபிறப்பை, நம்ப வைக்கும்
சாத்திரங்கள்; கம்பராமாய ணத்தை,
நிலைநாட்டும் நாடகங்கள்; அதனை நாட்டில்
நிறுத்திவரும் அரசாங்கச் சட்டம் - தன்னை
இலைச்சருகு, மரவிறகு, பிரேதம் போலே,
எரித்திடுக; எரித்திடுக; சுடர் நெருப்பால்!

தளபதியைத்; தமிழ்மகனை; இலங்கை தந்த,
தங்கத்தை; இராவணனை; அறிஞர் எல்லாம்,
வளையாத வெற்றிகண்ட வீரன் என்று
வருணிக்க; அதைமறுத்து, அரக்கன் என்றும்;
ஒளிவீசும் கடல்முத்தை, வெண்சுண் ணாம்பின்
உருண்டைஎன்றும்; பழிக்கின்றான் பார்ப்பான். இந்த
இளக்காரப் பேச்சுதனைக் கேட்டுக் கொண்டு
இருக்காதே, இருக்காதே, அடக்கு வாயை!

தோட்டத்து மலர்போலச் சிரித்து; அவன்
தோள்மீது சாய்ந்தபடி மங்கை - காமப்
பாட்டளிக்க; கணவன், அவள் புதுக் கன்னத்தில்
பதினோரு வகைமுத்தம் அளிக்கப் பின்னர்,
வீட்டுக்குள், என்னும் கூட்டுக் குள்ளே,
விளைவிக்கும் காதல்தனை, வெறுத்துப் பேசும்,
ஓட்டாண்டிப் பரதேசித் தத்து வத்தை,
வீழ்த்திடுக, வீழ்த்திடுக, விவாதத் தாலே!

இதழ் : 'முரசொலி' - 10.12.1954

# ஆறாகல்ல!

இருமுகின்ற மேகங்கள், முழுவா னத்தை
இருட்டாக்கும் மழைமாதந் தன்னில்; பிச்சி
அரும்பெடுத்து வாஎன்று உனக்கு ஆணை
இட்டேனே, அதுஎதற்கு? காலங் காட்டும்;
கருவியிலா சமயத்தில், விளக்கு ஏற்றும்
காலத்தை, அவ்வரும்பு வாய் விரித்துத்
தெரிவிக்கும். அதை அறியக் கேட்டேன். அன்றிச்
சிங்காரப் பின்னல்தனில் சூட அல்ல!

விண்காற்று போல்ஓடி, நல்ல எண்ணெய்
வாங்கிவரச் சொன்னேனே எதற்கு? எந்தன்
கண்ணாளர் களஞ்சென்று, பலகை மார்பில்
காயத்தைப் பெற்றிறந்த சேதி கேட்டுச்,
சண்டைக்குப் போகின்ற எனது மைந்தன்
தலைமீது எண்ணெய்வைக்க வேண்டும். இந்த
எண்ணத்தை நிறைவேற்றக் கேட்டேன். அன்றி
இனிக்கின்ற திண்பண்டம் சுடுதற் கல்ல!

கூரையிலே சாய்ந்துள்ள சுரைக்காய் தன்னைக்
கொண்டுவரச் சொன்னேனே எதற்கு? இந்த
ஊர்மக்கள்; என்பல்லை, இளஞ் சுரைக்காய்
விதையோடு ஒப்பிட்டுப் பேசு கின்றார்.
கூருள்ள வெண்முல்லை அரும்பு என்று
கூறுகிறார் என்கணவர். இதை ஒப்பிட்டுப்
பார்க்கத்தான் கொடிச்சுரைக்காய் கேட்டேன். அன்றிப்
பக்குவமாய்க் கறிசமைத்துத் தின்ன அல்ல!

முத்தமிடும் ராத்திரியில்; அதிக மாக
முதிராத வெற்றிலையைப் போடு, என்று
சத்தமிட்டுச் சொன்னேனே எதற்கு? காதற்
செய்கையிலே ஈடுபட, போதை ஊட்டும்
வித்தைஇந்த வெற்றிலைக்குத் தெரியும். இந்த
விவரத்தை உணரத்தான் உரைத்தேன். அன்றித்
தித்திக்கும் கனிஉதட்டின் மேலே, ரத்தச்
சாயத்தை வெள்ளம்போல் பெருக்க அல்ல!

பழனிமலைத் தொடர்சென்று வருவோம் என்று
பிடிவாதம் செய்தேனே எதற்கு? அங்கே,
மழைமேகம் முத்தமிடச் சம்ம திக்கும்
முதிரமலை ஒன்றுண்டு. அதுதான், ஈந்து
அழியாத புகழ்பெற்ற குமண வேந்தன்
அரசாட்சி செய்த இடம்! அதைப்பார்க் கத்தான்,
எழுந்திடுக என்றேனே தவிர; அங்கே
இருக்கின்ற கோவிலுக்குப் போக அல்ல!

ஒருதெய்வம் இருக்கட்டும் என்று, நேற்று
உரைத்தேனே, அதுஎதற்கு? உலக மக்கள்;
பெரும்பாலோர் தெய்வத்தின் நினைவு கொண்டுப்
பேசுகின்றார். மேலும், நம் திராவி டத்தில்;
இருக்கின்ற பலதெய்வம் ஒழிந்து, ஒன்று
இருப்பதிலே தவறில்லை. அதனா லேதான்,
இருக்கட்டும் ஓர்தெய்வம் என்று சொன்னேன்.
இதுதவிர, பக்தர்க்கு பயந்து அல்ல!

இதழ் : 'முரசொலி' - 17.12.1954

## புலி வாழ்ந்த குகை!

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே.

-புறம்-

(தென்னாட்டு தமிழச்சி ஒருத்தியை "உன் மகன் எங்கே" என்று வினவ, "மகன் போன இடம் நானறியேன்; ஆனால் அந்த மகனைப் பெற்றெடுத்த புலிக் குகை இதுதான்" என்று கூறி தன் வயிற்றைக் காண்பித்த புறநானூற்றுவீரக் கதையின் நிழல் படிந்த கவிதை இதோ, கவிஞர் சுரதா தரும் புதிய மெருகோடு :–)

"வண்டினங்கள் பொதுக்கூட்டம் நடத்தும் சோலை
வந்து புது, மலர்கொய்து; நுணாக்காய் போன்ற
கொண்டையிலே அதைச்சூடும் தருணம்; அங்கோர்
கட்டழகன் வரக்கண்டு; அவனை, நீலக்
கண்ணாலே முன்இழுத்து, தன்னை, அன்னோன்
கரத்தாலே இழுக்கவைத்து; அதற்குப் பின்னர்;
அண்டையிலே நின்ற, மர நிழலைப்; பள்ளி
அறையாக்கித் தமிழ்க்காதல் புரிந்த மங்கை!

கவிஎழுதும் திறனுடையாள்; வடக்கு நாட்டின்
கருவறுத்த, மறக்குலத்து மங்கை; நல்ல
செவிலித்தாய்; பகைவர்க்கு சிங்கத்தின் வாய்!
சந்தனத்தை, செம்பொன்னை, கடலின் முத்தை,
குவிக்கின்ற தமிழ்நாட்டைச் சுரண்டித் தின்றுக்
கொழுப்பேறிப் போயிருந்த குள்ளர் தம்மை;
அவசியமாய்த் துண்டித்து, உடல் எலும்பை
அக்கக்காய்ப் பிரித்திட்ட, தென்னாட்டுப் பெண்!

ஓடுகின்ற ஆற்றருகில்; மலைப்பக் கத்தில்;
ஊருக்கு மையத்தில்; உயர்ந்து நிற்கும்
மாடங்கள்; மாளிகைகள்; மண்ட பங்கள்;
மன்னர்க்கும், மந்திரிக்கும் சொந்தம்! காற்றில்
ஆடுகின்ற பனைஓலைக் குடிசை; நாட்டில்
அல்லல்படும் ஏழைகட்குச் சொந்தம்! வெள்ளைத்
தோடணிந்த காவற்பெண் டென்னும் இந்தச்
சுந்தரிக்குச் சிறியதொரு வீடு சொந்தம்!

சங்கீதம்; போர்முறைகள் தெரிந்த, இந்தத்
தமிழச்சி, தன்வீட்டில்; பகைவர் ரத்தம்
தங்கியதோர் கொடுவாளை எடுத்துப் பார்த்துச்
சந்தோஷப் படும்போது; பாணர் வீட்டுச்
செங்கமலம் அங்குவந்து; இடது கையால்,
சிற்றில்லின் நற்றூணைப் பற்றி நின்று,
"எங்கேநின் அருமைமகன்?" என்று கேட்டாள்.
இதற்கந்த வீரத்தாய் கூறு கின்றாள் :

"தங்கத்தை; கிளிச்சிறகின் நிறத்தை; வெல்லும்
தளிருள்ள சோலைதனில் இருக்க மாட்டான்.
சங்கத்தில் இருப்பானா என்றால், இந்தச்
சமயத்தில் அங்கிருக்க நியாயமில்லை.
தொங்குகிற ஊஞ்சலுண்டு; மெத்தை உண்டு;
சிலைபோல மனைவியுண்டு; எனினும், யுத்தச்
சங்குகளும்; முரசுகளும்; அழைக்கும் போது;
சல்லாபமா பெரிது வீர னுக்கு?

6

மேதினியில் புகழ்பெற்ற புலவர் எல்லாம்
வாதமிட, சந்தர்ப்பம் பார்த்தி ருப்பர்.
காதலர்கள், முத்தமிட்டுக் கொள்வ தற்குக்,
கொம்புநிலா இரவுவரக் காத்தி ருப்பர்.
மோதுகிற புதுவெள்ளம் வந்து விட்டால்,
உழவரெலாம் எங்கிருப்பர்? வயலில் அன்றோ?
அதேபோல், என்மைந்தன், போர்க் களத்தில்
ஈடுபட்டுச் சண்டையிட்டுக் கொண்டி ருப்பான்.

ஒருபக்கம், வெறியோடு, யானைக் கூட்டம்,
வீரர்களைத் தன்காலி னால் நசுக்கித்
தரைமீது ஒட்டிவைக்கும், வாளும், வேலும்,
தயங்காது கொலைசெய்ய ஆரம் பிக்கும்.
கரும்பின்இலைக் கூட்டத்தில், காற்ற டித்தால்;
கட்டாயம் சிலஇலைகள் ஒதுங்கும்; சாயும்.
நரம்புஉடல் நடுக்க, சிலர், தம்மைக் கொல்ல
நாடிவரும் வாள்கண்டு, அதுபோல் ஆவர்!

துதிக்கையும், சிறுவாலும், நான்கு காலும்,
துண்டாகி; மண்மீது மலைபோல் வீழும்
மதயானை; சுத்தியலைப் போல் இருக்கும்.
மாவீரன் கொலைவாளி னால் கழுத்துச்
சதையோடு, வெண்டுண்ட தலைகள், ரத்தச்
சொம்பு,பல சாய்வதுபோல் சாயும்! போரின்
புதுமரணக் கணக்குதனை, அம்பு பார்க்கும்!
பிணம்இழுக்கும் வேலைதனை, நரியே செய்யும்!

இந்நேரம் என்மைந்தன் போர்வாள் மீது;
எதிர்ப்போரின் வாள்மோதும்; விலகும்; மீண்டும்
வந்துவந்து முகத்தருகில் மின்னும். எந்தன்
மாணிக்கம், அதற்கெல்லாம் அஞ்ச மாட்டான்.
செந்தமிழன், வெற்றியோடு வருவான் அன்றி
செத்தாலும், மார்பில்தான் புண் இருக்கும்.
அந்தப்புண் மீதுஒரு நாக்கு வைத்தால்,
அதுபேசும், அவன்நாக்கு அசைந்தி டாது!

சுகங்கண்ட இருஉதடும், மௌன மாக;
 செவ்விழியில் புகைபடிய; வெண்மை யான
நகக்கூட்டம், கருநீல நிறம்போல மாற;
 நெய்கின்ற, கறுப்புநூல் விரிப்பு போல,
சிகைஎன்னும் தலைக்குடுமி அவிழ; உந்தன்
 செல்வமகன் செத்துவிட்டான். சாகு மட்டும்,
பகைவாளை, அவன்பார்த்தான். அன்றி, அந்தப்
 பகைவாளோ, அவன்முதுகைப் பார்க்க வில்லை!

இதுபோல, ஓர்சேதி கேட்க நேர்ந்தால்,
 இருவிழியைக் குளமாக்கிக் கொள்ள மாட்டேன்.
புதுக்கீர்த்தி பெற்றுவிட்டான். காவற் பெண்டு
 பெற்றெடுத்த மணிப்பிள்ளை; என்று, நாட்டுப்
பொதுமக்கள் பேசுவதைக் கேட்டு, ஈன்ற
 பொழுதைவிடப் பூரிப்பேன். வீரன் செத்தால்,
எதற்காக அழவேண்டும்; உலகம் போற்றும்
 இறவாத புகழ்வைத்துச் சென்ற போது?

ஆலிலைதான் என்வயிறு; மணம் எனக்கு
 ஆகாத பருவத்தில். ஆனால் எந்தன்
வாலிபத்தில், காதலித்து, சுகித்து, வீட்டு
 வாழ்க்கையிலே பிள்ளைகுட்டிப் பெற்ற பின்னும்,
ஆலிலைதான் என்வயிறு என்று சொன்னால்,
 அவ்வுவமை, என்வரைக்கும் தவறு என்பேன்.
வேலெடுப்போன் என்பிள்ளை. அவனைப் பெற்ற
 வயிறு, பெறும் புலியிருந்த மலையின் பொந்து!

புலிவாழும் குகைஉண்டே, அதற்கும்; கொன்றைப்
 பூவின்நிறம் போலிருக்கும் புலிக்கும்; எந்த
நிலையான உறவுண்டோ, அதனைப் போன்ற
 நிலையேதான், எங்கவது உறவும்!" என்றாள்
மலைபோல அசையாது நின்றி ருந்த
 மங்கையவள் அவ்வீர உரையைக் கேட்டுத்
"தலைசாய்க்கும் கோழைகள்இப் பேச்சைக் கேட்கச்
 செவிசாய்க்க வேண்டும்" எனச் சொன்னாள். சென்றாள்!

இதழ் : 'முரசொலி' - 24.12.1954

## எச்சிலின் மகத்துவம்!

வரிவேங்கைப் புலி தனது வாலைத் தூக்கி,
வாய்திறந்து பாயவரின், அதை விரட்ட,
நெருப்பு முடிப் பந்தத்தை எடுத்துக் காட்ட
நினைக்காமல்; வீரத்தை நிலை நிறுத்த,
'வரட்டும்அது; பார்க்கின்றேன்' என்று கூறி,
மங்கையர்கள் எடுக்கின்ற முறமும்; கேணி
உருவுள்ள கூடைகளும்; தடுக்கும்; குன்றின்
ஓரத்தில் வசிக்கின்ற குறத்தி எச்சில்!

சுவையுடைய ஆவின்பால்; அந்தப் பாலில்
தேங்குகின்ற தித்திப்பு ஆடை! வெள்ளை
அவரைப்பூ போலுள்ள தயிரின் கட்டி;
ஆண்யானைக் கால் நகத்தைப் போல் திரண்டு
சுவைகாட்டி, வலுவூட்டும் வெண்ணெய்க் கட்டி;
தெருவில் விலை போகும் மோர்; அனைத்தும் - வாயை
அவிழ்க்கின்ற முல்லைப்பூ தன்னைச் சூடி
அலங்காரம் செய்கின்ற இடைச்சி எச்சில்!

சேல்விழியால், காதலரை இழுத் தடிக்கும்
சிங்கார மங்கையர்கள் உடுத்தும் சேலை;
வேல் எடுத்து, வாள்எடுத்துக், களத்தை நோக்கி
ஓடுகின்ற போர்வீரர் உடுத்தும் ஆடை;
பால்போன்ற பஞ்சாடை; போர்வை; பின்னும்
பட்டாடை, இவையெல்லாம் - அறுந்து போன
நூல்நக்கி, இழைநெருடி, பாவு தன்னை
நெய்கின்ற சேணியரின் நாக்கு எச்சில்!

தென்னாட்டுக் கொய்யாவை, ஆசை யோடு
        தின்றுவரும் கிளிபோன்ற தங்கை; பச்சைப்
புன்னைதரும் வெண்மலர்போல் சிரிப்புக் காட்டிப்,
        பார்வைக்குப் புதுஅழகு அளிக்கும் அக்கை;
அன்புள்ள சிறுதம்பி; குடும்பந் தன்னை
        ஆதரித்து வரும் அண்ணன் - இவர்கள் எல்லாம்,
இன்பமுடன் மஞ்சத்தில் கொஞ்சிக் கொஞ்சி
        இருட்டுதனில் பெற்றோர்கள் செய்த எச்சில்!

ஓடிவரும் தண்ணீரைக் கடன்கேட் காமல்
        வாழ்கின்ற நற்கிணறும்; பள்ளக்
கோடுகளில் ஓடுகின்ற ஆறும்; பெண்கள்
        குளிக்கின்ற ஊர்க்குளமும்; சுனையும்; சந்தப்
பாடலொடு கீழ்நோக்கிப் பரவும், வெள்ளைப்
        புகைபோன்ற அருவிகளும்; ஏரி நீரும்-
தோடணிந்த பெண்கூட்டம்; கொம்பு மான்கள்;
        துள்ளுகின்ற மச்சங்கள், செய்யும் எச்சில்!

கருவினிலே, மாந்தரெல்லாம் உருவ மாகிக்
        காட்சிதரும் உலகத்தில்; தாங்கள் மட்டும்,
பிரம்மாவின் தேற்றயிலே பிறந்ததாகப்
        பொய்சொல்லும் பார்ப்பனரும்; சாம்பல் பூசிப்
பரம்-அபரம் எனப்பேசிக் காலந் தன்னைப்
        பாழாக்கும் சைவர்களும் - சுட்டுத் தின்று
வருகின்ற கிழங்குண்டே, அக்கி ழங்கை
        உண்டாக்கும் பனங்கொட்டைப் பலபேர் எச்சில்!

இதழ் : 'முரசொலி' - 21.1.1955

## இங்கே பார்...

அழகுள்ள இருதோளின் இடையில் வந்து,
அகப்பட்டுக் கொண்டுள்ள உடலின் பந்தே!
கிழவயதில் நரைக்கின்ற தலையே! பேச்சைக்
கொஞ்சங்கேள்; பணக்காரன் கொடுமை யாலே,
அழுதுவரும் தொழிலாளர் உலகு தன்னை,
ஆவிதனைக் கொடுத்தேனும் சிரிக்க வைப்பாய்.
செழுந்தொண்டு செய்பவரை வணங்கு, மார்பைத்
தட்டிவரும் பகைகண்டு, குனிந்தி டாதே!

வெள்ளைநிலா வின்நிழலே! பளிங்கு வாசல்
வடிவத்தில் இருக்கின்ற விழிகாள்! நீங்கள்,
வெள்ளிநுரைக் கடல்மீது எழும் நெருப்பு
வட்டத்தைப் பாருங்கள்; விரல்கள் சேர்த்துக்
கிள்ளுகின்ற மலர்பார்த்து மகிழ்வீர்; பச்சைக்
கிளி நிறத்துப் பயிரினத்தைக் காண்பீர் - ஆனால்
கொள்ளையிடும் ஆரியர்கள்; கோயில் கல்லைக்
கடவுளெனக் காட்டிடுவர், காணா தீர்கள்;

இனிக்கின்ற உச்சரிப்பை விரும்பும் வள்ளை
இலைபோன்ற காதுகளே; இதனைக் கேட்பீர்
பனிக்காலம், மழைக்காலம், குயிலின் கூட்டம்
பாடுகின்ற கடுங்கோடைக் காலம் - என்னும்
தொனி தன்னைக் கேட்டிடுவீர்; அதனை அன்றி,
சுயபுத்தி, ராகுதசை முற்பி றப்பின்
வினைத்துன்பம், விதி - என்னும் பேச்சைக் கேட்டால்,
வெடுக்கென்று வெண்பஞ்சால் அடைத்துக் கொள்வீர்!

முத்தைப்போல் இருக்கின்ற பற்கள் தம்மை
மூடிவரும் பழக்கதவே! சிவந்த வாயே!
சத்துள்ள முத்தமிழின் நுட்பந் தன்னைத்
தரணியிலே பறைசாற்று. தமிழர் நாட்டு
ரத்தத்தின் கதைதன்னைப் புகழ்க! ஆனால்
ராமபிரான் என்பவனை; அவனைப் பற்றிக்
கத்திவரும் காவியத்தை; ஒழுக்கங் கெட்டக்
கயவர்களை, ஒரு நாளும் புகழ்ந்தி டாதே!

மேல்உடலின் இருகிளையே! பொருளைத் தந்து
வாங்குகிற வழக்கமுள கைகாள் நீங்கள்,
நூல் தன்னை எழுதுங்கள்; சேரன் கைபோல்,
நிச்சயமாய் வாள்வீசப் பழகிக் கொள்வீர்!
வேல்வீரர், பேரறிஞர் மூத்தோர்க் கெல்லாம்,
மரியாதை காட்டுங்கள். ஆனால் ஒன்று;
பால் அருந்தும் பாம்புதனை வணங்கி னாலும்,
பகைவர்களை ஒருபோதும் வணங்க வேண்டாம்!

நன்றிமற வாதகுணம் படைத்த நாயின்,
நாக்கைப்போல் அமைப்புள்ள கால்கள்! நீங்கள்
குன்றுள்ள இடம்நோக்கி நடந்து செல்வீர்.
குளிர்கடலும், காவிரியும் தொட்டுக் கொள்ளும்
பொன்மேனிக் கண்ணகியின் ஊரைப் பார்க்கப்
புறப்படுவீர்; பாசறையை மிதிப்பீர்; ஆனால்,
அன்பர்களே! மடம்நோக்கி வருக - என்று
அழைப்பாளர்க்ள, அவ்விடத்தை மிதிக்கா தீர்கள்.

இதழ் : 'முரசொலி' - 28.1.1955

# ஆதியும் பாதியும்

ஆதியிலே போர்வீரர், தம் கரத்தில்
அழிக்கின்ற கூர்வேலை வைத்திருந்தார்.
பாதியிலே, பொய்ப்பேச்சை நம்பி; கோவில்
பக்கத்தில் வேல்தன்னை நட்டு வைத்தார்.
சாதிமதம் தன்னைவர வேற்று வாழும்
தமிழ் மூடர், வேலுக்குப் பூசை செய்ய;
சூது செயும் ஆரியரோ அதனைக் கண்டு
சிரித்திட்டார்; சிரிக்கின்றார்; நம்மை நோக்கி.

ஆதியிலே கவிஞரெலாம் தமிழில், என்றும்
அழியாத எண்ணங்கள் சேர்த்து வைத்தார்.
பாதிமுடிப் பொய்யர்கள், விளக்கு ஏற்றிப்
படிப்பதுபோல், இடைச்செருகல் செய்துவிட்டார்.
காதகரின் கைவிரலை, அந்த நாளில்,
கற்றவர்கள் துண்டித்து இருத்தல் வேண்டும்!
சாதுவைப் போல் அவரெல்லாம் இருந்த தாலே,
தண்ணீரை, ஜலமாகத் திருப்பி விட்டார்.

ஆதியிலே நம்பெரியோர், வெண் ணிலாவை;
அதுவும் ஓர் உலகம் எனத் தீர்மா னித்தார்.
பாதியிலே வந்தவர்கள், நிலவு தன்னைப்
பகவானாய் ஆக்கிவிட்டார். அதனால் இங்கே,
சோதிட நூல் தோன்றிற்று. அந்த நூலின்
சொற்களிலே ஏமாந்தார் நமது மாந்தர்.
தூது செலும் வர்க்கம். தன் பிழைப்புக் காகச்
செய்திட்ட சூழ்ச்சிதனில், வெற்றி பெற்றார்.

ஆதியிலே வாள்வேந்தர் முத்தை; முத்தம்
அளிக்கின்ற மனைவிக்கு, அளித்து வந்தார்.
பாதியிலே அம்முத்தை, ராணிப் பெண்கள்;
பாவலர்க்குப் பரிசாக ஈந்து வந்தார்.
வேதியர்கள் கைநீட்ட, அந்த முத்தை,
விருப்பமுடன் தமிழ்ப்புலவர் அவர்க்குத் தந்தார்.
மீதியுள தமிழரெலாம், பொய்யர் சொன்ன,
மோட்சத்தைப் பெறுதற்குப் பொருள் தொலைத்தார்.

ஆதியிலே வியாபாரக் கப்பல் ஓட்டி
அருஞ்செல்வம் சேர்த்திட்டார், பட்டி னத்தார்.
பாதியிலே, பலதெய்வந் தனைக்கண் டித்துப்
பழத்தமிழில், விரிவாக விளக்கம் தந்தார்.
வேதியர்கள் தூண்டிவிட; அவரை மக்கள்;
மண்குழியில் உயிரோடு மூடி விட்டார்!
சேதியறி யாதிருக்க, சூழ்ச்சி செய்தோர்,
சமாதியடைந் தார் என்று கட்டி விட்டார்.

ஆதியிலே தன்னருகில் அமர்ந்து பேச
அன்புள்ள மனையாட்டி, கூச்சப் பட்டாள்.
பாதியிலே, ஓர்பாயில், இருவர் ஆனார்,
பிறகு அவள் கருவுற்றாள். நகர்ந்து கொண்டான்;
சூதறியா தேசிங்கு ராஜன் - என்று,
சொல்வதற்கு வழியில்லா வகையில்; அன்னோன்
காதல் செயும் பருவத்தைக் சூழ்ச்சிப் பொய்யன்
கெடுத்திட்டான். தோஷமெனும், பொய்யைக் கூறி!

இதழ் : 'முரசொலி' - 28.1.1955

## வாக்குமூலம்

உளியின்வாய் போன்றுள்ள கூழாங் கல்லை,
உருட்டிக் கொண் டோடுகின்ற அருவி யோரம்;
கிளிப்பேச்சுக் கன்னியிடம் ஈர முத்தம்
கேட்டுக்கொண் டேயிருந்தேன் கனவில்! அங்கே,
பளிச்சென்றுப் புகழேந்திப் புலவர் வந்து
பாண்டியரின் வரலாறு உனக்கு வேண்டின்,
தவக்கோட்டம் எனும்சிற்றூர் தென் புறத்தில்
தோண்டிப்பார் என்றிட்டார். வாழ்த்துச் சொன்னேன்!

குரங்கின்கை விரல்போன்ற பயிற்றங் காயைக்
கொய்தபடி இருந்திட்டேன் கனவில்! செய்யுள்,
தரும்பொய்யா மொழிப்புலவர், என்முன் வந்து -
தமிழரசன் எனைநோக்கி; சிலைக வாக
இருந்திட்டப் புலவர்களைப் பேச வைபும்
என்றானாம்! நான்பேச வைத்திட் டேனாம்!
ஒருநாளும் இதுபோல நடந்த தில்லை.
வீண்கட்டுக் கதைஎன்றார். விழித்துக் கொண்டேன்!

குச்சியினால் சூரணத்தை எடுத்துப் பிஞ்சுக்
கொழுந்தைப்போல் நாமமிடும் குடுமிக் கும்பல்,
உச்சிகுளிர்ந் திடஎன்னைப் புகழ்ந்த தாலே
ஒழுக்கமிலா ராமனையான், கடவுள் என்று,
பச்சைபச்சை யாய்ப்புளுகி எழுதி விட்டேன்.
பேர்பெற்ற பெரும்பொய்யன்; இனத் துரோகி,
இச்சகத்தில் எவருமில்லை என்னைப் போல!
என்றிட்டான், என்கனவில் - இறந்த கம்பன்!

வரகரிசிப் பொரிபோல வாய் விரிந்த
வண்ணமலர் மரக்கூட்டம் நிறைந்த நாட்டார்;
முருகனிடம் நான்தோற்று விட்ட தாக
வேண்டுமெனப் பொய்சேர்த்துக் கூறு கின்றார்.
கருநாவல் மரத்தோப்பில் குடி யிருந்த
கிழவிக்கா, சுட்டபழம் என்றால் - அந்தப்
பரிபாஷை புரியாமல் போகும்? - என்று
பல்லில்லா தமிழ்ஔவைக் கனவில் சொன்னாள்.

கிணற்றைப்போல் இருக்கின்ற குகையில் வாழும்
கொடியவரிப் புலிதன்னைக் கிழித்துக், காட்டில்
பிணமாக்கிக் கொண்டிருந்தேன், கனவில்! அந்தப்
போதினிலே திருவாத வூரர் வந்தார்.
மணிபத்து வரைபேசிக் கொண்டி ருந்தோம்.
முடிவினிலே அவர்சொன்னார்; தம்பி, உன்போல்
துணிவுள்ள தமிழன்தான் யானும், ஆனால்,
தர்ப்பைஇனம் - ஆக்கிவிட்டார் என்னை என்றார்!

வில்ஏந்திப் போர்புரிந்த சேரன்; யானை
வால்போலக் குருத்துவிடும் கரும்பு தன்னைக்
கொல்லையிலே நான்வெட்டிக் கொண்டி ருந்தேன்;
கண்தூக்கம் தருகின்ற கனவில்! என்னை,
செல்லப்பா என்றழைத்தார். திரும்பிப் பார்த்தேன்.
சாதிமத சாத்திரங்கள்; ஓடி வந்த
புல்லர்களின் கல்தெய்வம் தனை மறுக்கும்
பகுத்தறிவு மனிதன்நான், என்றார் சித்தர்!

இதழ் : 'முரசொலி' - 11.2.1955

# திருமண விதவை

மணவாளர் பிணமானார். துடித்தேன்! உப்பின்
வழிவந்த விழிநீரை உதிர்த்தேன்! வெந்தேன்!
மணமலர்கள் இனிசூடல் தவறாம், மற்றோர்
மணம் செய்தல் ஆகாதாம்! நான்கேட் கின்றேன்;
உணவுண்டு எனக்கென்றால், பசியும் உண்டு;
உடல்உண்டேல், உணர்வுண்டு; உணர் விருந்தால்,
துணிமூடிக் கொண்டுள்ள உடல் அணைந்து,
சுகங்கான புதுக்கணவன் வேண்டு மன்றோ?

வெண்பட்டு உடுத்தென்ற வாயால்; இன்று,
வெண்புடைவை உடுத்தென்று உரைக்கின் றாரே,
மண்ஆசை, பொன்ஆசை, மற்ற ஆசை,
மறக்கின்ற பருவமிதா? எனை நெருங்கி,
செண்டே! பெண் சித்திரமே! என அழைக்கத்
திரும்பவும் ஓர் கணவன்வரின் குற்றம் என்றால்,
பெண்டாட்டி செத்தவுடன் ஒருவன்; வேரோர்
பெண்தேடி மணப்பதுவும் குற்றந் தானே?

கோரைப்பாய் தனில்கூட நான் படுத்துக்
கொள்ளுவது கூடாதாம்! வீட்டில் உள்ளோர்;
போரடித்த நெல், களத்தில் கிடத்தல் போலப்
புழுதியிலே உறங்கென்று உரைக்கின் றார்கள்.
நீரருகில் வளர்ந்த ஒரு செடியின் பூவை,
நிலத்தின்மேல் வீசுவதாம்! மெத்தை மீது,
ஊரலைந்து திரிகின்ற நாய் படுத்து
உறங்குதற்கு அனுமதியாம்! சரியா சொல்வீர்?

அப்போதுக் கப்போது, அமுது ஊறும்
 அழகான உதடு தனில் ரசம் இருந்தும்;
உப்பில்லா உணவைப்போல் - பாதுகாக்கும்
 ஓடில்லா வீட்டைப்போல் - சிறப் பிழந்து,
இப்படியே நான்வாழ வேண்டும் என்றால்
 எதற்காக உயிரோடு இருத்தல் வேண்டும்?
ஒப்பாரி வைத்திடவா இவமை? கண்ணீர்
 உதிர்த்தபடி ஏங்கிடவா, விதவை நாட்கள்?

பண்டங்கள் தின்னுதற்கும்; நகைகள் யாவும்,
 பலர்காண அணிதற்கும் - மகிழ் வதற்கும்;
உண்டான தேயன்றி செய்து செய்து,
 உபயோகப் படுத்தாமல் அழித்தற் கல்ல!
கண்களிலே பருவஒளி; இனிக்க வைக்கும்
 கற்கண்டு உதடுதனில் துடிக்கும் சக்தி;
எண்ணத்தில் ஆண் ஆசை; எனக் கிருக்க,
 எதற்கு மலர்? ஏன் நகைகள்? என்கின் றாரே?

மருதநிலச் சேற்றினிலே மலரும், செந்தா
 மரைமுகத்தில் திலகமிடல் தவறா? வாசம்
தருகின்ற சந்தனத்தைப் பூசிக் கொள்வல்
 தவறென்றால், ஏன் தவறு? பார்ப்பான் கூறும்,
விரதத்திலே இளைத்தல் சரியா? இல்லை,
 மீண்டும் நான் கன்னத்தில் முத்தம் வாங்கிச்
சுரதத்திலே இளைத்தல் சரியா? நீங்கள்
 சொல்லுங்கள் சிந்தித்து நல்ல தீர்ப்பு!

இதழ் : 'முரசொலி' - 25.2.1955

## சிலை வைப்போம்

மடையரெலாம், ஆரியர்கள் புனைந்து வைத்த
மதத்திற்கும், கடவுட்கும் தாசர் ஆனார்.
முடிவேந்தர் பாராட்டைப் பெற்ற கம்பர்;
முன்னாளில் திருவொற்றி யூரில் வாழ்ந்த
வடிவழகி, வேல்விழியாள், மென்கு ரும்பை
வல்லிஎனும் தாசியிடம் தாசன் ஆனார்.
எடுத்திடடா கொலைவாளை - என்று சொன்ன
இவரோ ஓர் அறிஞர்க்கு தாசன் ஆனார்!

வெடித்தவுடன் விரைந்தோடும் ஆம ணக்கின்
விதைஎன்றால், பாரதிக்குப் பொருந்தும். கீழே
அடித்தவுடன் மேலெழும்பும் பந்து என்றால்,
அது புரட்சிக் கவிஞருக்கே பொருந்தும். வாழ்வில்
இடர்பட்ட பாரதியும் இவரும், யாப்பின்
இணைமோனை போன்றவர்கள். தமிழைக் காக்கத்
தொடுத்துநமக் களித்துள்ள இருவர் பாட்டும்,
சொத்தைவரிக் கூட்டமல்ல. கருத்தின் சத்தம்!

பெண்டீரை விடமென்றும், வேம்பு என்றும்
பாடியவர் பட்டினத்தார். பெண்டீ ரைப்பூச்
செண்டென்றும், செங்கரும்புத் துண்டு என்றும்,
செப்புமிவர், பட்டினத்தார் பகைவன். தெய்வச்
சண்டை யிட்ட தேவாரப் பார்ப்பான். ஞான
சம்பந்தன் கொள்கைதனை, வாட்டி வைத்த
முண்டாக பாரதியின் தொண்டன்! சாவின்
முடிவுள்ள மணல்உலகின், கீர்த்தி சேர்த்தோன்!

உவமைக்கு இடைக்காடன். அழுத்த மாக
உரைப்பதிலே மணவாள தாசர். எண்ணம்
தவறென்றால், அங்கேயே, அந்தப் போதே
தடுக்கும் உயிர் நக்கீரன். வெண்சி ரிப்புச்
சுவையோடு எழுதுவதில். நல்லூர் - ராமச்
சந்தரகவி ராயருக்கு இவர்தான் ஈடு.
சிவன்திருமால் நடத்தைதனைக் கவியால், கிண்டல்
செய்வதிலே இரட்டையரில் ஒருவர் ஆவர்.

சதிசெய்யும் ஆரியத்தை, மதத்தைப் பற்றிச்
சத்தமிட்டுத் தினந்தோறும் பேசிப் பேசி
எதிர்ப்பினிலே வளர்ந்துள்ளோர். இந்த நாட்டில்
ஏழெட்டு பேர் உண்டு. எனினும், அந்த
மதிப்புள்ள மனிதர்களுள் இவரே, மன்னர்
மாணிக்கம். மற்றவர்கள், பவளம், முத்து.
உதிக்கின்ற செங்கதிரோன், இவர்தான் என்றால்,
ஒளிவிளக்குப் பேர்வழிகள் எதிர்நிற் பாரா?

வேரடிக்கு வாருங்கள் அத்தான். காதல்
வினைபுரிவோம் என்றிடுவாள். மங்கை, வேம்பின்
வேரடிக்கு வாருங்கள், நீங்கள் வேண்டும்
வரம்பெறலாம் என்றுபூ சாரி சொல்வான்.
வேரடிக்கு வாருங்கள் என்பார். பந்து
விளையாட சிறுவரெலாம். இவரோ, காய்ந்த
வேரடுக்கி வாருங்கள், தீவ வர்ப்போம்;
வேண்டாத மதநூலை எரிப்போம் என்பார்!

ஓம்ரீங்யங் எனக்கூறி, சுருட்டு வோரை,
உதைத்தால்தான் சரிப்படுவர். எதற்கும், நாட்டில்
ஆம்போடும் ஆசாமி, முன்னேற் றத்தை
அடைக்கின்ற மரக்கதவு! ஆக்கித் தின்னும்
சேம்பென்று நினைக்கின்றான் வடக்கு நாட்டான்.
செந்தமிழா நமைஎல்லாம். இக்கூட்டத்தைப்
பாம்பென்று நீஉணர்க. உடனே இந்தப்
பகல்நேரத் திருடர்களை விரட்டு என்பார்.


அணில்முதுகு முக்கோடுச் சைவர்; ஆற்று
அரங்கத்து எம்பெருமான். கருங்கால் காலில்,
மணிக்கணக்கி லேவீழ்ந்து வணங்கும் பக்தி
மான்களெல்லாம், இவர்நூலைத் துன்பஞ் செய்யும்
பிணியென்பர். இப்பேச்சைக் கவிஞர் கேட்டால்,
பேயர்களே! மேடையிதோ; நானும் வந்தேன்;
துணிவுண்டா வாதமிட? எங்கே? என்று
சுயமரியா தைக்கேள்வி ஆரம் பிப்பார்.

திருடுதற்கு நிலைமைதனை ஏற்ப டுத்தும்,
திருந்தாத சட்டங்கள்; நொந்தும் வெந்தும்,
நுரையற்ற கண்ணீரைச் சிந்திச் சிந்தி
நிலந்தன்னை நனைப்பவர்கள்; இதைத் தொடர்ந்து
நெருக்கடிகள். இவ்வளவும் இருத்தல் கண்டு,
நெற்கதிரை அறுக்கின்ற தமிழா, இன்று
இருட்டறையில் உள்ளதடா உலகம் - என்று
எவன்சொன்னான் இவரைப்போல் இந்த நாட்டில்?

பதர்கலந்த செந்நெல்லைப் புடைத்தல் போலப்
பைந்தமிழில் படிந்துள்ள பிறர்சொல் போக்கிப்
புதுவளர்ச்சி தருவதிலும்; பிறந்த நாட்டில்
புரட்சிதனை வளர்ப்பதிலும்; புதிய பூவின்
மதுபோன்ற கவியெழுதி, மாந்தர் தம்மை
வசமாக்கிக் கொள்வதிலும் இவரைப் போல
இதுவரைக்கும் கவிமனிதன் பிறந்த தில்லை,
இந்தஇரு பத்துநூற் றாண்டு தன்னில்!

மங்கலச்சொல் வைத்தெழுதும் வழக்கம் எல்லாம்
மலையேறிப் போயிற்றாம். ஆமாம். மாசம்,
திங்களென மாறட்டும். இதுதான் வேண்டும்.
தெளிவாகச் சொல்வதெனில், வடசொல் வேண்டாம்!
கங்கைமனம் நம்மவர்க்கு எதற்கு? நாமோ
காவிரியின் நினைப்பாளர் - என்று கூற
இங்கொருத்தர் இருக்கின்றார் என்றால், அந்த
இரணியனின் வாழையடி இவர்தான் கண்டீர்!

ஊர்ஊராய் ஏடுகளைத் தேடி, ஏட்டின்
உட்புறத்தில் பதம்மாற்றி, ஆரியத்தை
வேர்ஊன்ற வைத்து, மொழி மோசம் செய்த
விடப்பாம்பு மனிதர்க்கும்; வஞ் கர்க்கும்;
நீர்ஓசை வருகின்ற கடலின் ஓரம்
நீண்டகருங் கற்சிலைகள்! நம்மொ ழிக்கு,
சீர்தந்த இவருக்கோ, இன்னும் நாட்டில்,
சிலைஇல்லை. இதுநமக்கு மிகவும் வெட்கம்!





இதழ் : 'முரசொலி' - 22.4.1955

# தென்னாட்டின் சித்திரையே!

தென்னாட்டின் சித்திரையே! தமிழ்நூல் தந்த
தேனெழுத்தின் உச்சரிப்பே! நடுங்க வைக்கும்
பின்பனிக்குப் பின்பிறந்த புதிய ஆண்டே!
பேருணர்ச்சி தருகின்ற வெயிலே! இங்கு
உன்னாலே புதுஇனிமை காண்போம். உன்றன்
உத்தரவை மரத்திலுள்ள இலைகள் கேட்கும்.
பொன்னாளே! புகழ்பெருக்கிக் கொள்ளும் நாளே!
புதுமைதரும் இளவேனிற் பருவ நாளே!

இதுவரையில் பின்பனியால் துன்ப முற்றோம்
இனிமேலே, அத்துன்பம் எங்கட் கில்லை.
புதுவாழ்வு தருவதற்கு வந்தி ருக்கும்,
புத்தாண்டுச் சித்திரையே! இன்றி ருந்து
பொதியமலை இளங்காற்றை அசைய வைப்பாய்;
பொன்வண்டு அன்றில்தனை மகிழ வைப்பாய்.
முதிர்புன்னை, முள்தாழை மலரும்; மக்கள்
மூச்சோடு புதியமணம் சேர்ந்து கொள்ளும்.

இத்தரையைச் சூடாக்கப் போகும் உன்னை,
இளவேனில் என்கின்றார். ஆனால், யானோ,
வித்தினிலே நீபிறந்து இருந்தால், மாந்தர்
விரும்புகின்ற 'மாதுளையே' என்ற ழைப்பேன்.
முத்தைப்போல் அழகாகத் திரண்டி ருக்கும்
முட்டையிலே பிறந்திருந்தால் 'கிளியே' என்பேன்.
'சித்தரை'என் றழைக்கின்றார். உன்னை, ஆனால்,
தெரியவில்லை, எனக்குஇதன் பொருள்வி ளக்கம்.

வாய்க்காலின் தண்ணீரில், வயல்கூட் டத்தின்
வரலாறும், செந்நெல்லின் கதையும் உண்டு.
தேய்க்கின்ற சந்தனத்தில், தென்றல் காற்றின்
சிறுகதையும், தென்மலையின் குறிப்பும் உண்டு.
தாய்ப்பாலில், குடும்பத்தின் கதையும், நாட்டின்
சரித்திரமும் இருப்பதுண்டு; உனது வாழ்வில்,
ஓய்வின்றி உழைக்கின்ற செயலும், தெற்கு
உலகத்தின் பழங்காலக் கதையும் உண்டு.

மாங்கனியைச் சிவப்பாக்கி, இந்த நாட்டு
மனிதர்களைக் கறுப்பாக்கும் வெய்யில் பின்னால்!
"ஏங்குகின்றார் பெரும்பாலோர், கண்ணீர் வாழ்வால்
இளைக்கின்றார் ஏழைமக்கள்" என்று நாட்டைத்
தாங்குகின்ற முதலமைச்சர் இடத்தில் சொல்லு
'தமிழ்நாடு' என்றுபெயர் வைக்கச் சொல்லு.
ஓங்குபுகழ் தமிழ்நாட்டின் இருளை நீக்க,
ஒளிவீசும் சுடர்விளக்கு ஏற்றச் சொல்லு.

புத்தாண்டே நீவருக, வாழ்க! சோலைப்
பூங்குயிலைப் பாடவைக்கும் வெயிலே வாழ்க!
சித்திரையே, நீவளர்க. வாழ்க! ஆதிச்
செந்தமிழர் வகுத்தபெரும் பொழுதே வாழ்க!
நித்திரையை இனிப்பாக்கிக் கொள்வ தற்கு
நிலவுதனை அனுப்பிவைக்கும் நெருப்பே வாழ்க!
கத்துகடல் முத்தெடுக்கும் தமிழ்நாட் டார்க்குக்
கல்யாணத் தேதிதரும் கனவே வாழ்க!

இதழ் : 'சுதேசமித்திரன்' - 13.4.1957

# சுதந்திர தினம்!

அடிமை எனும் நிலைமாறி எட்டு ஆண்டு
ஆயிற்றே, அதற்குப்பின் விளைந்த தென்ன?
அடைப்பட்ட சுரங்கம்போல் அவல நிலையே
ஆயிற்று! அதுவன்றி மக்கள் தங்கப்
படிமீதா நடக்கின்றார்? இல்லை! அந்தப்
பழையநிலை; நாடோறும் புதிய கண்ணீர்!
தொடர்ந்தபடி அரசாங்கத் திருநாள்; எங்கும்
சோகநிலை! அதனிடையே இந்தத் தேதி!

நள்ளிரவில் ஆட்சிதனை ஏற்றுக் கொண்ட
நாள்முதலாய் இன்றுவரை, கதர்க்கட்சி
எள்மூக்கு அளவேனும் ஏழை மக்கள்
இன்னல்தனை நீக்கிற்றா? இல்லை! இங்கே
கொள்ளையடிக் கின்றாரே அவர்க ளூத்தில்,
கொக்கித்தான் மாட்டிற்றா? ஏதோ சும்மா,
வெள்ளையடிக் கின்றார்கள் தெருவில்! இந்த
வேடிக்கை யும்உலக விளம்ப ரந்தான்!

இதழ் : 'தினத்தந்தி' - 15.8.1955

## கவிஞர் வாழ்த்துகிறார்!

தென்றல் என்னும் காற்றின் பெயரும்,
அலைஎனும் பொருள்தரும் திரையின் பெயரும்,
ஒன்றுசேர்ந்து, ஒரே பெயராகி,
திரைப்பட உலகின் தித்திப்புக் கதையை,
மாதத்திற்கு இருமுறை வழங்கும் இவ்வேடு,
சாதி வேண்டாத தமிழ கத்திற்கு,-
தடாகத்திற் கெழில்தரும் தாமரை போன்றது!

சொன்னது சொல்லும் சிறுகிளிப் பிள்ளைப்போல்,
இந்த ஏடு இல்லா திருப்பதைக்
கண்டுநான் மகிழ்கிறேன், மழைமயில் போல!
புதுமை வளர்ந்திட, வழியும் வகையும்,
இந்த ஏட்டில் இருப்பதைப் பார்க்கிறேன்.

மழைநாள் தன்னில் மனிதர்க்குவெப் பத்தையும்,
கோடைப் பருவத்தில், குளிர்ச்சி தன்னையும்,
வழங்க வல்லது. மாலைத் தென்றல்-
பொதிகையி லிருந்து புறப்படும் தென்றலின்
குளிர்ச்சி தன்னை கொடுத்து வருவது
இந்தத் திரைஉலக ஏடு, ஆதலால்,
இதனை எனது எழுத்தால் புகழ்கிறேன்.

தந்தை யிடத்தில் விளையாடும் குழந்தை
தாயின் மடிக்குத் தாவுதல் போல,
இருக்கும் இந்த ஏடு,
வரிப்புலிச் சோழன் கீர்த்திபோல் வாழ்கவே!

இதழ் : 'தென்றல்திரை' - 1.9.1957

## நெய்வேலி நீர்மடந்தை

வையத்தின் மேற்புறம்நான் வந்த தில்லை;
மனிதரையும் நான்பார்த்த தில்லை; நானோ
நெய்வேலி நிலத்திற்குள் வாழு கின்றேன்!
நிலாஉண்டாம் விண்மீது, உயிர்கள் உண்டாம்!
பொய்யோமெய் யோஅறியேன்! பூமிக் குள்ளே
புகுந் துளனைத் தழுவுகின்ற மழைநீர் கூறும்
செய்திஇவை சரிதானா? அகண்ட இந்து
தேசத்தை ஆள்பவரோ நேரு ஜீயாம்!

நிலக்கரிஎன் றெனைப்புவியில் அழைக்கின் றார்கள்;
நிலக்கரிதான்; கீழ்நீரின் மனைவி நான்தான்!
உலகத்தில் எனைஎழுப்பி விடுங்கள், உங்கள்
உலகுதனைக் காட்டுங்கள் எனக்கு; பின்னர்
பலநன்மை நான்செய்வேன்! தவற மாட்டேன்!
பண்டிதரே! நேருஜியே! தெற்கே வந்து
அலைஓசை செய்கின்றீர்! இன்னும் என்னை
அழுத்துகின்றீர்! தென்னாட்டை நசுக்கு கின்றீர்.

'இத்தரைக்குள் என்னைப்போல் படுத்துக் கொண்டு
இருக்கின்ற பசும்பொன்னை எழுப்பு கின்றீர்'!
எத்தனைநூற் றாண்டுகளாய் அடிநி லத்தில்
இருக்கின்றேன் மல்லாந்த ஆமை போல!
சித்தமுண்டோ உண்மையிலே எனைஎ ழுப்ப!
சிரத்தையுண்டா எனைப்பற்றி உமக்கு இங்கே!
இத்தனைநாள் சிறைவாசம் போதும்! காட்டு
எருமைக்கு என் முகத்தைக் காட்ட வேண்டும்!

வடநாட்டு பீகாரில் அஸ்ஸாம் தன்னில்
மணிபுரியின் மண்ணுக்குள் நானி ருந்தால்
கிடப்பேனோ இவ்வாறு? வடக்கில் உள்ளோர்
கிடக்கத்தான் விடவாரா? என்னை டில்லி
குடைசாய்க்கும் தென்னாட்டில் இருப்ப தாலே
குளிர்நீரில் நனைந்தபடி இருக்கின் றேன்நான்!
கெடுக்கின்றார் வேண்டுமென்றே நேரு என்னை!
கேட்டாலோ பதர்வார்த்தை வழங்கு கின்றார்!

அழகாக நானிருக்க மாட்டேன், நேரு
ஐயாவே, நீர்என்னைத் தொடவே வேண்டாம்!
தொழிலாளர் எனைத்தொட்டால் போதும்! என்னைத்
தொடுவதனால் உமக்குஒரு பயனு மில்லை!
அழகான பெண்ணுடலைத் தீண்டி டாமல்,
அவள்நிழலைத் தொடுவதனால் இன்பம் உண்டோ?
அழுதுகொண்டு இருக்கின்றேன்! பூமி என்னை
அழுத்துகின்ற காரணத்தால் நசுங்கு கின்றேன்!



இதழ் : 'சக்கரம்' - 22.12.1957


## நெருப்பு வாசல்

தனிப்பாடல் திரட்டுதனைத் தொகுத்துத் தந்த,
சந்திரசே கரப்புலவர் பிறந்த நல்லூர்;
சினைக்கயல்தன் சண்டையிட்டுக் கொள்ளு கின்ற
தில்லையம்பூர் எனும்சிற்றூர்! அந்த ஊரில்,
தினைஎன்னும் பெயருடையாள் ஒருத்தி! தெற்குத்
தென்றலிலே சிலிர்த்தபடி நின்றிருந்தாள்.
பனையப்பன் அங்குவர; வந்த பின்னர்,
பனிமலரும், மணிவண்டும் நடந்து சென்றார்.

இலைத்தோப்பில் போய் அமர்ந்து இரண்டு பேரும்
இதழ் ஈரக் கதைபேசி மகிழ லானார்.
மலையில்லை அத்தான் இவ்வூரில் என்று,
மாதளம்பூ இதழ்திறந்து மங்கை சொன்னாள்.
மலையில்லை என்றாலும், என்பக் கத்தில்
மயில்உண்டு. எனக்கூறிக் கொண்டே, தங்கச்
சிலையழகி கண்ணில்தன் கண்ணை இட்டுச்
சிரித்தபடி மீண்டும்அவன் பேச லானான்.

கண்ணாலே பேசாமல் பேச; கட்டிக்
கற்கண்டே! பூச்செண்டே! கரும்பே! என்றான்.
பெண்பறவை விழியாலே பேச லானாள்.
பேரழகன், கொக்கோகம் கற்றுக் கொண்டான்.
கண்ணாடி வாசலைப்போல் இருக்கும் கண்கள்;
காதலிலே ஈடுபடும் நேரந் தன்னில்,
வெண்தாழம் பூவாகும்; அன்பு காட்டும்
வேளையிலே வெள்ளிநிலா விளக்கு ஆகும்!

கண்ணைப்போல் சிறந்ததொரு உறுப்பு இல்லை;
கண்ணைப்போல் சிறந்தகடல் உலகில் இல்லை;
கண்ணைப்போல் சிறந்ததொரு அழைப்பும் இல்லை;
கண்ணைப்போல் சுடும்நெருப்பு வாசல் இல்லை;
கண்ணாலே விண்ணுக்கு வண்ணம் பூசும்
'காதலியே' என்றிட்டான்; பிறகு அந்தப்
பெண்ணமுதம் அவன்மீது சாய்ந்தாள்; பின்னர்
பேச்சில்லை, அவர் உடலில் உடையும் இல்லை!



இதழ் : 'இலட்சியவாதி' - 15.5.1958

## இது,

இனஉணர்ச்சி தனைவளர்க்கும்; சாதி பேத
இருட்டுதனை விரட்டுதற்கு விளக்கு ஏற்றும்;
பனித்துளிபோல் எழுத்துக்கள் வளர்த்துக் காட்டிப்
பணம்காசு சேர்க்கும்சில ஏடு போல,
பனித்துளியை வளர்க்காது இந்த ஏடு!
பயனுள்ள, பயிர்விரும்பும் மழைஉண் டாக்கும்!
இனிப்பென்னும் விருந்துவைக்கும், படிப்ப வர்க்கு,
இறவாத தமிழ்என்னும் அமுதத் தாலே!

தென்பாண்டி முத்ததைப்போல்; சோழ நாட்டின்
செந்நெல் போல் வரலாற்று மதிப்பு வாய்ந்த,
முன்னேற்றக் கருத்துக்கள் வளர்க்கும் தன்னால்.
முடிந்தவரை தமிழுக்குத் தொண்டு செய்யும்
பன்னாடை அரசியலைப் பற்றிப் பேசும்
பட்டாளக் கூட்டத்தைத் தட்டிக் கேட்கும்;
முன்னேற்றும், முன்னேறும்; ஏட்டின் எண்ணம்
முன்னோடும், எய்ததொரு அம்பு போல!

நிலம்வாங்கும் எண்ணத்தைக் குறைத்துக், கல்வி
நிதிசேர்க்க முயலுங்கள்; புதுமை தேடி,
கலைவாழ்வை வளருங்கள்! என்னும் வைரக்
கருத்துக்கள் உரித்துவைத்து, நமது மக்கள்
நலத்திற்குப் பாடுபடப் பிறந்து, நல்ல
நறுஞ்செய்யுள் வரிப்பாதை போடும், இந்த
இலக்கியத்தை ஆதரிக்க வேண்டு கின்றோம்,
எல்லோரும் இதைவாங்க வேண்டு கின்றோம்.

இதழ் : 'இலக்கியம்' - 20.5.1958

# திருமணம்!

செந்தமிழில் வடமொழியைக் கலப்ப தாலே,
தீதொன்றும் வாராது; இந்தச் சேர்க்கை,
நந்தமிழாம் நெற்பயிரை வளர்ப்ப தற்கு
நல்லதொரு எருவேதான்; என்று கூறும்-
அந்தணரைப் போல் நிறமும், குணமும் கொண்ட
அமைச்சர்பிரான், கனம்சுப்ர மண்யம் போன்று,
சந்தனத்தில் வெந்தயத்துள் சேர்க்கச் சொல்லும்
தமிழனுக்கு மணமாலை சூட்டி டாதே!

தாய்நாட்டின் மீதினிலும்; உயிரைப் போன்ற
தமிழ்மொழியின் மீதினிலும், பற்றில் லாதோன்,
நாய்உணவு தேடுபவன்! அவன்உ னக்கு,
நல்லவனாய் இருப்பதற்கு வழியே இல்லை!
தாய்ச் சொல்ல, அதைக்கேட்டு உனது பெற்றோர்,
சம்மதித்தேன் பெண்கொடுக்க, என்றிட் டாலும்;
பாய் இனிப்புத் தருகின்ற மனைவி யாகிப்
பணவாழ்வுக் காகவிலை பொருவா காதே!

சாதிமதம் கேட்பவனை மணந்திடாதே!
சரித்திரத்தை இழுக்காமல்; மாந்தர் வாழ்வில்,
பேதமையை வளர்த்துவரும் சாத்தி ரத்தைப்
பேச்சுக்குப் பேச்சிழுத்துப் பேசு கின்ற,
பாதிமண்டைத் தமிழ்மகனை மணந்தி டாதே
பதவி எண்ணம் உடையவனை மணந்தி டாதே!
நீதிதரும் திருக்குறளில் ஒருநூ றேனும்
நிச்சயமாய்த் தெரிந்தவனைத் தேர்ந்தெ டுப்பாய்!

இதழ் : 'இலக்கியம்' - 20.5.1958

# வெற்றிலையும் வேந்தனும்

உடம்பெங்கும் சுடுகிறது பெண்ணே! என்று,
உளிகொண்டு சிலை செய்யும் சிற்பி சொன்னான்.
தொடமட்டும் சம்மதிப்பேன், என்தோள் மீது,
தொத்துதற்கென் றால்ஊஹூம்! என்றாள் மங்கை.
தடைபோட்டு, ஏதேதோ சொல்லி, என்னைத்
தணல்மீது நிறுத்தாதே! தராசில் வைத்து,
எடைபோட்டு நிறுக்காத பொன்னே! வானம்,
எழுதுகின்ற மழைவில்லே! மயிலே! என்றான்.

காம்புதனைக் கிள்ளுங்கள் என்றாள்; சிற்பக்
கலைவாணன், ஆசையொடு அருகில் சென்றான்.
காம்புதனைக் கிள்ளிவிட்டு, உடனே உங்கள்
கரத்தாலே தடவுங்கள், மெதுவாய் என்றாள்.
மாம்பிஞ்சின் பிளவைப்போல் விழிஅ மைந்த
மங்கையின்முன் நெருங்கிட, வெற் றிலையில் உள்ள,
காம்புதனைக் கிள்ளுங்கள், என்னை அல்ல!
கனியைப் போல் தின்னுங்கள் பாக்கை என்றாள்.

கட்டழகி இவ்வாறு உரைத்தாள்; இன்பக்
கனவுகளும், ஆசைகளும் தவர, கோழி
முட்டையின்மேல் சுருக்கிட்ட நூல்போல் ஆனான்.
முத்துவைத்து சிரிக்கின்ற மங்கை; நீங்கள்,
எட்டிநிற்க இனிமேல்நான் விரும்ப வில்லை.
இவைஅனைத்தும் பொய்யான விளையாட் டென்றாள்.
பிட்டுக்கு மண்சுமந்தான் ஒருவன்; உன்வாய்ப்
பேச்சுக்குத் தேன்சுமப்பேன் என்று தொட்டான்.

ஆலமரத் தின்இலையைப் போன்றி ருந்த
அவள்வயிறு; ஆமையைப்போல் ஆன தாலே,
வாலிபத்தின் முழுப்பயனைப் பெறுவ தற்கு,
வகையில்லை, என்பதனை அறிந்த சிற்பி;
நாலிரண்டு எட்டுமுத்தம் நங்கைக் கிட்டான்.
காலோடு நாலுமுத்தம், அவளும் இட்டாள்.
நீலவிழி நிலவேநீ வாவா என்றான்.
நித்திரையே! என்விழிக்கு வாவா! என்றாள்.

ஓய்வுதரும் நித்திரையை, விழிக்குள் வைத்தாள்.
ஒளிஇழந்து, மிகமெலிந்து, இரவு நேரம்,
தேய்ந்தோட, அவள்எழுந்தாள்! எழுந்தான் சிற்பி!
சித்திரமே என்றழைத்தான், வஞ்சி வந்தாள்.
காய்சிவந்தால், கனிஎன்றான்! படுக்கை மீது
கண்சிவந்தால், காமத்தைக் குறிக்கும், என்றாள்!
போய்வருகின் றேன்பெண்ணே, என்றெ ழுந்தான்.
பொழுதோடு வாருங்கள், என்றாள் மங்கை.

பொழுதோடு வந்தென்ன? பத்து நாட்கள்
போனபின்னர் வந்தால்தான் என்ன? பெண்ணே,
எழுஎன்றால், மறுக்கின்றாய்; இரவோ என்னை,
எரிகின்ற திரிவிளக்கின் மீதி ருந்து,
வழிகின்ற எண்ணெயைப்போல், சுடுதே அன்றி,
மழைபோன்று குளிர்ச்சிதர வில்லை என்றான்.
பழிக்காதீர், பயன்படுவேன் பிறகு என்றாள்,
பாவையிடம் விடைபெற்று எழுந்தான் சிற்பி!

மாமதுரை மீனாட்சி அம்மன் கோவில்
வாசலிலே கால்வைத்து, உள்ளே வந்தான்.
தேமதுரத் தமிழிருக்க, ஆர்ய மந்த்ரம்
செய்தபடி அர்ச்சனைகள் நடக்கக் கண்டு,
பூமெத்தை வேண்டுகின்ற தெய்வத் திற்குப்
பொய்மனைவி; பொய்த்திருநாள்; போலிக் கும்பல்;
ஊமைநிலை இன்னும்நம் நாட்டில்; நன்றாய்
உதைப்பதற்கு ஆள்இல்லை என்றான் சிற்பி.

கல்லின்மேல் தன்கண்ணை நிறுத்தி, அந்தக்
கண்நின்ற இடந்தன்னில் உளியை வைத்தான்.
மெல்லுதற்கும், அவன்உதடு சிவப்ப தற்கும்,
வெற்றிலையை ஓர்சிறுவன் மடித்துத் தந்தான்.
பல்லக்கு வேண்டுமடா மச்சான் - என்னும்
பாடல்ஒன்று மிதந்துவரக் கேட்டுக் கொண்டே,
நல்லதொரு பெண்சிலையை வடித்து வந்தான்.
நாள்தோறும், சிற்றுளியின் சத்தம் தந்தான்.

வழக்கம்போல், அன்றைக்கும் சிற்பி வந்தான்,
வந்தவுடன், வேலைதனில் ஈடு பட்டான்.
வழக்கம்போல், சிலைசெய்வோன் கையை நீட்ட,
வாடாத வெற்றிலையைப் பையன் நீட்ட,
பழம்போன்று தன் உதட்டை மாற்றிக் கொண்டு,
பழையபடி சிலைவேலை செய்ய லுற்றான்.
அழகரசன், திருமலைநா யக்க மன்னன்,
அமைச்சரோடு, அறிஞரோடு, அங்கே வந்தான்.

வண்டுதொடும் பூமாலை வேந்தன், அங்கு
வரக்கண்டு, எல்லோரும் எழுந்து நின்றார்.
முண்டாசு பாரதிபோல் உணர்ச்சி மிக்க
முழுக்கலைஞன்; வாள்வீரம் காட்டும் வேந்தன்
அண்டையிலே நிற்பதனை அறிய வில்லை.
அதனாலே அமர்ந்தபடி இருந்தான், எங்கே
வண்ணப்பா, என்று அவன் தன்க ரத்தை
வழக்கம்போல் வெற்றிலைக்கு நீட்ட லானான்.

வரும்பொருளை உரைக்கின்ற அமைச்சர்; என்றும்,
வாடாத பேரறிஞர், ஆளும் வேந்தர்,
அருகினிலே இருந்திட்ட கார ணத்தால்,
அவ்விளைஞன், வெற்றிலையை சிற்பி கையில்,
தருவதற்குத் தயங்கிக்கொண் டிருந்தான். பையன்,
தயங்குவதை முடியரசன் அறிந்து கொண்டு,
பெருங்கலைஞன் போடுதற்குத் தன்க ரத்தால்,
பேரரசன் வெற்றிலையை மடித்துத் தந்தான்.


அரசாள்வோன் வெற்றிலையை மடிக்க; சிற்பி,
அதைவாங்கி மெல்லுதற்குக் கரத்தை நீட்ட,
அருகினிலே நின்றிருந்தோர், அதனைக் கண்டு,
ஆ! என்று வாய்பிளந்து வியக்க; மூக்கில்,
துரும்பெடுத்து, நுழைக்காமல் இயற்கை யாகத்
தும்மல்வர, சிலைசெய்வோன் தும்மிக் கொண்டே,
திரும்பலுற்றான், திடுக்கிட்டான், திகைத்தான், வேந்தே
தெரியாமல் பிழைபுரிந்தேன், பொறுப்பீர், என்றான்.

அகவல்வரிக் கவிதந்தான், மோசு கீரன்;
அவனுக்கு ஓர் அரசன் விசிறி விட்டான்.
செகம்புகழும் கம்பனுக்கு சேர வேந்தன்,
சிற்றாள்போல் வெற்றிலையை மடித்துத் தந்தான்,
மிகப்பெரிய கலைஞன் நீ! உன்உ ளிக்கும்,
விரலுக்கும் நான்வாழ்த்துக் கூறு கின்றேன்!
மிகப்பெருமை அடைகின்றேன்; உனக்கு இன்று
வெற்றிலையை நான்மடித்துக் கொடுத்த தற்கு!

என்தலையில் இருந்துவரும் கிரீடம் தன்னை,
எடுத்துவிட்டால், எனக்கேது பெருமை? ஆணிப்
பொன்தூங்கும் ஆசனத்தில் அமரும் என்னைப்
பொதுமக்கள் எழுந்திடுக - என்று சொன்னால்,
அன்றைக்கே நான்இந்த நாட்டின் ஆண்டி!
அங்கங்கே, கையேந்தும் பிச்சைக் காரன்!
இன்றைக்கு நான்மன்னன்; ஆனால் நீயோ,
இப்போதும், எப்போதும், மின்னும் மன்னன்!

பிறப்பினிலே உயர்வுதாழ் வில்லை; ஆனால்,
பெரும்புவியி லேஒவ்வொர் மனித னுக்கும்,
சிறப்பில்வேற் றுமைஉண்டு; எதனால் என்றால்,
செய்கின்ற தொழில்வேறு, அதனால்! சிற்பத்
திறமைதரும் கலைஞன்நீ! வீரம் காக்கும்
தேசத்து வேந்தன்யான்! எனது கீர்த்தி,
இறந்தாலும் இறந்துவிடும், உனது கீர்த்தி,
எந்நாளும் இறவாது, பிணமா காது!

சிற்றோடைத் தண்ணீரில் நனைந்திட் டாலும்,
சிறிதேனும் புருவங்கள் அழிவ தில்லை.
நெற்றியிலே மின்னிக்கொண் டிருக்கும் பொட்டு,
நீராடும் நேரத்தில் அழிந்து போகும்.
கற்றவர்கள், கலைவாணர் சேர்க்கும் கீர்த்தி,
காலத்தால் அழிவதுண்டோ? என்று கூறி,
ஒற்றைக்கல் மோதிரத்தைப் பரிசு தந்தான்.
உடன்வந்தோர், வேந்தனுக்கு வாழ்த்து தந்தார்!



இதழ் : 'இலக்கியம்' - 1.7.1958

**புலவர் பிறந்த ஊர்**

## திருப்பனங்காடு

அம்மைச்சி, அவள்பெயர்! அவளோ, கறுத்த
சேற்றிலே பிறந்த சிவந்த தாமரை!
பலரும் மிதிக்கும் படித்துறை போன்றவள்!
படகு போன்றவள்! பருவ இளைஞர்
பழகி விளையாடும் பந்து போன்றவள்!

அறிவை மயக்குவது, கருவம் ஆகும்.
அந்த கருவம் அமைந்த பருவத்தினள்,
உருக்கிய பசும்பொன் ஒத்த உருவத்தினள்.
பூத்த தாமரைப் பூவின் அருகில்,
ஆடும் தண்ணீர் அலை, புரு வத்தினள்!
கரும்பு போன்று இனிக்கும் சொற்களை,
மருந்து போன்று வடிக்கும் மங்கை!

உதட்டு விற்பனைக் காரி; பணத்தை
உருட்டினால், உடலை ஒட்டும்சிங் காரி!

தாசி! சங்கத் தமிழில் வல்லவன்!
வருணகுலா தித்தன் மடலைத் தந்தவள்.
பதினேழாம் நூற்றாண்டின் பாதிப் பகுதியில்,
வான்முட்டும் புகழொடு வாழ்ந்த கவிஞர்,
வீர ராகவ முதலியார் என்பவர்.

அவரோ, இரண்டு விழிகளும் அற்றவர்!
அறிவில் சிறந்த அந்த அந்தகர்,
சந்திர வாணன் கோவை - க்க விதையைக்
கற்றவர் நிறைந்த காஞ்சி புரத்தில்
அறிஞர் சபையில் அரங்கேற்றம் போது,
முதலியார் பாடலின் மூக்கை உடைத்தவள்.

அழுக்கு சுகந்தரும் அந்த தாசியின்
தகப்பன் யாரென்று சரியாகக் கூற
இயல வில்லை என்றா லும்அவள்,
எந்த ஊரில் பிறந்தவள் என்பதை,
கல்விச் சுவடிகள் கூறு கின்றன.

இரவினில், சேலையை இழுத்து எறிந்து,
பொருள்தரும் ஆண்களைப் போர்வை யாக்கி
இனிக்கும் அந்த எச்சில் மங்கை;
பாட்டுப் பறவை! அப் பனிமலர், பிறந்தஊர்,
பெரிய காஞ்சி புரத்தை அடுத்த,
திருப்பனங் காடு என்னும்
சிறப்பு மிகுந்த சிற்றூர் ஆகுமே!

இதழ் : 'இலக்கியம்' - 15.1.1958

# இருட்டு இனிப்பும்

எட்டுஎட் டென்றான் ஓர்நாள்
இனியவன்; ஓகோ என்னை
எட்டவா சொல்லு கின்றீர்,
என்றவள் பிணங்கிக் கொண்டாள்.
பொட்டலச் சரக்கே! பட்டுப்
பூச்சியே ஏழுக்குப் பின்
எட்டென்று சொன்னேன் கண்ணே
எங்கேஓர் சத்து முத்தம்!

இருட்டுக்கு அழகு இல்லை
என்றிட்டான், சுருண்ட கூந்தல்
திரட்டெல்லாம் இருட்டு தானே,
இதற்கும்இத் தீர்ப்பு தானா?
உரையுங்கள் அத்தான் என்றாள்
ஓவியம்; இளைஞன் கேட்டான்-
விரிவுரை வேண்டு மென்றால்,
வேண்டும்ஓர் சத்து முத்தம்!

நித்திரை எனக்கு வேண்டும்
என்றனன்; அதனைக் கேட்டு,
நித்திரை கடையில் விற்கும்,
வாங்கலாம் என்றாள் நங்கை.
பத்தரை மாற்றுத் தங்கப்
பதுமையே என்ற ழைத்தான்.
பத்தரை மாற்றா? அந்த
அரைவேண்டாம் பத்தே போதும்!

கார்காலம் என்று சொன்னாள்.
காதலி, நெற்றி மீது,
வேர்வைநீர் வருவ தாலே
இதுகோடைக் காலம் என்றான்.
நீர்வேண்டும் என்றாள் நங்கை!
நீவேண்டும் என்றான் நம்பி!
வேர்வேண்டும் நட்புக் கென்றாள்.
விழி வேண்டும் பேச்சுக் கென்றான்.



இதழ் : 'இலக்கியம்' - 1.8.1958

## புலவர் பிறந்த ஊர்

### சென்னி குளம்

ஆயிரத்து எண்ணூற்று எழுபதாம் ஆண்டு!
சிந்திக் கிடக்கும் செம்பவளம் போன்ற,
இந்திர கோபம் என்னும் பூச்சிகள்,
பறந்து திரியும் பயன்மழைக் காலம்

சென்னி குளத்துச் சென்னவ ரெட்டியின்,
வீட்டுக்கு வந்தனர் விருந்தினர் இருவர்.
வந்தோர்க்கு விருந்துவழங்கினார் ரெட்டியார்
மறுநாள் காலை ரெட்டியார் மைந்தன்
அண்ணா மலைஎனும் அஞ்சு வயசுப்
பிஞ்சுப் பிள்ளையைப் பார்த்து விருந்தினர்;
உன்பெயர் என்ன? என்று கேட்டனர்.

என்பெயர் அண்ணா மலைஎன்றுசொல்லி,
பம்பரச் சிறுவன், பனைஓலை தன்னில்,
சகோதர பர்வதம் என்று எழுதினான்.
இயற்கை ஆற்றல் சிறுவனுக்கு இருப்பதை
வந்த விருந்தினர் கண்டு வியந்தனர்
வீட்டுக்கு வந்த விருந்தினரை இவ்வாறு,
வியக்க வைத்தவர், வித்துக் கவிஞர்,
ஓவம் மாவின் வயிற்றில் உருவாகிக்
காவடிச் சிந்து பாடிய பாவலர்;

சந்தத் திருப்புகழ் தந்த அருணகிரி
நாதரைப் போல; நைடதம் பாடிய,
அதிவீர ராம பாண்டியன் போல,
பரத்தையர் மடியில் படுத்துப் புரண்டவர்,
இருபத்து ஆறே ஆண்டுவரை இருந்து,
பெருமணல் உலகில் பிறகுபிணம் ஆனவர்;

தங்கக் கிண்ணங்கள் போலே - மின்னும்
தனங்களும் சாய்ந்த தாலே....

இவ்வாறு பாடிய இளைஞர்; வேசியின்,
மூடாத மார்பைக் கரத்தால் மூடிய,
காம நெருப்புக் கவிஞர் பிறந்தஊர்,
கரிவலம் வந்த நல்லூருக்கு
அருகிலே இருக்கும் அழகிய
சென்னி குளம்எனும் சிற்றூர் ஆகுமே!

இதழ் : 'இலக்கியம்' - 1.8.1958

புலவர் பிறந்த ஊர்

## சிக்கிரி ஐயர் கிராமம்

எடுத்துக் கடிக்கும் இடமெலாம் இனிக்கும்
கரும்பு போன்று கவிதைகள் இயற்றிய
கடிகை முத்துப் புலவர்; வடக்கு,
அரிச்சந்தர புராண வரிச்செய்யுள் வழங்கிய
நல்லூர் வீர கவிராயர் - என்பவர்
குடந்தையில் வாழும் கும்பகவி என்பவர்.
மாந்தைப்பன் பாடிய சிதம்பர தாண்டவ
மதுரகவி ராயர் எனும்மணிக் கவிஞர்;
மாம்பழச் சிங்க நாவலர் திலகம்
முத்து வீரியம் எனும் இலக் கணத்தை
இந்த நாட்டுக்கு எழுதித் தந்த
முத்து வீர உபாத்தி யாயர்;
இவர்கள் அனைவரும்; இவ்வுலகு விரும்பும்
பொன்னை நெருப்பிலே இட்டு எடுத்துத்
தன்இட் டப்படித் தட்டும் பொற் கொல்லர்
மரபில் வந்தவர்! அம் மரபில் வந்தவரே,
துரியகவி திருமலைக் கொழுந்து கவிராயர்;
என்னும் குடுமிக் கவிஞர் ஆவர்!

உருட்டிய சோற்று உண்டை போன்று,
குடுமி வைத்துக் கொண்டு இருந்த,
இந்தக் கவிஞர், சந்தனப் பொதிகைச்
செந்தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தவர்;
கவிஞன் பாரதி குடித்தவன் அதுபோல
பார சீகப் பாவலன் உமர்க்கயாம்
கள்ளினால் உதட்டினைக் கழுவிக் கொண்டவன்
இவரும் குடித்தார் அவர்களைப் போலவே!
அதற்கு ஆதாரம் அடியில் வருமாறு

தாசீசா வொன்றைத் தராவிடிலோ இன்றைக்கு
நீ சீசா வென்றே நிகழ்த்துவேன் இது அவர்!
தங்கச் செங்கதிர் தண்ணீரில் படிந்து
நித்திரை போகும் நீல மாலையில்
வேங்கைப் புலியின் விழியைப் போன்று
தெளிவாக இருக்கும் தென்னங் கள்ளைக்
குடிக்கும் கவிஞர் ஆயினும் செய்யுள்
வடிக்கும் கவிஞர்; வாடாத அறிஞர்!
தமிழை வளர்த்தஇத் தண்ணீர்க் கவிஞர்,
முத்தம் கொடுப்பதும் உண்டு, புறாவின்
சத்தம் கொடுப்பதும் உண்டு படுக்கையில்-
அறுசுவை உணவை அருகினில் அமர்ந்து
ஊட்டும் மனைவி உண்டு ஆதலால்!
இந்தச் சர்க்கரைக் கவிஞர் பிறந்த ஊர்
சிக்கிலி ஐயர் குளம்எனும்
கற்றவர் வாழும் சிற்றூர் ஆகுமே!

---

இதழ் : 'இலக்கியம்' - 15.8.1958

## புலவர் பிறந்த ஊர்

### விருத்தாசலம்

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அருட்பெருஞ் சோதியே! அருள்கலர் குழந்தை,
என்று தினமும் இறைவனை வேண்டினன்,
சாந்த சீலன் என்பவன்; அந்தச்
சாந்த சீலனின் மாந்தளிர் மனைவி,
விரத சீலையும், வணங்கினள் இறைவனை.

தெய்வம் வேண்டினர், கோபுரக் கோவிலில்;
நெய்வைத்து விளக்கு வீட்டில், நிருவாண
மெய்வைத்து மொய்த்தனர் மேலும் கீழும்!

கணவன் உதவியால் கருவுற்றாள் மங்கை
முந்நூறு நாட்கள் முதிர்ந்த பின்னர்,
நித்திரை இரவினில், வித்துள்ள குழந்தையை
முத்துப் பத்தினி வருந்திப் பெற்றனள்.

விரத சீலைக்குப் பிறந்தஅக் குழந்தை,
வெண்குட்டத் தோடு விளங்கிற்று; அதனால்
வையாபுரிப் பிள்ளை போன்று, வடமொழியின்
கையாள் அநேகர், குட்டநோய்க் குழந்தைக்கு
வெண்ணிலா வண்ணன் என்றுபெயர் இடாது,
சசிவர்ணன் என்று சீதைமொழி சூட்டினர்;
மறைக்காடு என்பதை வேதாரண்யம் என்று,
ஆரியப் புத்தகம் அழைப்பது போல!

விரத சீலையின் வெள்ளைப் பிள்ளைக்குச்,
செந்தமிழ் வளர்த்த சந்தனக் கிழவர்,
தத்துவராயர் தீட்சை செய்தபின்,
நோய்நீங் கிற்றாம்! நிசமோ, என்னமோ?

குட்டம் நீங்கி விட்டது; விட்டதால்,
கொழுத்த நிழலில் பழுத்த மாங்கனி',
போன்று விளங்கினன் பிள்ளைசசி வர்ணன்.

வளைந்த இளம்பிறை வளர்வது போல,
வளர்ந்தான்; செந்தமிழ் வளர்த்தான்; வர்ணன்.

வர்ணன், பழுத்த வயதினன் ஆனான்.
அவ்வாறு அன்னவன் கிழவன் ஆனதால்,
ஆண்பால் அர்விகுதி அவன்பெயர் மீது,
வந்து ஒட்டிற்று, வர்ணர் ஆனார்.

அகத்தியன் செய்த அகத்தியம் போலும்,
கல்லாடன் செய்த கல்லாடம் போலும்,
சசிவர்ணர், சசிவர்ண போதம் என்னும்,

தத்துவ நூலைத் தமிழர்க்குத் தந்தார்.
அப்படிப் பட்டத் தத்துவப் பெரியார்,
இறவாத பெரும் புகழ்ப் பெற்றவர்,
பிறந்தவூர் விருத்தா சலம்ஆ கும்மே!

இதழ் : 'இலக்கியம்' - 1.9.1958

## கண் சண்டைக்காரி

சந்தைக்குச் சென்றிருந்த குப்பன்; அந்தி
சாய்கின்ற நேரத்தில் திரும்பும் போது,
பந்தெடுத்து விளையாடும் மனைவி மீது,
பழமெடுத்து அடிக்கின்ற இரவு நேரம்
வந்தாலன் றோஇனிக்கும் இவமை! காலை
வந்தென்ன போயென்ன? என்ற காதற்
சிந்தொன்று காதில்விழச் சிலிர்த்தான், சிந்து,
தெரிவிக்கும் வார்த்தையினால் வெப்ப மானான்.

சோலைதனில் குளிருண்டு; குப்பன் கால்கள்
தொடுகின்ற தரைஎங்கும் ஈர முண்டு;
நீலநிற மேகங்கள் நெடுவா னத்தில்
நீந்திவரும்-கார்காலம் அப்போ துண்டு;
மாலையுண்டு; தென்பொதிகை மலையை விட்டு
வருகின்ற தென்றலுண்டு எனினும்; அந்த
வாலிபனோ இவையாவும், தனக்குப் பாலை
வனமென்றே தான்நினைத்தான், விரகத் தாலே!

பேர்வாய்ந்த படைகொண்டு வடநாட் டாரைப்
பிணமாக்கிப் புகழ்தேக்கி வந்த சேரன்,
தேர்போல விரைந்திட்டான்; வந்தான் வீடு,
'செம்பவளம்!' என்றழைத்தான், மனைவி வந்தாள்.
'நீர்வேண்டு மா, என்றாள் நங்கை'. 'கண்ணே
நீயல்லவா வேண்டும்' என்று கூறிப்
பார்வையினால் காதல் மொழி பேசக், குப்பன்
பசிதன்னைத் தன் உதட்டால் தணித்து வைத்தாள்!

முதற்கட்டம் முற்றியது, அவர்கள் எச்சில்
முத்திரைக்குப் பின்னெதுவும் நடத்த வில்லை.
அதிகரித்த ஆசையொடு கணவன் நிற்க;
அம்மிதனில் மிளகாயை அரைத்தாள்.
செதுக்காத சிலையழகி, தொடர்ந்து வேலை
செய்தபடி, நாயகனை நிமிர்ந்து நோக்கி;
"எதற்காக இக்கல்லை, அம்மி என்று
இந்நாட்டு முன்னோர்கள் அழைத்தார்" -என்றாள்.

"அம்பெடுக்கும் தமிழ்நாட்டைத் தர்ப்பைப் புல்லால்
ஆட்டிவைத்துக் கொண்டுவரும் ஆரி யத்தைக்
கொம்போடு, கிளையோடு, தரைக்குள் ஓடிக்
கொண்டிருக்கும் வேரோடு, வீழ்த்து கின்ற
மும்மணியே! முழுமுத்தே! மிளகாய்ப் பூண்டு
முதலான பொருளையெலாம், குழவி கொண்டு
அம்முவதால் இக்கல்லை, அம்மி என்று
அந்நாளில் பெயரிட்டு அழைத்தார்," என்றான்.

செம்பவவம் இதைக்கேட்டு மகிழ்ச்சி யோடு
சிற்றின்ப உதடுகளைத் திறந்து - "அத்தான்!"
நம்முத்தம் போலினிக்கும் சொல்வி ளக்கம்
நற்றமிழின் வளர்ச்சிக்குத் தேவை - என்றாள்.
கொம்புக்கும் இதுபோன்று, தழுவிக் கொள்ள,
கொடிஇங்கே, இப்போது, தேவை - என்றான்.
அம்புநிகர் கண்சண்டைக் காரி -அந்த
ஆணழகன் அகத்திற்கு ஆடை யானாள்!

இதழ் : 'இலக்கியம்' - 1.3.1959

## ஐயா, தவயாவி புரி

கொக்கறுகோ கொக்கறுகோ என்று கோழி
கூவிற்று, நாலைந்து தடவை நங்கை
நக்கண்ணை முன்னெழுந்தாள். எழுந்த பின்னர்
நாயகனை எழுப்பி விட்டாள். எழுந்தான் சொக்கன்,
"ஒக்கூரான் எனைத்தேடி வருவான் வந்தால்,
உடனேநீ வயலுக்கு வரச்சொல்" என்று
சொக்கப்பன் வயல்நோக்கி நடக்க லானான்.
சூரியனும் வானத்தில் விழிக்க லானான்.

மாரியப்பன் தோள்மீது கலப்பை ஏந்தி
வரக்கண்ட சொக்கப்பன் "வாவா" என்றான்.
நீருறவு வயலுக்கும்; உருக்கி வைத்த
நெய்யுறவு, உணவுக்கும் வேண்டும். இந்த
ஏருறவும் எருதுறவும் இல்லை என்றால்,
எவ்வுறவும் உணவில்லா உறவே யாகும்.
மாரியப்பா கேளப்பா" என்றான். "நல்ல
மருந்துமொழி இதுவப்பா" என்றான் மாரி.

"நிலத்திலுள்ள மேல்மண்ணைக் கீழ்மண் ணோடு
நீண்டிருக்கும் கூர்முகத்தால் ஒன்று கூட்டிக்
கலப்புதனை உண்டாக்கும் காரணத்தால்,
கலப்பைஎன்று, பெயர்இந்தக் கலப்பை யாலே,
நிலத்தில்நாம் உண்டாக்கும் கலப்பை, மக்கள்
நெஞ்சத்தில் உண்டாக்கி விடுவோ மானால்,
கலப்புமணம் உருவாக வழியுண் டாகும்.
கலப்புமணத் தால் சாதிசெத்துப் போகும்.

"மாரியப்பா" என்றிட்டான். சொக்கன் பேச்சால்
மனங்குளிர்ந்த மாரியப்பன், அவனை நோக்கி,
"ஓரிரண்டு நாளாக எங்கள் வீட்டில்
ஒரே குழப்பம்; பிறந்துள்ள பைய னுக்குப்
பேரென்ன வைத்திடலாம் என்ற பேச்சுப்
பின்னலின்னும் முடியவில்லை. அவளும் நானும்,
மோரும்பா லும்போல வெவ்வே றாகி
முகம்திருப்பிக் கொண்டுள் ளோம், நேற்றும், இன்றும்;

"நன்னனென்று பெயரிடுநின் குழந்தைக்"கென்று,
நல்லப்பன் சொல்லுகிறான். "நம்பிள் ளைக்குத்
தென்னனென்று பெயரிட்டால் என்ன" என்று,
தேன்மனைவி தன்முடிவைத் தெரிவிக் கின்றாள்.
பொன்போன்ற புதல்வனுக்கு யானோ, வையா
புரிஎன்று பெயரிடவே விரும்பு கின்றேன்.
என்முடிவு பொன்முடி வா?" என்று கேட்டான்.
"இரு, முடிவு சொல்லுகின்றேன்" என்றான் சொக்கன்.

"அறத்தோடும் திறத்தோடும் ஆண்மை யோடும்,
அரசாண்டு வந்திட்ட வள்ளல் பேகன்,
உறங்காத புகழ்பெற்ற பரணர் போன்ற
உயர்ந்தோரால் பாராட்டப் பெற்ற வேந்தன்.
மறுமையிலே பயன் விளையும் என்றெண் ணாமல்,
மங்கையிடை போல்மெலிந்தும், நலிந்தும் வந்தோர்
வறுமை தனைப் போக்கிவந்தோன்; மெச்சும் பச்சை
மயிலுக்குப் போர்வைதந்தோன். பெருமை தந்தோன்.

இப்போது பழனிஎன்று நாம ழைக்கும்
இந்நகரின் பழையபெயர், பொதினி யாகும்.
எப்போதும் புகழ்மணக்கும் தமிழில் உள்ள,
இலக்கியத்தை நெஞ்சத்தில் நிறுத்தி வந்த
ஒப்பில்லா வையாவி வள்ளல் பேகன்,
ஓங்குமலை தூங்குமிந்த நகரை ஆண்டான்.
அப்போது, வையாவி வாழ்ந்த பேரூர்
ஆதலினால், வையாவி புரியா யிற்று.

பொய்யாத வையாவி புரியை, வையா
புரிஎன்று கூறுகின்றோம். இதனால் அந்த
மெய்யான வரலாறே விளங்க வில்லை.
வீட்டார்க்கு நீஇதனை விளக்கிக் கூறி,
வையாவி புரிஎன்றே பெயர்நீ வைப்பாய்.
வளைந்தபிறை போல்வளரும் பிள்ளைக்" கென்றான்.
"மெய்யான வரலாற்றை அறிந்தேன்! அப்பா,
மிக்கநன்றி சொக்கப்பா" என்றான் மாரி.



இதழ் : 'தமிழ்நாடு' - 4.11.1962

## வான்விளக்கே வா!

காலமெனும் முதற்பொருளின்
பிரிவே வெள்ளிக்

கனல்கக்கும் சித்திரையே!
வருக! உன்னால்

ஆலமரம் இலையபழகை
இனிமேல் காட்டும்!

அவ்வாறே மாமரமும்
அழகு காட்டும்!

சோலைதனில் கண்சிவந்த
குயில்கள் கூவும்!

சுனைத் தண்ணீர் குளிர்காய்ந்து
கொள்ளும்! துள்ளும்!

வாலிபமும் சூடேறும்!
தாலித் தேதி வரும்.

வாழ்க்கை விழாநடக்கும்
தமிழ கத்தில்

கடவுளுக்கு வடிவமுண்டா?
இல்லை. வீசும்

காற்றுக்கு வடிவமுண்டா?
என்றால் இல்லை!

அடையாளம் உனக்குண்டா?
அதுவு மில்லை!

ஆனாலும் நீயின்றேல்
நாங்க ளில்லை!

சுடுவதற்கு தீயிருக்க,
நிலத்தை நீயும்

சுடுவதற்கு வந்துள்ளாய்
இன்று! வாவா!

வடிவற்ற காலத்தின்
கூறே வாவா!

வாழ்வுதரும் புத்தாண்டே
வருக! வாழ்க!!



9 இதழ் : 'மாலைமுரசு' - 12.4.1964

# சமணன் சாதித்தான்

நாவீற்றி ருந்தமிழ்ப் புலவ ரோடு
நற்கவிஞன் திருத்தக்க தேவன் என்பான்,
பூவீற்றி ருப்பதுபோல் வீற்றி ருந்தான்.
பொருந்திவிளங் கீரனென்பான் அவனை நோக்கி;
"மாவீற்றி ருக்கின்ற தோப்பில்; வண்ண
வரிக்குயில்கள் வீற்றிருக்கும்; அறங்கொல் லாத
கோவீற்றி ருக்கின்ற நாட்டில், செங்கோல்
குனியா"தென் றான்தேவன், "ஆம்ஆம்!" என்றான்.

"ஆய்ந்துணர்வோர் நெஞ்சமெல்லாம் கல்வி யாலே
அன்றாடம் சிவக்கு"மென்றான் அவியன் என்பான்.
"மாந்தரெலாம் உணவினிலே இன்பம் காண்பர்;
மாகவிஞன், இன்பத்தில் உணவு காண்பான்;
தீந்தமிழ்போல் பிறமொழிகள் இனிப்ப தில்லை;
திருத்தங்கள் இல்லாத நாடே இல்லை;
ஏந்துபுகழ்ப் பாவலரே" என்றான் தேவன்.
இடையாற்றூர் மங்கலத்தான் "ஆம்ஆம்!" என்றான்.

"பதிபக்திப் பாட்டெழுதல் எளிது; காதற்
பாட்டெழுதிக் காட்டுவதே கடினம்" என்றே,
அதவத்தூர் புதுமதியன் கூற, ஆங்கே
அமர்ந்திருந்த திருத்தக்கன் அவனை நோக்கி;
"மதிமிக்கோன் சாதிப்பான் எதையும்; அன்னோன்
மாற்றாரின் புத்தகத்தாற் பிழைக்க மாட்டான்.
எதிர்நிற்பான்; வென்றாரை வெல்வான்" என்றான்.
"எழுதுவீரோ நீர்?" என்றான். "முடியும்" என்றான்.

முதலடியைத் தேனாக்கி, அடுத்த டுத்து
முளைக்கின்ற தொடரடியை அமுத் மாக்கி,
விதவிதமாய்ச் சந்தநய நட்புண் டாக்கி,
வியப்புமிகு உவமைகளால் புதுமை தேக்கிப்,
பதமுடைய பாவினமாம் விருத்த மாக்கிப்
பதின்மூன்றி லம்பகமாய் வகுத்துத்தூக்கி,
இதயமதை இறைவன்பால் பதிய வைத்தோன்
இன்பச்சிந் தாமணிநூல் இயற்ற லானான்.

நரிவிருத்தம் பாடியவன்; முற்றக் கற்ற
நற்கவிஞன்; தக்கதிருத் தக்க தேவன்,
வரிவிருத்தக் காப்பியத்தைத் தமிழ்ச்சங் கத்தில்
வைத்திட்டான், தைத்திங்கள் பிறந்த நாளில்.
ஒருதிருத்தம் காணுதற்கும் வழியே இல்லா
உயர்நூலை, மன்றத்தார் மெச்ச லானார்.
தரைதிருத்தி நாடாண்ட பாண்டி வேந்தன்,
சாகாத நூல்தந்த கவியை நோக்கி!

"கலைதேர்ந்த விலைமாதற்தொடுதோள் போன்று,
கற்பார்க்கெல் லாம்மிக்க எளிதாய்; அந்த
விலைமாதர் உள்ளம்போல், திட்ப நுட்ப
விளக்கமெல்லாம் அறிதற்கே அரிதாய்; நல்ல
நிலைமாதர் கற்பெனவே சிறந்த தோர்நூல்
நீதந்தாய்; சுவைசிந்தா மணியைத் தந்தாய்,
தலை,கால்,கை இவற்றையெல்லாம் காத்தோர்செத்தார்;
தமிழ்காத்தோர் வரலாற்றில் செத்த தில்லை!

"வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்ப தில்லை.
வெறும்பாட்டைத் தமிழ்ச்சங்கம் சேர்ப்ப தில்லை.
மாற்றறியாச் செம்பொன்போற் சிறந்த சிந்தா
மணிதமிழுக்கணி" என்றான். விரிந்த வைகை
ஆற்றருகே, தமிழவையில் வீற்றி ருந்தோர்,
அனைவருமே அவன்பேச்சை ஆமோ தித்தார்!
நாற்றிசையும் புகழ்பொங்க வாழ்ந்த வேந்தன்
நல்லகுறுந் தொகைப்புலவர் தம்மை நோக்கி;

அப்பத்தைத் சுடும்போது, பொத்தல் வந்தே
அதன்நடுவில் தானாக அமைதல் போலே,
ஒப்பற்ற காவியத்தில், எங்கி ருந்தோ
ஓடிவந்து கருத்துக்கள் குதிப்ப தில்லை;
ஒப்பிட்டுச் சொல்லுதற்குத் திறமை வேண்டும்;
உழைத்தார்க்கே அத்திறமை வந்து வாய்க்கும்.
உப்பற்ற உணவுக்கும்; தாய்ப்பால் போன்ற
உவமையில்லாப் பாடலுக்கும் பெருமை இல்லை.

திருத்தாமல், திருந்தாமல் மாற்ற மில்லை;
திருத்துங்கள்; தீட்டுங்கள்; விளங்காப் பாடல்,
செரிக்காத சோறாகும்; மனித னுக்கே
தேவையற்ற சாதிமதம் போன்ற தாகும்;
உருப்போடும் பண்டிதரால், மறும லர்ச்சி
ஒருநாளும் உண்டாகப் போவ தில்லை!
கருத்தூன்றி ஆராய்ந்து முயற்சி செய்து
கலைத்தொண்டில் தோற்றாலும் பெருமை யுண்டு;

கத்துகடல் நீராலும், கயவ ராலும்,
கனவாலும், கண்கலந்த தூக்கத் தாலும்,
எத்தனையோ நூற்களைநாம் இழந்து விட்டோம்,
இல்லையெனில், ஒருநூலா, இரண்டு நூலா,
பிந்திரண்டா யிரங்கோடி நூற்க ளன்றோ!
பைந்தமிழர் கைவசத்தில் இருந்தி ருக்கும்!
வித்திடுவீர்! என்றுரைத்தான்; புலவ ரெல்லாம்
விழித்தெழுந்து செழிக்கத் தமிழ் வளர்க்க லானார்!

இதழ் : 'தமிழ்நாடு' - 14.1.1965

## பாவேந்தர் விழா!

தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தினர், பாவேந்தர் பாரதிதாசனாருக்கு விழா நடத்தினர்.

தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த விழாவாகும் இது; விழாத் தொடக்கத்தில் சிறப்புக் கவியரங்கம் நடைபெற்றது. ‘வாய்மையே வெல்லும்’ என்ற பரிசுக் கவிரங்கத்தில், பொ. சண்முகம் வெற்றி பெற்றார்.

பாரதியாருக்கும், பாரதிதாசனாருக்கும் சென்னை கடற்கரையிலே சிலை எழுப்பப்படும் என்றும்–பாவேந்தரின் வீடு ஏலம் போக இருப்பதைத் தடுத்திருப்பதாகவும் அண்ணா அறிவித்தார் இந்த விழாவில்.

பேராசிரியர் இலக்குவனார் தொடக்கவுரையாற்ற, பரலி. சு. நெல்லையப்பருக்கு டாக்டர் டி.சி. சிங்காரவேலரால் பொன்னாடை போத்தப்பட, கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.யால் நன்றியுரை ஆற்றப்பட்ட இந்த விழாவில் அண்ணா அவர்களுக்கு, அவர் உயர அலங்காரக் கண்ணாடி ஒன்றை அளித்தார் உவமைக் கவிஞர் சுரதா.

பிறவிக் கவிஞர் சுரதா எழுதிப் பாடல் ஒன்று அதில் பொறிக்கப்பட்டிருந்தது; பாடல் வருமாறு–

வித்தையில், நாட்டை ஆளும்
விதத்தினில், சிறப்புற றோங்கித்
தித்தனாம் சோழ மன்னன்
திக்கெலாம் பெருமை பெற்றான்.
அத்தகு பெருமை பெற்ற
அறிஞரே! அகிலம் போற்றும்
முத்தமிழ் நெஞ்சம் கொண்ட
முதல்வரே! வருக வாழ்க!

ஆத்திரம் காட்டு வார்முன்
அடக்கத்தைக் காட்டிச் சாதி
சாத்திரம் காட்டு வார்முன்
தமிழ்மறை நூலைக் காட்டி,
நாத்திறன் காட்டி, நாடு
நலம்பெற வழிகள் காட்டி
மூத்தவர் பலரை வென்ற
முதல்வரே வருக வாழ்க!



இதழ் : 'சமநீதி' - 14.7.1967

## தரைமீன்

புதியபுனல் பொங்கிவரக் கண்டு, மக்கள்
பூரிக்க, கோவேந்தன் கரிகாற் சோழன்
நதிநதியை வரவேற்று காவிரிக்கு வெள்ளந் துள்ள
நடந்துவரும் காவிரிக்கு விழாக்கொண் டாட,
மதிமதுரப் புலவரெலாம் புகழ்ந்துபாட,
வரலாற்றுப் பேரழகி ஆதி மந்தி,
எதுகையென அடுத்துவர ஆட்ட னத்தி
என்பானோ, மோனையைப்போல் முன்னே வந்தான்!

பாடுதுறை அறிந்தவனே! காப்பி யத்தின்
பலதுறையும் அறிந்தவனே! அனிச்சப் பூவே
ஊடுவது காமத்திற் கின்பம் என்னும்
உறவுதுறை, இரவுதுறை அறிந்த மாதே.
ஆடுதுறை அதுதானோ?" என்று கேட்டான்.
ஆணிப்பொன் மேனிமங்கை "ஆம்ஆம்" என்றாள்.
கூடுதுறை அறிந்தவனும், கோதை மாதும்
குளிர்ந்தகழார் துறைநோக்கி நடக்க லானார்.

"வானோடு விளையாடும் நிலவே! நீரில்
வளர்கின்ற தாமரையே! கோவை நூலின்
நானூறு துறைகளைநீ அறிந்தி ருந்தும்
நதித்துறையைக் காட்டுகின்றாய் வெள்ளிப் புள்ளி
மானோடு பார்வைப்போர் புரியும் பெண்ணே!
மறந்தனையோ சுகத்துறையைக் காட்ட" என்றான்
தேனோடு வாய்திறந்த புதுப்பூப் போன்றாள்
"செங்கதிரோ வானத்தை மறக்கும்?" என்றாள்.

வரிப்புலியின் வாய்பிளந்த வீர வேந்தன்
மாலையிட்ட மங்கையிடம் பேசிக் கொண்டே
நரைத்துநுரை முட்டையிட்டுக் கொண்டி ருந்த
நதிநீரின் நீட்டத்தில் நீந்த லானான்.
திரைத்திரளால் நெடுங்கரையைக் கரைப்ப தற்குத்
திட்டமிட்ட வெள்ளத்தில், துள்ளித் துள்ளி
சிரித்தபடி, சிலிர்த்தபடி, கண்ணுங் கண்ணும்
சிவந்தபடி அவளும்நீ ராட லானாள்.

தலைநிமிர்ந்த புகழ்பெற்ற சோழ நாட்டின்
தாய்ப்பாலாம் காவிரியின் ஈர நீரில்
மலருதிர்ந்து, போர்வையைப்போல் மிதக்க, மேற்கு
மலைச்சாரல் சிந்தியசந் தனமும்; தேக்கும்;
அலையுயர்ந்த வெள்ளத்தில் மிதக்க, வெள்ளை
அன்னம்போல் ஓடங்கள் மிதக்க, ஓர்பால்,
சிலர்மிதந்து நீராட, நதியில் ஈரச்
சிலையாகிக் கொண்டிருந்தாள் ஆதி மந்தி.

சூரியனை நோக்குகின்ற நெருஞ்சிப் பூப்போல்
துணைமனைவி, மாவீரன் முகத்தை நோக்கி
"நீரைவிட நுட்பமெது? சொல்வீர்" என்றாள்.
"நெய்" யென்றான் "நெய்யை விடப்புகையே" என்றாள்.
"தாரணியில் அனிச்சமலர் உனக்கு நுட்பம்,
தமிழ்நிலவே! உன்னுடலே எனக்கு நுட்பம்
பேரழகே எனைமயக்கும் மதுவாம்!" என்றான்.
பிடியிடையாள், 'வாய்முல்லை' வழங்கலானாள்.

தண்ணீரின் ஏப்பந்தான் அலைகள் என்றான்.
தமிழ்நூற்கள் வாழ்நாளை வளர்க்கும் என்றாள்,
விண்மீது நீந்துகின்ற நிலவின் மீது,
வீடுகட்டும் காலமொன்று வநதே தீரும்
கண்ணாலே கண்தேடும் மாதே!" என்றான்
கட்டழகி மொட்டு, மொட்டாய்ச் சிரித்தாள். யாவும்
பெண்ணாலே ஆகு மென்றான். அதனைக்கேட்டுப்
பிழந்ததொரு புடவையைப்போல் குனிந்து கொண்டாள்.

பெரியபுகழ் பெற்றவனை மணந்த மாது
பின்புறத்தில் தொங்குகின்ற மேகம் என்னும்
கரியகுழல் தனைக்கரத்தால் பிழிந்து கொண்டே
கரையேறித் தேர்நின்ற இடத்தில் நின்றாள்.
தரைதடவிக் கரைதடவும் பொன்னி யாற்றில்,
தமிழ்வேந்தன் நுரைதடவி நீந்தும் போதில்,
அரியரியாய் வரிவரியாய் வடிவங் காட்டும்
அலைகளினால் ஆட்டனத்தி இழுக்கப் பட்டான்.

பந்தெனவே காவிரியில் மிதந்தான். நீரில்
பாராங்கல் போலமிழ்ந்தான்; சேனை யானைத்
தந்தமென மேல்நோக்கி எழுந்தான்; அத்தி
தத்தளித்தான். தமிழரசி தரைமீ னானாள்.
கொந்தளித்த வெள்ளத்தில் மறைந்து போன
கோமானை விழிவிளக்கால் தேட லானாள்.
செந்தணலில் தளிரானாள்; எரிந்து போன
சிறுகயிறு போலானாள்; ஓட லானாள்.

ஓடிக்கொண் டேயிருந்த நதியை நோக்கி
ஓடிக்கொண் டேயிருந்தாள்; வாடிக் கொண்டே!
வாடிக்கொண் டேயிருந்தாள்; சூறைக் காற்றின்
வசப்பட்ட கப்பலைப்போல் ஆடிக் கொண்டே!
ஆடிக்கொண் டேயிருந்தாள். அழகி, ஆற்றின்
அடிநீரில் மறைந்தவனைத் தேடிக்கொண்டே!
தேடிகொண்டேயிருந்தாள் ஒருநா ளேனும்
சிந்தாத கண்ணீரைச் சிந்திக் கொண்டே!

இதழ் : 'உலகம்' - 1.3.1967

# மூர்

**மூலக் கதை : கருணா மணாளன்**

**கவிதை ஆக்கம் : உவமைக் கவிஞர் சுரதா**

அடியாரும்; தொண்டரடிப் பொடியாழ் வாரும்;
அருள்தாயு மானாரும்; சேக்கி ழாரும்;
கெடியாரம் கட்டிக்கொண் டிருந்த தாகக்
கேள்விப்பட் டிருக்கோமா? இல்லை! இன்றோ,
உடையாரும்; இல்லாரும்; உந்து வண்டி
ஓட்டுநரும்; மருத்துவரும்; இரட்டைப் பின்னல்
சடையாரும்; மாணவரும் கெடியா ரத்தைத்
தம்கரத்தில் கட்டாமல் செல்வ தில்லை!

கள்ளியிலும் முள்ளுண்டு! விலைக்கு வாங்கிக்
கட்டுகின்ற கெடியாரம் தனிலும் உண்டு!
கள்ளிமுள்வா காலத்தை நமக்குக் காட்டும்?
கடியாரத் தின்முள்தான் காலங் காட்டும்!
உள்ளபடி காலத்தைக் காட்டும் முட்கள்
ஓடிந்தாலும், கெடியாரம் பழுதா னாலும்,
தள்ளுபடி செய்வோமா? செய்ய மாட்டோம்.
சரிப்படுத்தி மறுபடியும் கட்டிக் கொள்வோம்.

பத்தாண்டு கட்குமுன்னர் ரெட்ஹில்ஸ் என்னும்
பழம்பதிக்கு வந்தவராம் அப்துல் ஜப்பார்,
எத்தாக வாழ்ந்திடவோ, சிலரைப் போலே
ஏமாற்றிப் பிழைத்திடவோ அறிய மாட்டார்.
உத்யோக உலகத்தில், வாட்சு ரிப்பேர்
ஒன்றைத்தான் அவர்நம்பிக் கொண்டி ருந்தார்.
அத்தாட்சிப் பத்திரமே தேவை இல்லை,
அவர்மிகவும் நல்லவரே என்ப தற்கு!

அன்றாடம் அவர்செய்யும் தொழிலின் மூலம்,
ஐந்துபத்தோ தான்கிடைக்கும். அதனைக் கொண்டு,
நன்றாக வாழ்ந்திடவா முடியும்? வீட்டில்
நாலைந்து பேரிருந்தால்! ஒவ்வோர் நாளும்
குன்றாத வறுமையிலே வாடி வந்த
குடும்பந்தான் அவர்குடும்பம்! வெம்பும் வாழ்க்கை
என்றாலும், வறுமையிலே செம்மை யாக
இருப்பதுவே சிறந்தசெல்வம் என்றி ருந்தார்.

விண்வெளியில் நிலாவெளிச்சம்; அப்துல் ஜப்பார்
வீட்டினிலே புகைவிளக்கின் வெளிச்சம்; அந்த
மண்ணெண்ணெய் வெளிச்சத்தில், திருக்குர் ஆனை
வாசித்துக் கொண்டிருந்தார் ஜப்பார். நீலக்
கண்கதவைச் சாத்தாமல், வீட்டு வாசல்
கதவுதனை அவர்மனைவி சாத்தக் கண்டு-
"எண்ணெயில்லை யாவிளக்கில்?" என்று கேட்டார்.
"எல்லாமே வீட்டிலில்லை" என்று சொன்னாள்.

"இல்லானைக் கைப்பிடித்த குடும்பம் தன்னில்
ஏதிருக்கும்? எதிர்பார்த்தால் எதுகி டைக்கும்?
இல்லான்நான்! இல்லாள்நீ!" என்றார். "ஆமாம்!
இதற்கொன்றும் குறைச்சலில்லை! வாயில் போட்டு
மெல்வதற்கும் பானையிலே அரிசி இல்லை!
விறகில்லை! நம்குடும்ப நிலையைப் பற்றிச்
சொல்வதற்கு வாயெடுத்தால் போதும், 'ஏண்டி
தொந்தரவு செய்கின்றாய்!' என்கின் றீர்கள்.

அதுவேண்டும், இதுவேண்டும் என்கின் றேனா?
அணிமணிகள் வேண்டுமென்று கேட்கின் றேனா?
இதுவேண்டும் அதுவேண்டும் என்று கேட்க,
எனக்கென்ன பைத்தியமா? இந்த வீட்டில்,
உதைவேண்டும் எனில்கிடைக்கும்! சுள்ளிக் கட்டை
ஒடிப்பதுபோல் ஒடிக்காதீர் என்னை! சும்மா
கதைபேசிப் பயனில்லை! எதுசெய் தேனும்
காசுபணம் தேடுங்கள்" என்றாள் மங்கை.

தீக்குச்சி நிறங்கொண்ட மனைவி, ஆங்கே
தெரிவித்த வார்த்தைகளைக் கேட்ட ஜப்பார்,
ஊக்கந்தான் உயர்வளிக்கும் என்கின் றார்கள்
ஓயாமல் உழைக்கின்றேன். உழைத்த போதும்
ஆக்கத்தைக் காணோமே! வறுமை என்னும்
அதிகாரம் என்வாழ்வில் இருக்கு மட்டும்,
ஏக்கந்தான் முடிவினிலே மிச்ச மாகும்.
இதுநீங்க என்னவழி எனயோ சித்தார்.

நல்லகடி காரத்தில் அமைந் திருக்கும்
நயமான கருவிகளைக் கவர்வ தென்றும்;
தள்ளுபடி யானவற்றை அதனுள் வைத்துத்
தந்திரமாய்த் தந்துவிட வேண்டு மென்றும்;
வெள்ளைமனம் கொண்டிருந்த அப்துல் ஜப்பார்,
வேறுமனம் கொண்டிதுபோல் தீர்மானித்தார்.
நல்லமனம் மாறுபட்ட கார ணத்தால்
நாள்தோறும் தீயசெயல் செய்து வந்தார்.

சூழ்நிலையும், அவர்மனைவி சொன்ன சொல்லும்,
தூண்டியதால் தவறுசெய்யத் துணிய லானார்.
ஏழ்மைநிலை மாறிடவும், வறுமைத் தீயில்
எரியாமல் இருந்திடவும் வேண்டி, ஆங்கே
வாழ்வினிலோர் தவறுசெய்தார்; பிறரை ஆங்கே
வஞ்சித்தார்; இதயத்தில் இருளைச் சேர்த்தார்.
தாழ்வுவரும் என்றறிந்தும் செய்யும் தீமை
தவறென்று நன்குணர்ந்தும் இதனைச் செய்தார்.

சிற்றோடை தனிலோர்நாள் குளித்த தாலே
சிறுபையன் சுரங்கண்டு படுத்து விட்டான்.
நற்றாயும் ஐப்பாரும் உடனே ஆங்கோர்
நர்சரிக்கு வண்டியிலே கொண்டு சென்றார்.
"சற்றிங்கே தாமதித்து வந்தி ருந்தால்
சங்கடந்தான் நேர்ந்திருக்கும்" என்றார் டாக்டர்,
மற்றேதும் பேசவில்லை. சிறுவ னுக்கு
மருந்துதந்து கட்டிலின்மேல் படுக்க வைத்தார்.

பிறைக்கீற்று நெற்றிகொண்ட நர்சை நோக்கிப்
"பிறர்க்குதவும் பணிப்பெண்ணே! இதனைக்கேட்பாய்
முறையாக இம்மருந்தை இவனுக் கிங்கே
மூன்றுமணிக் கொருதரமும்; கலவை நீரை,
மறவாமல் நான்குமணி ஆன பின்பும்,
மாத்திரையை அரைமணிக்கோர் தரமும் தந்து,
குறையேதும் வாராமல் நன்கு பார்த்துக்
கொள்" வென்று சீட்டெழுதி நீட்ட லானார்.

"என்னிடத்தில் கெடியாரம் இல்லை டாக்டர்"
என்றந்த நர்சுரைத்த உடனே டாக்டர்,
தன்னிடத்தில் இருந்திட்ட கெடியா ரத்தைத்
தாம்கழற்றி நர்சிடத்தில் கொடுக்க லானார்.

சோகமெலாம் குடிகொண்ட அப்துல் ஜப்பார்
சோர்ந்தபடி நின்றிருந்தார் நர்சிங் ஹோமில்,
சேகரெனும் பெயர்கொண்ட டாக்டர், அந்தச்
சிறுவனுக்கு மருந்துதர மறுநாள் வந்தார்.
வேகவைத்த நெல்லைப்போல் அந்தப் பையன்
மேனியெங்கும் சுடுவதனை அறிந்த பின்னர்-
நாகரிக உடையுடுத்த நர்சை நோக்கி,
"நன்றாக நீஇவனைக் கவனித் தாயா?

நானுனக்குச் சொன்னபடி தானே நேற்று
நள்ளிரவில் மருந்துதந்தாய்?" என்று கேட்டார்.
"வானிலையை அனுசரித்தும், உங்கள் வாட்சில்
மணிபார்த்தும் தான்கொடுத்தேன்" என்றாள். "பின்னர்
ஏனின்னும் சுரம்த ணியவில்லை? வாட்சில்
ஏதேனும் கோளாறோ? கொண்டா!" என்றார்.
மானனையாள் அதைக் கொடுத்தாள், டாக்டர் அந்த
மணிப்பொறியை தம்வாட்சோ டொத்துப் பார்த்தார்.

புதுவாட்சு சரியாக ஓட, அந்தப்
போலி வாட்சு நத்தையைப்போல் நகரக் கண்டு,
"சதமென்று நாம்நம்பும் இதவோ, நேரம்
தவறாகக் காட்டுவதைப் பாராய்! அந்தோ
இதைநம்பி நீ மருந்து கொடுத்த தால்தான்
இவனுயிர்க்கே ஆபத்தாய் விட்ட"தென்று
பதைபதைத்தார். அப்போதக் கடிகா ரத்தைப்
பார்த்துள்ளம் துடிதுடித்தார் அப்துல் ஜப்பார்.

"என்தீமை பிறரைப்போய்ச் சுடாது டாக்டர்!
என்னைத்தான் சுடு"மென்று காலில் வீழ்ந்தான்.
"என்காலில் ஏனப்பா வீழ்கின் றாய்நீ?
எனக்கென்ன தீமைசெய்தாய்?" என்று கேட்டார்.
"முன்போர்நாள் இதைநான்தான் ரிப்போர் செய்தேன்
மோசஞ்செய் தேன்டாக்டர்! மோசஞ் செய்தேன்
பொன்போன்ற என்உளத்தை நாகப் பாம்பின்
புற்றாக மாற்றிவிட்டேன் டாக்டர்!" என்றான்.

"தவறுசெய்தே இருந்தாலும், நீயே உன்னைத்
தண்டித்துக் கொண்டுவிட்டாய்! எனவே, செய்த
தவறுகளை எண்ணிஎண்ணி ஏங்க வேண்டாம்.
சந்தர்ப்பம் வளைத்திருக்கும் வளைந்தி ருப்பாய்!
கவலைவிடு! நானென்னால் முடிந்த மட்டும்
காப்பாற்ற முயல்கின்றேன். பயப்படாதே!
அவரவரின் உயிருஞ்சல் கயிற்றை நாமா
ஆட்டுகின்றோம்! இல்லையப்பா இல்லை" என்றார்.

நிலைக்குவந்து சேர்ந்தொரு தேரைப் போலே
நெருக்கடிகள் தீர்ந்துமகன் வந்து சேர்ந்தான்.
"தலைக்குவந்த வினைநல்ல காலத் தாலே
தலைப்பாகை யொடுபோயிற்" றென்றாள்! "இந்த
நிலைக்கெல்லாம் காரணம்யார்? எல்லாம் அன்று
நீவிதைத்த விதைதானே!" என்றான் ஜப்பார்.
"வலைக்குள்பட்டு மீனாகத் துடித்த என்னை
வையாதீர்! என்பிழையைப் பொறுப்பீர்" என்றாள்.

இதழ் : 'குமுதம்' - 10.9.1970

## குவளையில் கடல்

ஆறேழு நாற்பத்தி ரண்டும் ஐந்தும்
ஆனவரே! அறிவியக்கச் சுடரே! இன்பச்
சாறூறும் தமிழ்பேசி, நாற்பத் தெட்டின்
தலைவாசல் மிதிப்பவரே! நாங்கள் எல்லாம்,
நூறாயி ரம்கொட்டிப் பூக்கள் என்றால்,
நூதனத்தா மரைப்பூவே நீங்கள்! உள்ளம்
வேறாகி விலகிநிற்போர் தமையும், தங்கள்
விவேகத்தால் நட்பாக்கும் கலைஞர் நீங்கள்!

வளைவதற்கே பிறந்ததுதான் நாணல்; வந்து
மறைப்பதற்கே பிறந்ததுதான் இருட்டு; மண்ணில்
நெளிவதற்கே பிறந்ததுதான் நாகப் பாம்பு;
நிற்பதற்கே பிறந்தவைதாம் மரங்கள்; நன்கு
விளைவதற்கே பிறந்தவைதாம் கரும்பும் நெல்லும்;
வீழ்வதற்கே பிறந்ததுதான் மழைநீர்; தீமை
களைவதற்கே பிறந்ததுதான் குறட்பா; கீர்த்தி
காண்பதற்குப் பிறந்தவரே நீங்கள் ஆவீர்!

வெட்டாத பள்ளத்தில் படுத்துக் கொண்டே
விம்முகின்ற கருங்கடல்தான் ஆழ மாகும்.
கொட்டாவி விடுகின்ற புதிய பூவின்
குழிக்குள்ளே தூங்கும்தேன் சிறந்த தாகும்.
பட்டாடை, ஆடைகளில் சிறந்த தாகும்,
பாவுக்குள் வெண்பாவே சிறந்த தாகும்,
விட்டேனா பாரென்றே எதிர்த்தோர் தம்மை
வெற்றிகண்ட உம்திறனே சிறந்த தாகும்.

பனித்துளிகள் பனைமரத்தின் உருவம் தன்னைப்
பளிச்சென்று கவர்ந்திழுத்துக் காட்டல் போலும்;
சினைத்துளிகள் ஓருயிரின் வடிவம் தன்னைத்
தெளிவாக அடக்குகின்ற தன்மை போலும்;
தனித்திறமை எனும்குவளைக் குள்ளே, கீர்த்திச்
சமுத்திரத்தைக் காட்டுகின்றீர்! உம்மை வெல்ல
நினைத்தவர்கள் யாருமிங்கே வென்ற தில்லை!
நெருப்புக்குத் தண்ணீரா சாம்ப லாகும்!

ஒளியென்றால், வாழ்ந்துவரும் காலம் தன்னில்
உண்டாகும் செல்வாக்கை குறிக்கும். மேலும்,
தெளிவாகச் சொல்வதெனில், புகழ்மட் டுந்தான்
சிரஞ்சீவி யாயிருக்கும்! சிறிது காலம்.
ஒளியாக இருந்தாரும் உண்டு! வாழ்வில்
ஓங்குபுகழ் பெற்றாரும் இங்கே உண்டு!
வளர்ந்தோங்கும் புகழ்பெற்ற உம்மைப் போலே
மற்றவர்கள் புகழ்பெறுதல் அரிதே யாகும்!

பக்கபலம் இருந்தால்தான் ஆட்சி தன்னைப்
பக்குவமாய் நடத்துதற்கு முடியும்! உங்கள்
பக்கபல மாயிருப்போம்! என்றும் உங்கள்
பார்வையிலே குடியிருப்போம்! சுவைத்துப் பார்க்க
முக்கனிகள் எப்போதும் நமக்கு வேண்டும்.
முக்கனிநீர்! நீரென்றும் எமக்கு வேண்டும்!
தக்கவர்கள் நீடூழி வாழ வேண்டும்!
தக்கவர்நீர்! நீடூழி வாழ்க! வாழ்க!!

இதழ் : 'தென்னகம்' - 3.6.1971

“கதை கட்டுரை போன்றவற்றைப் போல் கவிதைகளையும் மக்கள் விரும்பி வாசிக்க வேண்டுமானால், கவிதையின் உட்பொருள் எளிமையாகவும், சாமான்ய மக்களால் விரும்பி ரசிக்கக் கூடியவையாகவும் அமைய வேண்டும்!'' என்ற கவிஞர் சுரதா, தானே அந்த ‘எளிமை கவிதை’ முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

வாரா வாரம் ரசிக்கும் ‘சினிமாச் செய்திகளை’ எளிமையாகவும் சுவையாகவும் கவிதையாக்கித் தருகிறார். இதோ அவருடைய முதல் கவிதை ‘லட்சுமி’கரமாக அமைந்திருக்கிறது. நடிகை லட்சுமியின் குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா நிகழ்ந்த செய்தியைக் கவிதையாக்கியிருக்கிறார்.

ஆசிரியர் : ஆனந்தவிகடன்

## நட்சத்திரக் கவிதை

பிறந்த குழந்தைக்குப் பெயர்சூட்டும் விழாவே,
அதற்குநாம் நடத்தும் ஆரம்பத் திருவிழா.
அவ்விழா பெயர்ச்சொல் அகராதி போன்றது!

திரைப்பட உலகில் சிறந்து விளங்கும்
நட்சத்திர மாகிய நடிகை லட்சுமியின்
பெண்குழந் தைக்குப் பெயர்சூட்டும் நல்விழா.
நடிகையின் கணவர் இல்லத்தில் நடந்தது.
விருந்தொடுபிறந்து பெயர்சூட்டு விழாவில்,
மின்னும் குழந்தைக்குச் ‘சாந்த மீனா’
என்னும் பெயரிட் டின்புற் றார்களாம்!

அன்னையின் அழகை அள்ளிக் கொண்டு
வெளிவந் திருக்கும் விளம்பரக் குழந்தையோ
நடிகையின் குழந்தை! அதற்குநாம் நடிக்கக்
கற்றுக் கொடுக்கவா வேண்டும்? காற்றுக்கு
வீசவும் செந்நெல் விதைக்கு வளரவும்;
வான வில்லுக்கு வளையவும்; இங்கே
யாரும் கற்றுக் கொடுப்ப தில்லையே!

இதழ் : ‘ஆனந்தவிகடன்’ - 1.8.1971

எத்தனையோ படங்களில் காதல், திருமணக் காட்சிகளில் பயம் இல்லாமல் நடித்தவர் சரோஜா தேவி. ஆனால், அவருடைய திருமண நாளில் தாலி கட்டும் நேரத்தில் நடுங்கி விட்டாராம். வியர்வை கொட்டியதாம். இந்தத் தகவலை சரோஜா தேவியே கூறினார்.

## இது சுரதாவின் கவிதை

தடாகத்திற்கு அழகு தருவது தாமரை!
தையலுக்கு அழகு தருவது நாணம்!
நம்நாட்டில் வளரும் நாணலும் நாணும்!
நங்கையும் பருவம் வந்தபின் நாணுவாள்!
சௌந்தர்ய நடிகை சரோஜா தேவி.
காதல் திருமணக் காட்சிபல வற்றில்
நடிக்கையில் கூட நாணப்பட வில்லையாம்!
ஆனால் அந்த அழகு நடிகையோ,
தரணி அறியத் தமக்குத் திருமணம்
நடைபெற்ற போது நாணிவிட் டாராம்!
நாலும் தெரிந்த நடிகையின் கழுத்திலே
கணவன் தாலியைக் கட்டும் வேளையில்,
அச்சத்தால் உள்ளம் அதிர்ந்து விட்டதாம்!
அழகு முகமும், அம்புலி நெற்றியும்
வெயில்பட்ட மேனிபோல் வியர்த்ததாம்! பலநாள்
எங்கோ பதுங்கி இருந்த நாணம்
சரோஜா தேவியைத் தலைகுனிய வைத்ததாம்!
ஊரும் உலகமும் உத்தமிப் பெண்களும்
எதிர்பார்க்கும் நாணம் எனக்கும் உண்டென்று
தாலி கட்டும் தருணத்தில் ஆங்கே
நிலாமுக நடிகை நிரூபித் தாரே!

இதழ் : 'ஆனந்தவிகடன்' - 7.8.1971

ராஜஸ்ரீ மணம் இல்லாத ஒருவகை பவுடர் வாங்குகிறார். அதை கை மணிக்கட்டில் முதலில் தேய்த்துப் பார்க்கிறார். பின்பு முகத்தைக் கழுவி விட்டு அந்தப் பவுடரை அரைமணி நேரம் தடவிக் கொண்டு தான் வெளியே கிளம்புகிறார்.

## இது சுரதாவின் நட்சத்திரக் கவிதை

பூச்சூடிக் கொள்வதும் பொட்டிட்டுக் கொள்வதும்
மான்பார்க்கும் விழிகளில் மையிட்டுக் கொள்வதும்
தையலுக் குரிய தலையலங் காரம்!

கைவண்ண மெல்லாம் கலையலங் காரம்!
கற்பனை யெல்லாம் கவியலங் காரம்!

முற்றிய மஞ்சளை முகத்தில் பூசி
அழகு பார்த்ததோ அந்தக் காலம்!
நறுமணம் வீசும் நல்ல பவுடரை
எடுத்துப் பூசுதல் இந்தக் காலம்!

நாக ரீக நடிகை ராஜஸ்ரீ
பூப்போன்ற முகத்தில் பூசிக் கொள்ள
வாங்கும் பவுடரோ வாசமில் லாதது.
பூசும் முறையோ புதுமை யானது.

செவ்வாய் திறந்து சிரிக்கும் நடிகை
எவ்வாறு பூசிக் கொள்கிறார் என்றால்
மணமற்ற பவுடரை மணிக்கட்டில் முதலில்
தெலுங்கு நடிகை தேய்த்துப் பார்க்கிறார்.
சிறிது நேரம் தேய்த்துப் பார்த்தபின்,
சீர்கொண்ட முகத்தை நீர்கொண்டு கழுவி,
அந்தப் பவுடரை அரைமணி நேரம்
முத்திரை படாத முகத்தில் தேய்த்து
மின்னல் நடிகை மெருகேற்றிக் கொள்கிறார்!

போலிப் பொருள்களை மூலப் பொருள்களாய்க்
கருதக் கூடிய காலமிது வாதலால்,
ஆசைவெறி கொண்ட அலங்கார உலகம்
உருவத்தை ஒதுக்கி நிழலையே நம்பும்!
மணந்தரக் கூடிய மலர்கள் இருந்தும்,
காகிதப் பூவுக்கே கௌரவம் கொடுக்கும்!

வெறியும் மயக்கமும் விலகிடும் போது
நல்லது கெட்டது நன்றாகப் புரியும்.
இப்போது மதிப்பதை அப்போது தப்பென்று
உணரும் காலம் ஒருநாள் யார்க்கும்
வரலாம். இவர்க்கும் வரலாம் அல்லவா!

இதழ் : ‘ஆனந்தவிகடன்’ - 14.8.1971

“தமிழ்ப்பட உலகுக்கு நான் முழுக்குப் போட்டுவிட்டேன். காரணம், என்னை ராசியில்லாத நடிகை என்று தமிழ்ப்பட உலகில் கூறினார்கள்” என்கிறார் நடிகை வாணிஸ்ரீ.

## சுரதா கவிதை

பதரிருந் தாலும் செந்நெல் பயன்படும்!
பாசி இருப்பினும் தண்ணீர் பயன்படும்!
பொன்னையும் பயன்படும் பொருளையும் ஒருவன்,
வேண்டாத காரணம் கூறி வெறுப்பதோ,
தனது வளர்ச்சியைத் தானே தடுப்பதாம்!

வானவில் நடிகை வாணிஸ்ரீ என்பவர்,
தமிழ்ப்பட உலகின் தங்கத் தாரகை
எனினும் அவரோ “இனிநான் இந்தத்
தமிழ்ப்பட உலகில் தலைகாட்டப் போவதே
இல்லை” என்கிறார்! ஏனென்று கேட்டால்-

“நானோ ராசி இல்லாத நடிகையாம்!
நானொரு படத்தில் நடித்தால் அப்படம்
பப்பட மாகுமாம்! பயின்றிப் போகுமாம்!
அதனால் தமிழ்ப்பட அதிபர்கள் என்னைக்
கசக்கும் வேம்பெனக் கருது கின்றனர்!”
என்று சொல்கிறார். எனினும் இங்கே-
கழித்தல் நடிகையாய்க் கருதப் பட்டவர்,
தித்திக்கும் தெலுங்குத் திரைப்பட உலகில்,
கூட்டல் நடிகையாய்க் கொண்டாடப் படுகிறார்!

இங்கோ, ராசி இல்லாத நடிகை!
அங்கோ, இவர்தான் அதிர்ஷ்டநட் சத்திரம்!
இங்கே தளர்ச்சியாம்! அங்கே வளர்ச்சியாம்!

இனிப்பாய் இருந்தும் இங்கே கசந்தது;
தெலுங்கு நாட்டிலே தித்திக் கின்றது!

இனிக்கக் கூடிய கரும்பு கசக்குமா?
வாய்க் குற்றம் உடையோர்க்கு அன்றிக்
கணுவுள்ள கரும்பு கசப்ப தில்லையே!



இதழ் : 'ஆனந்தவிகடன்' - 21.8.1971

குருடர்கள் தேசிய சங்க நிதிக்காக எம்.ஜி.ஆர். தலைமையில் மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் ‘சிசுபாலன்’ நாடகம் நடந்தது.

விழா மலரை வாங்கியவர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு அதில் ஒருவருக்குப் பரிசு கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி சீட்டு குலுக்கப்பட்டது. சௌகார், அதிர்ஷ்ட நம்பரை எடுத்தார். அந்த அதிர்ஷ்ட நம்பர் யாருக்கு விழுந்தது தெரியுமா? திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்குத்தான்!

## சுரதாவின் கவிதை

பிறர்உதவி யின்றிப் பிழைக்க முடியாமல்
தவிக்கும் குருடர்கள் சங்கநிதிக் காகச்
சென்னையில் ஒருநாள், சிசுபாலன் என்னும்
நாடகம் எம்.ஜி.ஆர். தலைமையில் நடந்தது.
அந்த நாடகம் அன்று நடக்குமுன்
விழாமலர் முதலில் வெளியிடப்பட்டது.

உருவாக்கப் பட்ட ஒவ்வொரு மலரின்
மேலட்டை மீது மிகமிகத் தெளிவாய்
எழுதப் பட்ட எண்கள் இருந்தன.

அந்த எண்களில் அதிர்ஷ்டம் உடையஎண்
எதுவோ அதற்கு பரிசுஎண் டென்பதால்,
அரங்கத்தில் இருந்த அத்தனை பேரும்
வெளியிட்ட மலரை விரும்பி வாங்கினர்.

புகழ்பெற்று விளங்கும் பொன்மனச் செம்மல்தம்
தலைமை உரையில், கண்கெட்ட குருடரின்
நிலைமையை விளக்கி நெடுநேரம் பேசினார்.
“இந்த நிதிக்குநான் இருபத்தை யாயிரம்
தாரான மாகத் தருகிறேன்” என்று
கூறி முடித்துக் கும்பிட் டமர்ந்தார்.

முத்திரைப் பேச்சு முடிவுற்ற பின்னர்,
சங்கத் தலைவர் சபையிலே நின்று,
எண்கொண்ட மலர்கள் எத்தனை இருப்பினும்
ஒன்றுதான் பரிசுக் குரியதென் றுரைத்தார்.

அதன்பின்னர் சௌகார் ஜானகி அவர்கள்,
பரிசுச் சீட்டைப் பலமுறை குலுக்கி,
ஒரேஒரு சீட்டை உடனே எடுத்தார்.
எடுத்த சீட்டில் இருந்த எண்களே
எம்.ஜி.ஆர். வாங்கிய மலரிலும் இருந்ததால்
அந்தப் பரிசை அவர்தான் பெற்றார்!

அதுவாகத் தேடி வருவதே அதிர்ஷ்டமாம்!
அதிர்ஷ்டமில் லாதவர் வாழ்வே கஷ்டமாம்!
அது-இஷ்ட மாய்வரும் அதிர்ஷ்டம்
அவரைத் தேடித்தான் அன்றும் வந்தது!



இதழ் : ‘ஆனந்தவிகடன்’ - 28.8.1971

## கிரிக்கெட் வீரர்களுக்கு சுரதாவின் வாழ்த்துக் கவிதை!

வீரத்தில் சிலநாடு சிறந்து நிற்கும்;
வித்தையிலே சிலநாடு சிறந்து நிற்கும்;
சாரத்தில் சிலநாடு சிறந்து நிற்கும்;
சாத்திரத்தில் சிலநாடு சிறந்து நிற்கும்;
ஓரத்தில் ஒதுங்காமல், தகுதி யாலே
உலகத்தில் சிறந்துநிற்கும் இங்கி லாந்தோ,
வீரத்தி லும்சிறந்து, கிரிக்கெட் என்னும்
விளையாட்டி லும்சிறந்து விளங்கும் நாடு!

அந்நாட்டின் மூலந்தான் கிரிக்கெட் என்னும்
ஆட்டத்தை நாமெல்லாம் கற்றுக் கொண்டோம்.
எந்நாடும், விளையாட அங்கே செல்லும்
என்றாலும், இங்கிலாந்தே அதிகம் வெல்லும்!
தன்னோடு விளையாடும் வீரர்க் கெல்லாம்
தனித்தோல்வி கொடுத்துவந்த இங்கி லாந்தை,
இந்நாட்டார் வென்றிட்டார்! இந்த வெற்றி
இன்றுநாம் அவர் மண்ணில் பெற்ற வெற்றி!

வென்றவர்கள் வென்றுகொண்டே இருப்ப தில்லை!
வீழ்ந்தவர்கள் வீழ்ந்துகொண்டே இருப்ப தில்லை!
என்றென்றும் வெற்றி ஒரே பக்க மாக
இருந்ததெனும் வரலாற்றுக் குறிப்பு மில்லை!
சென்றதிங்கள் நம்மவர்கள், இங்கி லாந்தைத்
திணறடித்தார்; தோற்கடித்தார்; என்னும் செய்தி,
பன்மடங்கு மகிழ்ச்சிதரும் செய்தி யாகும்!
பாரதத்தின் புதுவெற்றிப் படல மாகும்!

இதுவரையில் நம்நாட்டின் கிரிக்கெட் வீரர்
இதுபோன்ற பெருவெற்றி பெற்ற தில்லை!
இதுவரையில் டில்லியிலே அமைச்சர் வட்டம்
இப்படியோர் வரவேற்பை அளித்த தில்லை!

நன்றாக விளையாடும் இங்கி லாந்து
நாட்டினரும் மற்றவரும் வியக்கும் வண்ணம்,
ஒன்றாக விளையாடி, கிரிக்கெட் மூலம்
உலகுபுகழ் பெற்றோரை வாழ்த்து கின்றோம்!
வென்றாரை வென்றிங்கே திரும்பி வந்த
வீரர்களைப் புதுப்பாட்டால் புகழு கின்றோம்!
அன்றாடம் இவர்வாழ்வு மேலோங் கட்டும்!
ஆடுகின்ற ஆட்டத்தில் புகழ்நீ வட்டும்!



இதழ் : 'ஆனந்தவிகடன்' - 4.9.1971

## பாடும் மொழியெல்லாம் பரமபொருளின் நாதமன்றோ?

வெள்ளத்தை ஆளுகின்ற உழவர் தம்மை,
'வெள்ளாளர்' என்பார்கள். அதுபோல், ஓடும்
உள்ளத்தை இறைவனிடம் ஒட்ட வைக்கும்
உத்தமனை உலகத்தார் ஞானி என்பார்.
தள்ளிவைக்க முடியாத உணர்ச்சி யாலே
தத்தளிக்கும் மாந்தரெலாம், பக்தி என்னும்
பள்ளியிலே பயின்றால்தான் வாழ்க்கைப் பாதை,
பக்குவமாய் அமையுமென்றும் சான்றோர் சொல்வர்.

எப்போது பார்த்தாலும் நமது நெஞ்சம்
எங்கெங்கோ அலைந்தபடி இருக்கும்! ஒன்றைத்
தப்பென்று நாமறிந்தும், வாழ வேண்டித்
தவறுபல செய்கின்றோம்! ஒவ்வொர் நாளும்,
கொப்பளிக்கும் ஆசைகளின் நடுவில் நின்று,
குற்றங்கள் பலபுரியும் நமதுள் ளத்தைச்
செப்பனிட்டுக் கொள்வதற்கும்; ஒளியின் பக்கம்
திரும்புதற்கும் தெய்வபக்தி தேவை என்பர்.

உடம்புக்குப் பெயரிடுவார் உண்டே யன்றி,
உயிருக்குப் பெயரிடுவார் யாரு மில்லை!
உடம்புக்குள் உயிராக, உயிருக் குள்ளே
ஒட்டியுற வாடுகின்ற ஆத்மா வாக,
இடம்பெற்று நமையெல்லாம் ஆட்டி வைக்கும்
இறைவனுக்குப் பெயரில்லை! எனினும் இங்கே,
படம்வைத்தும்; சிலைவைத்தும்; தெய்வ மாகப்
பாவித்தும் வழிபட்டும் வருகின் றார்கள்.

வழிபாடாம் அர்ச்சனைக்கு, வடநூல் கூறும்
மந்திரமே சிறந்ததெனக் கூறு கின்றார்.
பழிபாவம் அற்றதமிழ், ஆல யத்தில்
பயன்படுதல் ஆகாதா? இந்த நாட்டின்
மொழிப்பாடல் அத்தனையும் மந்தி ரத்தின்
மூச்சன்றோ? பரம்பொருளின் நாத மன்றோ?
அழியாத செந்தமிழ்நூல் குறிக்கும் பாட்டால்
அர்ச்சித்தால் கடவுள்நமைக் கோபிப் பாரா?

எம்மொழியைத் தாய்மொழியென் றழைக்கின் றேமோ;
எம்மொழியில் நாம்கனவு காண்கின் றோமோ;
அம்மொழியும் வழிபாட்டுக் குரிய தாகும்!
அப்பாட்டும் ஆண்டவனுக் கேற்ற தாகும்!
சம்பந்தர், அபிராமி பட்ட ரெல்லாம்
தமிழில்தான் பூசித்தார். மழைபெய் யுங்கால்,
இம்மென்னும் ஓசைவரும் என்று சொல்வர்!
இறைவனையும் அவ்வோசை மயக்கிற் றென்பர்!

பிறைநிலவின் மொழிபெயர்ப்பே, யானைத் தந்தம்;
பெற்றோரின் மொழிபெயர்ப்பே, குழந்தை யாகும்;
வறுமையதன் மொழிபெயர்ப்பே, ஏழை மக்கள்;
வானத்தின் மொழிபெயர்ப்பே, பெண்ணின் பார்வை;
கறையிருளின் மொழிபெயர்ப்பே, தீயோர் உள்ளம்;
கருங்கல்லின் மொழிபெயர்ப்பே, சிலை களாகும்;
மறைநான்கின் மொழிபெயர்ப்பே, பெரியோர் வாக்கு;
மந்திரத்தின் மொழிபெயர்ப்பே, அப்பர் பாடல்!

திருமூலர் பாடியுள்ள மந்தி ரத்தைத்
தெய்வத்தின் சந்நிதியில் பாடும் போதில்,
இருகாத தூரத்தில் நாமெல் லோரும்
இருந்தாலும் கொண்டுவந்து சேர்த்தி டாதா?
கருவூரார் இசைப்பாவைப் பாடக் கேட்டால்,
கல்நெஞ்சம் கரையாதா? தமிழில் உள்ள,
சரிபாதி பாடல்களோ பக்திப் பாடல்!
தமிழ்க்கடவுள் தலையசைத்துக் கேட்ட பாடல்!

இதழ் : 'ஆனந்தவிகடன்' - 11.9.1971

## வரம் பெறவே இங்கழைத்து வந்தேன் கண்ணே!

தக்கோலம் எனும்நகரில் புலிபோல் பாய்ந்து,
    சமர்செய்து, பழித்தோரைக் கிழித்துக் கொன்று,
கொக்கூரைக் குருகூரைச் சூறை யாடிக்
    குடைமரமாம் ஆலமரம் அடர்ந்த காட்டில்
எக்காள மிட்டபடி குதிரை வீரர்
    எல்லாரும் தீப்பந்தம் ஏந்திக் கொண்டு
வைக்காவூர் வழிநோக்கி விரைந்து சென்றார்.
    வாள்வீரன் செங்கண்ணான் முன்னே சென்றான்.

நெல்லூரில் ஓரிரண்டு நாட்கள், அந்த
    நெருப்புவிழி வீரரெலாம் தங்க லானார்.
செல்லூரில் தேரோட்டம் பார்த்து விட்டுத்
    திரும்பிவந்து கொண்டிருந்தாள் குமுத வல்லி.
கல்வீரன் கண்களினால் கோடு போட்டான்.
    கட்டழகி கால்விரலால் கோடு போட்டாள்.
வில்லாடும் புருவத்தால் சொக்க வைத்தாள்!
    விக்கலுக்கு நீர்கேட்டுச் சிக்க வைத்தான்!

நீர்தந்தாள். அழகியிடம் நெஞ்சம் தந்தான்.
    நெஞ்சத்தை அவன்தரவே அவளும் தந்தாள்.
தேர்தந்த வீதியிலே வாழும் பெண்ணே!
    செங்கனிகள் தருவாயோ? என்று கேட்டான்.
ஊர்தந்த தோட்டத்தின் கனியை, நெஞ்சில்
    உறவுகொண்டோர்க் கில்லையென்றா சொல்வேன் என்றாள்.
கார்தந்த கருங்கூந்தல் மங்கை மீது,
    கண்வைத்த செங்கண்ணான் கையை வைத்தான்.

குதிலரயின்மேல் குமுதாவைக் தூக்கி வைத்தான்.
குயில்மங்கை அன்னவனை அணைத்துக் கொண்டாள்;
எதுவரையில் நம்பயணம்? என்று கேட்டாள்.
ஏந்திழையே! குதிரையைக்கேள் என்றான் வீரன்.
மதுநிறைந்த குடமுடைந்து விடுமோ? என்றான்.
மண்குடமோ மங்கையரின் குடங்கள்! என்றான்.
எதிர்வெயிலின் கோபத்தைப் பாராய்! என்றான்.
எழிலரசி முன்றானைப் பந்த லிட்டாள்.

சுரந்திருந்த மணற்கேணி யருகே, அந்தச்
சுந்தரனும் சுந்தரியும் இறங்க லானார்.
வரந்தரவா இங்கழைத்து வந்தீர்! என்றாள்.
வரம்பெறவே இங்கழைத்து வந்தேன் கண்ணே!
விருந்தமிழ்தம் இனிவேண்டேன்; உன்னை யன்றி
வேறெதையும் யான்வேண்டேன்; என்று கூறி,
மருந்துமலை போன்றவளைத் தொட்டான். செவ்வாய்
மலரிட்டான். நல்லுடையை தழுவ விட்டாள்.

முத்துடுத்த வானத்தில் முகத்தைக் காட்டும்
மூத்தநிலா வெளிச்சத்தில்; குமுதம் என்னும்
சித்திரத்தை முத்தமிட்டான். தேனில் தேனை
சேர்ப்பதுபோல் மலர்மாதும் இதழைச் சேர்த்தாள்.
ஒத்திகையை உருவாக்கி, ஒதுங்கி நின்ற
உணர்ச்சிகளை ஒன்றாக்கி, இமையில் ஏறும்
நித்திரையை நில்லென்று தடுத்து, மேனி
நிழலிரண்டை ஒன்றாக்கிக் கொண்டி ருந்தார்;

சத்தென்றால், உள்ளதென்று பொருளாம்; உன்னைத்
தழுவியபின் நானதனைத் தெரிந்து கொண்டேன்.
சித்தென்றால், தன்னைத்தான் அறிவ தென்பர்;
தினையளவே நானென்னை அறிவேன்; சிப்பி
முத்துக்கும் ஒளிவழங்கும் முத்தே! என்றன்
மூச்சாக இருப்பவளே! முல்லைப் பூவே!
சத்தத்தில் புவிபிறந்த தென்பர்; கட்டித்
தங்கத்தில் நீபிறந்தாய்! அதுவே உன்தாய்!

ஏடறிந்த கொக்கோ விளக்க மெல்லாம்
　　இன்றேயான் உன்னிடத்தில் அறிந்து கொண்டேன்.
கூடறிந்த குயிலேகேள்! நிலவின் கொம்பு
　　கூடட்டும்! ஓடட்டும் பத்து நாட்கள்!
நாடறிந்த மணமேடை மங்கை யாக
　　நானுன்னை ஏற்கின்றேன் என்று கூறிச்
சூடறிந்த பகல்மாற்றும் இரவில், வீரன்
　　தும்மலெனப் பறந்திட்டான் சித்தூர் நோக்கி!



இதழ் : 'ஆனந்தவிகடன்' - 18.9.1971

## பூக்காடு தந்தவரே!

பூக்காடு தந்தவரே! கவிதைக் காகப்
புதுப்பரிசு பெற்றவரே சமுதா யத்தை
நோக்காட்டில் தள்ளுகின்ற பழைமை தன்னை
நொறுக்கிவரும் தஞ்சாவூர்க் கவியே! இங்கே,
நீர்க்குடங்கள் நடுவினிலே வைக்கப் பெற்ற
நெய்க்குடத்தைப் போன்றவரே! உம்மை நாங்கள்
வேர்ப்பலாவின் சுவையென்றே கருது கின்றோம்!
மேலான தமிழால்பா ராட்டு கின்றோம்!

பகுதியெலாம் சொற்களுக்குத் தலைமை தாங்கும்;
பழங்களெலாம் விதைகளுக்குத் தலைமை தாங்கும்;
தகுதியெலாம் திறமைக்குத் தலைமை தாங்கும்;
தந்தங்கள் பற்களுக்குத் தலைமை தாங்கும்;
மிகுதியெலாம் நீரானால், கடலாய்த் தோன்றும்
மிச்சமெலாம் அறிவானால், புகழாய்த் தோன்றும்;
விகுதியென நிற்காமல் பகுதி போன்று
விளங்குகின்றீர் ஆதலினால் போற்று கின்றோம்!

ஆவியெங்கோ செல்லுமென்று சொல்லுகின்றார்;
அதைநாங்கள் நம்பவில்லை! ஆனால், நல்ல
காவியங்கள் நாடுவிட்டு நாடு செல்லும்
கவிவாணர் பெரும்புகழும் உலகம் சுற்றும்!
ஆவியினும் மிகச்சிறந்த தமிழில், தாங்கள்
அரியதொரு நூல்தந்தீர்! தாங்கள் தந்த
காவியமாம் பூக்காடு வழங்கு கின்ற
கடிமணமும் இவ்வுலகம் தன்னைச் சுற்றும்!

சிலர்சிலரை வேண்டுமென்றே தூற்று வார்கள்;
சிலர்சிலரை வேண்டுமென்றே போற்று வார்கள்!
சிலர்சிலரைத் தூற்றுவதோ பொறாமை நோக்காம்!
சிலர்சிலரைப் போற்றுவதோ வணிக நோக்காம்!
மலர்மலர நெருங்குவது குற்ற மன்று!
வான்மழையைப் பயிர்வாழ்த்தல் குற்ற மன்று!
கலந்தபுகழ் பெற்றவரே! உம்மை நாங்கள்
கவியரசர் என்பதனால் போற்று கின்றோம்.



---

கவிஞர் ஆனந்தம் அவர்கள் 1966-ஆம் ஆண்டிற்கான கவிதைக்குரிய பரிசைப் 'பூக்காடு' என்னும் நூலுக்குப் பெற்றமை குறித்து 1.6.1971ஆம் நாளன்று ஹோட்டல் கீதாவில் அன்பு நண்பர்கள் அளித்த விருந்தின் போது பாராட்டியளித்த பாட்டிதழ்.

இதழ் : 'தென்னகம்' - 1.10.1971

# தீபாவளிக் கவிதை

ஆடியில்நான் ஆளானேன்; என்னைத் தேடி
ஆவணியில் அவர்வந்தார். அந்நே ரத்தில்,
மாடியிலே யாருமில்லை! அங்கே சென்று
மன்மதநா டகம்நடத்திக் கொண்டி ருந்தோம்.
மேடுபள்ளம் பாத்தமட்டும் போது மென்று
மெத்தைவிட்டு நானெழுந்தேன். கிளிஞ்சல் மீது
கோடிமுறை மழைபெயினும் கரையா தென்றார்.
கொடுக்கும்முத்தத் தாலுதடும் கரையா தென்றேன்.

வேலிகட்டும் நீதிகளை மதத்தை யெல்லாம்
வேம்பாக நினைப்பவளே! இதுநாள் மட்டும்,
மூலிகையால் தீராத வெப்பம், உன்றன்
முத்தத்தால் தீருமென உணர்ந்தேன் என்றார்.
வாலிபத்தின் அவசரந்தான் காமம்! இந்த
வயதில்சல் லாபந்தான் லாபம்! என்றேன்.
ஆலயத்தில் அபிஷேகம் செய்வோம் என்றார்.
ஐப்பசிதீ பாவளிபோய் விடட்டும் என்றேன்.

இதழ் : 'வாலிபம்' - 1.11.1972

# அத்திப்பூ

ஆயனூர் என்னூர், என்பேர்
அத்திப்பூ, நானோர் மாம்பூ,
காயிலே இரண்டும் கோவைக்
கனியிலே இரண்டும் தந்து
பாயிலே படுக்கும் போது
பதமாகப் பேசிக் கொண்டே
வாயினால் முத்தம் தந்து
வரவேற்கும் பருவப் பெண்நான்!

என்கொண்டை கூடைக் கொண்டை!
என்தொண்டை குயிலின் தொண்டை!
பொன்வண்டு குழலில் மொய்க்கும்;
பொய்த்தேமல் உடம்பில் மொய்க்கும்;
என்கெண்டைக் கண்கள் இன்றும்
யார்மீதும் மொய்த்த தில்லை!
தின்பண்ட உதட்டை இன்னும்
சிவப்பேற விட்ட தில்லை!

கூந்தலை அவிழ்த்து விட்டால்
குதிகாலில் வந்து விழும்!
பாய்ந்துநான் நீந்தும் போது
பாவாடை கட்டிக் கொள்வேன்!
காந்தளைக் காணா தார்என்
கைவிரல் பார்த்தால் போதும்!
மாந்தளிர் போன்ற என்னை
மணப்பவர் எங்குள் ளாரோ?

இதழ் : 'பருவமங்கை' - 1.6.1975

# சாரதா தந்த சுவைத் தேன் வாழ்த்து!

வற்றாத புகழ்க்குரிய திறமை பெற்ற
வலம்புரிஜான் அவர்கட்கு வணக்கம். தங்கள்
சொற்பொழிவை நான்விரும்பிக் கேட்ப துண்டு;
சுவைமிகுந்த கட்டுரையைப் படிப்ப துண்டு;
தற்சமயம் புதுநூலொன் றெழுது கின்றேன்
தாங்களொரு திங்களிதழ் தொடங்கு கின்றீர்.
வெற்றிதரும் சிந்தனைகள் தங்கள் ஏட்டில்
விளையாடும் என்றேநான் எண்ணு கின்றேன்.

தத்துவங்கள் இப்போது தேவை யில்லை.
சபதந்தான் நமக்கிங்கு மிகவும் தேவை.
எத்தனையோ பத்திரிகை வெளிவந் தாலும்
இப்போது தங்களது 'சபதம்' என்னும்
பத்திரிகை வெளிவருதல் மூல மாகப்
பயன்விளையும் என்றேநான் கருது கின்றேன்.
வித்துநல்ல வித்தாக இருக்கும் போது
விளையாமல் போய்விடுமா? விளையு மன்றோ!

இங்கிலாந்து விஞ்ஞானி வில்யம் ஹார்வி
ஏப்ரல்முதல் தேதியன்று பிறந்தாற் போலத்
தங்களது திங்களிதழ் ஏப்ரல் ஒன்றில்
தமிழகத்தில் வரவிருக்கும் செய்தி கேட்டுப்
பொங்கல்விழா வந்ததுபோல் பூரிக் கின்றேன்!
பூரித்துப் பூரித்து மகிழு கின்றேன்!
தங்களது முயற்சியைப்பா ராட்டு கின்றேன்!
சபதமென்றும் வெற்றிபெற வாழ்த்து கின்றேன்!

இதழ் : 'சபதம்' - 1.4.1976

## முடிசார்ந்த மன்னா வாழ்க! முத்தமிழ் போன்று வாழ்க!

பள்ளமும் மேடும்; நீண்டு
படுத்துள்ள மலையும், ஆற்றின்
வெள்ளமும் சூழ்ந்த நாடு
மேலான நாடென் றாலும்,
தள்ளாத விளைவும், போற்றத்
தக்கதாகும், தாழ்வில் லாத
செல்வரும் உடைய நாடே!
வையத்திற் சிறந்த நாடாம்.

மலைநாடு சிறந்த செல்வம்
மலிந்துள்ள நாடு, சான்றோர்
பலர்சூழ்ந்த நல்ல நாடு,
பஞ்சமே வராத நாடு,
தலைமுறை தன்னைக் காட்டித்
தனிப்புகழ் பெற்ற நாடு
கலைவளம் மிக்க நாடு,
கவிஞரைப் போற்றும் நாடு.

இத்தகு நாட்டை ஆளும்
ஏந்தலே! வாழ்க்கை என்னும்
தத்துவம் நன்கு ணர்ந்த
தலைவனே! மலைய நாட்டின்
முத்திரைப் பொன்னே! மக்கள்
முதல்வனே! உலக மெங்கும்
ஒத்திகை பார்க்கச் செல்லும்
ஓங்கிய புகழ்பெற் றோனே!

சிறந்தநாள் திருநா ளாகும்
தேசத்தை ஆளும் தங்கள்
பிறந்தநாள் மாந்தர்க் கெல்லாம்
பெருமைசேர் நன்னா ளாகும்
அறஞ்செயும் மலைய நாட்டின்
ஆணிவேர் போன்ற மன்னா!
பிறையென நினது வாழ்நாள்
பெரிதாகி வளர்வ தாக!

கொடிசார்ந்த கோட்டை தன்னில்
கோலோச்சும் மன்னர் மன்னா!
படிசார்ந்து வாழும் மக்கள்
பாராட்ட, இங்கே தங்கள்
அடிசார்ந்து வாழும் மக்கள்
அனைவரின் நலத்தைக் காக்கும்
முடிசார்ந்த மன்னா வாழ்க!
முத்தமிழ் போன்று வாழ்க!

இதழ் : 'தமிழ்மலர்' (மலேசியா, கோலாலம்பூர்) - 10.6.1979

# நம்பலாமா?

மலையென்று பெயரிட்ட நமது முன்னோர்,
மாமலையைக் கண்டென்றும் மலைத்த தில்லை!
இலையென்று பெயரிட்ட முன்னோர், வந்தோர்க்
கிலையென்று சொன்னதிலை! அந்த நாளில்,
புலியொன்று தாக்கவரின், அதனைப் பெண்கள்
போவென்று முறத்தாலே விரட்டி வந்தார்.
எலியொன்று வந்தாலும் ஓடு கின்றார்
இக்காலத் தில்வாழும் நமது பெண்கள்!

வீரமின்றி விவேகமின்றி வாழு கின்றார்.
வெறுங்கவர்ச்சிக் காட்பட்டு மயங்கு கின்றார்.
நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டி ருக்கும்
நிசப்புலியைப் பசுவென்று நம்பு கின்றார்.
ஓரத்தில் வந்துநிற்கும் புலியின், சைவ
உபதேசத் தைப்பெண்கள் நம்ப லாமா?
வீரத்தால் நிமிர்ந்தெழுந்தே அதனைப் பெண்கள்
வீழ்த்தாமல் அதன்கையில் வீழ லாமா?

இதழ் : 'முரசொலி' - பொங்கல் மலர் - 1980



என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை!